
விலை ரூபா: 14.00 பக்கங்கள்:-(16+8) Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

திருமணப் பட்டுப்
புடைவைகளின் கைராசியான
ஸ்தாபனம்
ரவி அன் ராஜ்
சில்க்ஸ்
77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 021-2469

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 03 திங்கட்கிழமை (17.06.2002) தொலைபேசி 3378 ஒலி 180



வலம்புரிக் காரியாலயத்திற்கு நேற்று வருகை தந்த ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பாராளுமன்ற விவகார அமைச்சர் அஸ்வர் மற்றும் அமைச்சு அதிகாரிகள் பத்திரிகையாளர்கள் ஆகியோரை செய்தி ஆசிரியர் எம்.வாமதேவன் வரவேற்பதையும் அமைச்சர்கள் வலம்புரிப் பத்திரிகையைப் பார்வையிடுவதையும் நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சர்கள் இருவரும் உரையாற்றுவதையும் அருகில் நிறுவன இயக்குனர் எஸ். வெற்றிவேலாயுதம், நிர்வாக உத்தியோகத்தர் என்.சண்முகானந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

### அரசின் சமாதான முயற்சிக்கு ஆதரவு

# புலிகள் மீதான தடைநீக்கப்படுவதாயின் மக்கள் ஆணையைப் பெறவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கருத்து

(நமது நிருபர்)

**ஐக்கிய தேசிய முன்னணி அரசு தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதாக இருந்தால் அதற்கு அனைத்து மக்களினதும் ஆணை பெறப்படவேண்டும் என்று பாராளுமன்ற எதிர்க்கட்சித்தலைவர் மகிந்தராஜபக்ஷ நேற்றுக் கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதற்கு முன்னர் பொது வேண்டும். பொதுமக்களின் அபிப்பிராயம் பெறப்படாமல் புலிகள் மீதான தடைநீக்கப்படக்கூடாது.

அரசு தற்போது மேற்கொண்டு வரும் சமாதான முயற்சியை நாம் ஆதரித்து வருகிறோம். அதே நேரம் புலிகள் மீதான தடை நீக்கம் டன் செயற்பட்டுவருகிறோம். இந்நிலையில் அரசும் விடுதலைப்புலிகளும் சமாதான முயற்சியில் ஈடுபட்டு வருவதை நாம் ஒரு போதும் அதனை குழப்பி அடிக்க மாட்டோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷ மேலும் தெரிவித்து

## சேதமுற்ற முஸ்லிம் பகுதியை அமைச்சர்கள் சுற்றிப் பார்த்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்திருந்த ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ஏ.எச். எம். அஸ்வர் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதிகளைச் சுற்றிப்பார்வை இட்டனர்.

அமைச்சருடன் அவரது செயலாளர், பிரதமரின் ஆலோசகர், அலி சாஹுல் மௌலானா அரச அதிபர் க. சண்முகநாதன் மற்றும் உயர் அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

முஸ்லிம் பகுதியில் உடைந்த பள்ளிவாசல்கள், கதீஜா மகாவித்தியாலயம், ஒஸ்மா பள்ளிவாசல் பொம்மை வெளி குடியேற்றத்திட்டம், மற்றும் இடிந்த குடியிருப்புக்கள் ஆகியவற்றையும் அவர்கள் சுற்றிப் பார்வையிட்டனர். குடியிருப்புக்கள்

(08ம் பக்கம் பார்க்க)

தமிழ்ழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதற்கு முன்னர் பொது மக்களின் அபிப்பிராயத்தை பெற வேண்டும். பொதுமக்களின் அபிப் பிராயம் பெறப்படாமல் புலிகள் மீதான தடைநீக்கப்படக்கூடாது.

அரசு தற்போது மேற்கொண்டு வரும் சமாதான முயற்சியை நாம் ஆதரித்து வருகிறோம். அதே நேரம் புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து நாம் தீர்க்கமான முடிவுகளு

லையில் அரசும் விடுதலைப்புலிக ளும் சமாதான முயற்சியில் ஈடுபட்டு வருவதை நாம் ஒரு போதும் அதனை குழப்பி அடிக்க மாட்டோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷி மேலும் தெரிவித்து ள்ளார். (வ)

விவகாரத்துறை அமைச்சர் ஏ.எச். எம். அஸ்வர் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதிகளைச் சுற்றிப்பார்வை இட்ட னர்.

அமைச்சருடன் அவரது செய லாளர், பிரதமரின் ஆலோசகர், அலி

பள்ளிவாசல்கள், கதீஜா மகா வித் தியாலயம், ஒஸ்மா பள்ளிவாசல் பொம்மை வெளி குடியேற்றத்திட் டம், மற்றும் இடிந்த குடியிருப்புக் கள் ஆகியவற்றையும் அவர்கள் சுற் றிப் பார்வையிட்டனர். குடியிருப்புக்கள்

(08ம் பக்கம் பார்க்க)

# தீவுப் பகுதிகளுக்கு இன்று புலிகள் செல்வர் வரவேற்பளிக்க மக்கள் ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ் தீவகற்பத்தின் தீவுப்பகுதிக ளில் அரசியல் பணிகளை மேற் கொள்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 30 பேர் தீவகக் கோட்டப் பொறுப்பாளர் செம்மணனின் தலைமையில் இன்று காலை தீவுப்பகுதிக்குச் செல் லவுள்ளனர்.

தீவுப்பகுதிக்கு விடுதலைப் புலி கள் செல்லும் போது அங்கு அவர் களுக்கு மகத்தான வரவேற்பு அளிப்பதற்கு தீவுப்பகுதி மக்கள் தயாராகி உள்ளனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிக ளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் விதி முறைகளுக்கு அமைவாக தீவுப பகுதிகளில் விடுதலைப் புலிகள் தமது அரசியல் பணிகளை மேற் கொள்ளகடந்த காலத்தில் அனுமதிக்கப் படாததை அடுத்து சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது. அல்லைப்பிட்டி ஊடாக தீவுப் பகுதிக்குச் சென்ற விடு தலைப் புலிகளை படையினர் திருப்பியனுப்பியதை அடுத்து வரவேற பளிப்பதற்காக காத்திருந்த மக்கள் ஏமாற்றம் அடைந்து திரும்பிச் சென்றனர். இதனை அடுத்து வடபிராந்திய கடற்படைத் தளபதி தீவுப்பகுதியைப பாதுகாப்பு வலயம் என அறிவித்திருந்தார்.

(08ம் பக்கம் பார்க்க)

# வடமராட்சியில் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் திறப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் மாலு சந்திக்கு அண்மையில் புதிய தொலைபேசிப் பரிவர்த்தனை நிலை யம் ஒன்றை ஊடகத்துறை அமைச் சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நேற்று நண்பகல் திறந்து வைத் தார்.

இவ் வைபவத்தில் பாரளுமன்ற விவகார அமைச்சர் ஏ. எச். எம். அஸ் வர் அமைச்சின் செயலாளர் குமார் அமரசிங்க பிரதமரின் ஆலோசகர் அலிஸாகீர் மௌலானா, யாழ் மாவட்ட எம்.பி.என். கே. சிவாஜிலிங கம், மற்றும் தபால் திணைக்கள அதிகாரிகள், யாழ் ரெலிகொம் அதி காரிகள் எஸ். கனகசூரியர், எஸ். அன்ரன் ராஜ், எஸ். தங்கராஜ் ஆகி யோர் உட்பட பலர் கலந்துகொண் டனர்.

புதிதாக ஆரம்பித்துவைக்கப்பட்ட

(08ம் பக்கம் பார்க்க)

# மடுத்திருப்பதிக்கு செல்ல வசதியாக உயிலங்குளம் பாதையைத் திறந்து விடவும்

## மன்னார் ஆயர் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மடு மாதா ஆலயஉற் சவங்களை முன்னிட்டு மன்னார் வவுனியாப் பாதை ஊடாகச் செல் வதற்கு வசதியாக பாதையைத் திறந்து விடுமாறு மன்னார் ஆயர் அதிவண இராயப்பு யோசப் பாதுகாப்புப் படை யினரிடமும் விடுதலைப்புலிகளிட மும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கோரிக்கையில் மேலும் தெரி வித்திருப்பதாவது:-

மடுமாதா ஆலய உற்சவத்திற்கு செல்வதற்கு வசதியாக ஏற்கனவே மூடப்பட்ட பிரமணாளங்குளம் வீதி யைப் போக்குவரத்திற்குத் திறந்து விடப்படவேண்டும் என்றும் கேட்டுள் ளார்.

பயணிகளும் பக்தர்களும் மடு வுக்குச் செல்வதற்கு உயிலங்கு ளம் பாதையூடாக தற்போது சுற்றிச் செல்லவேண்டியுள்ளது. இதனால் பயணிகளுக்கு ஏற்படும் கஷ்டங்க ளைப் போக்கவே பிரமணாளங்கு ளம் ஊடான பாதையைத் திறந்து விடுமாறும் கோரிக்கை விடப்பட்டுள் ளது. (ம)

# அமைச்சர் இம்தியாஸ் மாநகரசபைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஊடகத்துறை அமைச்சர் இம்தி யாஸ் பாக்கீர் மாக்கார் நேற்றுப் பிற்பகல் 5மணிக்கு யாழ் மாநகர சபைக்கு விஜயம் செய்திருந்தார்.

அமைச்சருடன் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ் வர் அமைச்சின் செயலாளர் குமார் அமரசிங்கா பிரதமரின் ஆலோசகர் அலிசாகிர் மௌலானா ஆகியோ ரும் சென்றிருந்தனர்.

யாழ் மாநகர முதல்வர் செ கந் தையன் ஆணையாளர் எஸ. [illegible] லிங்கம் மற்றும் மாநகரசபை [illegible] காரிகள் ஊழியர்கள் அ[illegible] களை வரவேற்றனர்.

அமைச்சர்கள் இந்த விஜயத்தின் போது யாழ் மாநகரசபையின் தேவை கள் தொடர்பாக மேயர் செ கந்தை யன் அவர்களிடம் கே[illegible]ந்து கொண்டனர்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### விற்பனையாகிறது

ஆரம்ப மொழி (தமிழ், சிங்களம், ஆங்கிலம்)- ரூ80. 00, தமிழ், சிங்கள அரிச்சுவடி- ரூ20. 00 எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும். விற்பனையாளர்; ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C– 4435)

### விற்பனையாகிறது

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் தரம்10, 11 பாகம் I) அ. சிவநேசராஜா. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். விற்பனையாளர்: ஸ்ரீலங்கா புத்தகசாலை 234, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(C4434)

### வாடகைக்கு

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அல்லது கொக்குவில் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. வைத்திருப்போர் இல. 9, றக்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(C– 4437)

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக் கட்டுரைகள் 50

மொழிவிருத்தி, சிறுவர் பாடல், சாயி கல்வி வட்ட வெளியீடு எழுதியவர் கே.வி. குணசேகரம். விபரங்கட்கு: ஹரிஹரன் பிரின்ரேர்ஸ், 224, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன் 2717

(5443)

### வியாழ மாற்றம்

30- 6- 2002ல் நிகழும் வியாழமாற்றப்பலா பலன்கள் விற்பனையாகின்றன. மற்றும் சகல போட்டிப் பரீட்சைகளுக்கும் ''பொதுஉளச்சார்பு (நுண்ணறிவு), மொழித்திறன், அழகியல் (தரம் 1-5 வரை): ஆங்கிலத்தில்கட்டுரைகள், பொதுஅறிவு:-V A சிவராசா வெளியிட்டது என்று மறக்காது வாங்குங்கள்.

(5447)


## 7 கிளர்ச்சியாளர் நேபாளத்தில் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோ கிளர்ச்சியாளர்களிற்கும் இராணுவத்துக்கும் இடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் 7 மாவோ கிளர்ச்சியாளர்கள் பலியாகியுள்ளனர். (க-8)


யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்

**இரண்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி மாபெரும் கல்வியியல் கண்காட்சியும் சாகச நிகழ்வும்**

தலைவர்: கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள்
(பீடாதிபதி - யாழ். தேசிய, கல்வியியற் கல்லூரி)
இடம்: கல்லூரி மைதானம்
திகதி: யூன் 17, 18, 19, 20
பிரதம விருந்தினர்:
திரு. நல்லையா சுப்பிரமணியம் அவர்கள்
(அதிபர் யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்)

இன்று காலை 8-30 மணிக்கு பிரதம விருந்தினர் அவர்களால் கண்காட்சி திறந்து வைக்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தினர்

(5451)


# ஊரெழுப்பகுதி இருளில் பொதுமக்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

ஊரெழுப்பகுதி இரவுவேளைகளில் தொடர்ச்சியாக மின்சாரம்இன்றி இருளில் மூழ்குவதாக அப்பகுதிமக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயம் குறித்து சம்பந்தப்பட்ட சபைக்கு பலதடவைகள் முறையிட்டும் கூட எதுவிதபயனும் ஏற்படவில்லை யெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உரும்பிராய் பகுதிக்கு தொடர்ச்சியாக மின்சாரம் ஒழுங்கானமுறையில் வழங்கப்படுகிறது.

இவ்வாறு இடத்திற்கிடம் வேறுபாடு காட்டப்படுவது மின்பாவனையாளர் மத்தியில்பலத்த மனவேதனையை ஏற்படுத்துவதாகவும் மின் விநியோகத்தை சீரானமுறையில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளையில் நவீனரக ஜெனரேற்றர்கள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டதை அடுத்து யாழ்குடாநாட்டிற்கு 24மணிநேரமும் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவித்தல் விடுக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

## இராசி பலன்

17.6.2002
(ஆனி3 திங்கள்)
ஸப்தமி மு.இ7·16வரை
பூரம் மு.இ8·03வரை
இராகுகாலம் 7.23-8.53
நல்லநேரம் 11.35-1.23

**மேடம்**
தொழில்லாபம், அதிகாரிகள் மனஸ்தாபம், குடும்பக் கவலை, தெய்வசிந்தை

**இடபம்**
நினைத்தகாரியம் கைகூடும் கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், போசனசுகம்

**மிதுனம்**
பெரியோர்ஆதரவு, தனவிரயம், உடல்வியாதி, பகைவரால்நன்மை

**கடகம்**
பிரயாணம், கூட்டுமுயற்சி மாதர்நட்பு, பணவிரயம்

**சிங்கம்**
தொழில்கஷ்டம், அதிகபிரயாசை, காரியத்தடங்கல், அந்நியர்உதவி

**கன்னி**
விரும்பாதஉறவு, சென்ற இடத்தில்சிறப்பு, உடல் வியாதி, பணவருகை

**துலாம்**
இலட்சுமிகரம், சுவாரஸ்யம் வீண்பிரச்சினை, நண்பர்கள் உதவி

**விருச்சிகம்**
கற்பனைமிகுதி, போசன சுகம், மாதர்சிந்தை, புதிய தொழில்முயற்சி

**தனுசு**
காரியஅலைச்சல், குடும்ப சுகம், மனச்சோர்வு, வீண் கற்பனை

**மகரம**
அதிகபிரயாசை, அந்நியர் உதவி, புத்திரரால்மகிழ்ச்சி

**கும்பம்**
இனசனக் கொண்டாட்டம் காரியசித்தி, தூரதேசபயணம்

**மீனம்**
விருந்தினர்வருகை, மனக் கிலேசம், ரோகபயம், கூட்டு முயற்சி

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# கிளிநொச்சியில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூட்டை பரிசோதிக்க உத்தரவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் மீட்கப்பட்ட மனித எலும்புக் கூட்டுத் தொகுதியை பரிசோதனைக்கு உட்படுத்தும் முகமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைபிரேத பரிசோதனை நிலையத்தில் சேர்ப்பிக்குமாறு கிளிநொச்சி திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே. வி.கே திருலோகமூர்த்தி பணித்துள்ளார்.

கடந்தமாதம் 11ம் திகதி கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க வளாகத்திற்கு பின்புறமாக உள்ள காணியில் மிதிவெடிகள், வெடி பொருட்கள் அகற்றும் வேலையில் ஈடுபட்டிருந்தவேளை மனிதஎலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன

இம்மனித எலும்புக் கூட்டுடன் ஆண்கள் பெண்களுக்கான உடைகளும் மீட்கப்பட்டன. இது தொடர்பாக கிளிநொச்சி காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

1996ல் இராணுவம் கிளிநொச்சியில் நிலைகொண்டிருந்த காலத்தில் வீடுகளை பார்வையிட சென்றபலபொதுமக்கள் காணாமல் போயிருந்தனர் இவர்களது மனித எலும்புக்கூடுகளாக இதுஇருக்கலாமென அஞ்சப்படுகிறது

ஏற்கனவே கிளிநொச்சியில் உதயநகர், கனகபுரம், உருத்திரபுரம், பரந்தன் முரசுமோட்டை, திருநகர், தொண்டமான்நகர், 6ஆம் வாய்க்கால், 5ஆம் வாய்க்கால் முதலானபகுதிகளில் மனிதஎலும்புக்கூடுகள் தமிழீழ காவல்துறையினரால் மீட்கப்பட்டது தெரிந்ததே

இவற்றில் சில பொதுமக்களால் ஆடை அணிகளைக் கொண்டு அடையாளம் காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (க)

# யாழ். வரும்போது துக்ககரமான பாலைவனகுடியிருப்புகளைகண்டோம்

## அமைச்சர் இம்தியாஸ் கவலை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாங்கள் யாழ்ப்பாணம் வரும் போது மிகவும் துக்ககரமான பாலைவன குடியிருப்புக்களையே கண்டோம்.

பிரபாகரனுக்கும் ரணிலுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வுஉடன்படிக்கையின் பிரகாரம்மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர். தற்பொழுது இங்கு சுதந்திர தன்மை காணப்படுகின்றது.

இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ்பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

வலம்புரி பத்திரிகை காரியாலயத்துக்கு வருகை தந்த அமைச்சர் அங்கு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் பேசுகையில்: வடக்குக்கும் தெற்கிற்குக்கும் இடையே ஒரு புரிந்துணர்வான பங்கு ஏற்பட்டுள்ளது. இது ஒரு தற்காலிகமானதாகவன்றி நிரந்தரமானதாக ஆக்க வேண்டும்.

கடந்தகாலத்தில் நடைபெற்றது சரியென்று யாராலும்கூறமுடியாதுநாங்கள்இப்போது இன்றையநாளைப் பற்றி சிந்திக்கவேண்டும்.

30ஆண்டுகளாக பேச்சுக்கள்பேசியும் யுத்தங்கள் புரிந்தும் நல்லநிலையைநாம்காணவில்லை நிறைய நாங்கள் இழந்துவிட்டோம்.

நாங்கள்யாரும் வெற்றி அடையாததினாலும் அனைவரும்தோல்வி அடைந்ததினாலும் நாங்கள்வெற்றி அடையும் நிலையைநோக்கி செல்வோம் அவ்வாறான வெற்றிக்கு நாங்கள் உடன்பாடாகவேண்டும் அவ்வாறான உடன்படிக்கைக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவ்வாறான உதவிகள் எங்களுக்கு சர்வதேச மட்டத்தில் கிடைத்துக் கொண்டு இருக்கின்றன.

என்றுமில்லாதவாறு பௌத்த பிக்குகளின் ஆதரவும் கிடைத்துவருகிறது. இந்த சமாதானத்திற்கு கத்தோலிக்க குருமார்களின் ஒத்துழைப்பும் கிடைக்கின்றது.

ரணில் விக்கிரசிங்க அவர்கள் மிகவும் பரந்த அடிப்படையில் சித்திப்பவர். எந்த இனத்தை எந்த மதத்தைபின் பற்றினாலும் எந்த இனத்தைச்சேர்ந்தவர் என்றாலும் இலங்கை மக்கள் யாவரும் சமஅந்தஸ்துடன் வாழவேண்டும் என்று எண்ணுபவர். இவ்வாறு அமைச்சர் இம்தியாஸ் மேலும் கூறினார்.

## இவ்வருடமும் போலியோ சொட்டு மருந்து

(சுதுமலை)

ஒன்று தொடக்கம் 5வயதுக்குட்பட்ட சிறுவர்களிற்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

இந்த வருடம்தடுப்புமருந்து ஏற்றும்தினங்களாக 21ம்திகதி செப்ரம்பர் மாதம் சனிக்கிழமையையும் ஒக்டோபர் 26ம் திகதி சனிக்கிழமையையும் பிரகடனப்படுத்தியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளிற்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் 95வீதமான சிறுவர்களிற்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டது எனவும் இவ்விதம் இந்தவருடமும் சகல சிறுவர்களிற்கும் போலியோ சொட்டு மருந்தை வழங்குவதன்மூலம் இலங்கையிலிருந்து போலியோ எனும் முடமாக்கும்நோயை முற்றாக ஒழிக்கலாம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க- 252)

# வடமராட்சி கிழக்கில் இயங்கும் பாடசாலைகள்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் உள்ள ஐந்துபாடசாலைகள் மீளவும் இயங்கஆரம்பித்துள்ளன.

வடமராட்சி கல்விவலயத்தைச்சேர்ந்தசெம்பியன்பற்று அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, மருதங்கேணிஇந்து தமிழ்க்கலவன் பாடசாலை உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சீ.சீ.பாடசாலை செம்பியன் பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியபாடசாலைகளே மீளவும் இயங்கஆரம்பித்துள்ளன.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்தே இப்பாடசாலைகள் மீளவும் இயங்கஆரம்பித்துள்ளன.

(க-23)

# தனியார் வாகனங்களினால் விபத்துக்கள் அதிகரிப்பு

## போக்குவரத்து பொலிஸ் பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தனியார் வாகனங்களினாலேயே கூடுதலான விபத்துக்கள் ஏற்படுகின்றன என போக்குவரத்து பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

சாரதிகளின் கவனமின்மை போட்டி போட்டுக் கொண்டு வாகனங்களைச் செலுத்துதல், அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றுதல் போன்ற காரணங்களினாலேயே இவ்விபத்துக்கள் ஏற்படுகின்றன.

தனியார் ஒழுக்க நெறிக் கோவையை தனியார் வாகன உரிமையாளர்கள் கடைப்பிடிக்காவிட்டால், நாட்டில் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கும்.

எனவே ஒழுக்க நெறிக் கோவையை உரிய முறையில் கடைப்பிடிப்பதற்கு தனியார் வாகன உரிமையாளர்கள் ஒத்துழைக்க வேண்டுமென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(க-8)

# மாணவசமூகத்தின் வளர்ச்சியில்

# பெற்றோரின் பங்களிப்பு அவசியம்

## தீவக வலய கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(காரைநகர்)

மாணவ சமூகத்தின் நெறிப் படுத்தப்பட்ட வளர்ச்சியின் மூலமே ஒழுக்கமான சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். இதற்கு பெற்றோரே உந்து சக்தியாக விளங்க வேண்டும்.

தீவக கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய கட்டடமீள் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் ஆ. குமரேசமூர்த்தியின் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

அரசானது கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்ந்து கல்வியினூடாக சமூக மேமபாடு, பொருளாதார மேம்பாடு, அரசியல் மேம்பாடு அடைந்து, சிறப்பான முறையில் வாழலாம் என்ற ஒரு சித்தாந்த அடிப்படையில் அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படையில் இலவசக் கல்வியினை வழங்குகின்றது.

ஆகவே கட்டாயக் கல்வி என்ற அரசின் இந்த புதிய கல்விச் சீரமைப்பின் ஊடாக எல்லா மாணவர்களுக்கும் கல்வி வசதி வாய்ப்புகளை வழங்கி சிறப்பான சமுதாயத்தை உருவாக்க முனைகின்றது.

ஒரு பிள்ளையின் விருத்தியானது அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள், சமூகம் போன்ற சகல காரணிகளிலும் தங்கியிருக்கின்றது. ஆனாலும் பெற்றோருடனேயே கூடுதலான நேரத்தைக் கழிப்பதனால் இவர்களே நன்மையான, திருத்தமான, சிறந்த வழி காட்டலை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பிரதிநிதி வி. பாலகிருஷ்ணன் உரையாற்றும் போது;

யாழ்ப்பாணத்தை பொறுத்தளவில் மக்கள் மீளக் குடியமர வேண்டுமெனின் முக்கிய ஊக்குவிப்பாக பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் என்பன புனரமைக்கப்படுவதனையே அடிப்படையாகக் கருதுவார்கள். அவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதே இதற்கு காரணம் ஆகும் என்றார்.

(க-246)

### விடுதலைப் புலிகள் - ஸ்ரீ. மு. காங்கிரஸ்

## கூட்டுக் குழு நியமனம் அடுத்த வாரம் இடம்பெறும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலை புலிகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும்இணைந்து கூட்டுக்குழுவொன்றைஅடுத்த வாரமளவில் நியமிக்கவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்களிடமுள்ள குறைபாடுகள் குறித்து ஆராய்வதற்காகவே இக் குழு நியமிக்கப்படவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப்ஹக்கீம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் நடத்திய பேச்சுவார்த்தைகளிற்கமையவே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருதரப்புக்களையும் சேர்ந்த முக்கிய பிரமுகர்களினால் நியமிக்கப்படவுள்ள இக்குழு, இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை வடக்கில் மீளக் குடியமர்த்துவது, விவசாய நடவடிக்கைகள்தொடர்பான பிரச்சினைகளுக்குதீர்வு காண்பதுவுமே இக்குழுவின் முதல்முயற்சியாக இருக்கும் எனவும் அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க-08)

### மறியல்போர்

## பாடசாலை முகாமைத்துவ உதவியாளர் முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

பதவி உறுதிப்படுத்துதல், சம்பள நிலுவைப்பணம் மற்றும் சம்பள ஏற்றம் வழங்குதல்போன்ற கோரிக்கைகள் இம்மாத-முடிவுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.

இல்லையேல், ஜூலை மாதத் தொடக்கத்தில் இருந்து மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை முன்பாக மறியல்போராட்டத்தில் ஈடுபடுவோம்.

யாழ். பட்டதாரி பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்கள்சங்கம் மாகாணக் கல்விச்செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## மீளக்குடியமரசெல்வோர்மீது கடற் படையினர் சோதனைக் கெடுபிடி

(ஊர்காவற்றுறை)

தீவகத்திற்கு மீளக்குடியமரச் செல்வோர் அல்லைப்பிட்டிச் சோதனைச்சாவடியில் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அல்லைப்பிட்டியில் உள்ள இலங்கை கடற்படையின் சோதனைச்சாவடியில் இவர்கள்பெரும் சோதனைக் கெடுபிடிகளுக்குள்ளாக்கப் படுவதுடன்,

மீளக்குடியமர வரும் குடும்பங்களின் தலைவர்களிடம் இருந்து அடையாளஅட்டை பெறப்படுவதாகவும், சொந்த இடத்திற்குச்சென்று அங்கு நடைமுறையில்உள்ள ‘பாஸ்’ பெற்றுவந்து அல்லைப்பிட்டியில்உளள சோதனைச்சாவடியில் காட்டியபின் அடையாள அட்டையினைப் பெறுமாறு அறிவுறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், மீளக்குடியமருவோர் கிராமசேவையாளர் அலுவலகம், உதவிஅரசாங்க அதிபர் பணிமனை மற்றும் இலங்கை கடற்படையின் பொதுசனத்தொடர்பு அதிகாரியின் அலுவலகம் என அலைந்து திரிவதனை அவதானிக்க முடிகின்றது.

(உ-75)

### மோட்டார் சைக்கிள் செலுத்துவோர்

## அல்லைப்பிட்டியில் தடுத்து வைப்பு

(ஊர்காவற்றுறை)

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளை செலுத்துவோர் மற்றும் பயணிப்போர் யாவரும் அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப் படுகின்றனர்.

இதனைஅடுத்து பெருமளவு மோட்டார் சைக்கிள்கள் அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் தவம்கிடப்பதாகவும் அறியப்படுகிறது.

தலைக்கவசத்தை அணிந்து பயணத்தை மேற்கொள்ளுமாறும் கடற்படையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

(க-75)

### கூடைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்பனை தென்னை வள கூட்டுறவுச்சங்க ஆதரவுடன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 வது ஆண்டு விழாச்சபை நடத்தும்கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில்இன்றுபி.ப.5.00மணிக்கு எ 1 வி.க எதிர் சி 2-கியூ 1 வி.க ஆகியன கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (க-3)

### மாதாந்தக் கூட்டம்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் மேற்படி மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.(க-246)

### கசிப்பு கைப்பற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் றக்கா வீதிப் பகுதியில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த பெரும் தொகையான கசிப்பு யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே இந்த கசிப்பு கைப்பற்றப்பட்டது. (க-19)

### மின் மோட்டர் மீட்பு

(யாழ்ப்பாணம்)

திருடப்பட்டமின்மோட்டர் ஒன்று மீட்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய சிரேஷ்ட தரஉத்தியோகத்தர் ஆர் ஏ.சி.பெரேரா தெரிவித்துள்ளார்.

கொக்குவில் பகுதியில் கே.கே.எஸ்.வீதியில் உள்ள வீடு ஒன்றில்மீட்கப்பட்ட தாகவும் உரிமையாளர்கள் அடையாளம் காட்டிப் பொருளைப் பெற்றுக்கொள்ளலாம்என்றும் அவ் உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார்.

(க-19-10)

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை - 08

(உற்சவகாலம்)



### அருள் புரிவாய் தாயே

நயினைக் கடல் ஓரத்திலே அம்மா
கருணை முகம் காட்டி நிற்பாய் தாயே
பெருமை மிகு பெருங்கருணை அம்மா
அருள் புரிவாய் நாகபூஷணித் தாயே

மிதிலையான்

### உன்பதம் போற்றினோம்

நயினையம் பதி வாழும்
நாக பூசணியே!
நாடி வரும் பக்தருக்கு
தேடி வரம் அருளிடுவாய்
கோடி வரம் பெற்று - நாம்
கேடில்லாது வாழ
உன்பதம் பற்றினோம்

க.திருநீபன்

### ‘‘அவள் பாதம் தொழுவோம்’’

அன்னையவள் அருள் வேண்டி
அவள் பாதம் பணிந்திட்டால்
உன்யவள் காத்து நிற்பாள்
உயர்வானவ ழ்வு தந்திடுவாள்
முன்செய்த வினை போக
மூண்டதுயர் யாவும் நீங்க
என்றும் அவளைத் தொழுது
எல்லோரும் அருள் பெறுவோம்

சிவா முத்துக்குமார்

### காப்பதுன் மாதுளமே!

அலைகடல் நீங்கா அதிசயமே
அங்கமெலா முனைத் துதிசெயுமே
நிலையிலா வாழ்வின் நிழலறிந்தே
நித்தமுன் பாதம் தொழுதெழுவோம்
அலையுமெம் மனதில் இடம்பிடித்தாய்
அன்னையுன் அருளால் நடம்பயின்றோம்
மலைமகள் உமையே மாதுளமே -ஈழ
மாந்தரைக் காப்பதுன் மாதுளமே!

நயினைக் கவிஞர் - இராகுலன்

### அடைக்கலம் தாராய்

போரொடும் புரட்டொடும் புரண்டு நித்தம்
புன்னெறி புகுந்து நன்னெறி கெட்டு:
சீரொடு வாழ்ந்த திருநெறி அழிந்து;
சிதைந்தது மானுடம்; தெய்வப் பற்றைப்
பாரெலாம் விற்பனைச் சரக்காய்(க்) கலப்படம்
பண்ணியே விற்றார் பரவின அதர்மம்
ஆரொடு சொல்வேன் நாகபூ ஷணியே!
அம்மையே நீயெமக் கடைக்கலம் தாராய்!

நயினைக்கவிஞர் நாக சண்முகநாதபிள்ளை

### திருமுகங் காட்டிடுவாய்

பல்லவி

நாடியே வந்து நல்வழி காட்டிடும்
நாகபூசணியே நயினைப்பதித்தாயே

அனுபல்லவி

அலைபாயும் கடல் சூழ்ந்த அழகிய திருப்பதியில்
அம்மா உன்அருட்காட்சி என்றும் பொலியுதம்மா

சரணம்

கொஞ்சும் உன்கொஞ்சுசொலியால் குவலயம் சிறந்திடுமே
நஞ்சும் உன்கடைவிழியால் அமிர்தம் ஆயிடுமே
ஓங்கிடும் கடலலைகள் உன்னடியில் வீழ்வது போல்
வேகும் மனக்கவலை நினதடியில் அகலுதம்மா

எங்கும் கடலலை ஆர்ப்பரித்து இசை பாட
பொங்கும் பக்திவெள்ளம் வந்தே அலைமோத
சங்குகள் முழங்கவே சமாதானம் பிறந்திடவே
திங்களைப்போல நீயும் திருமுகம் காட்டிடுவாய்

குகதாசசர்மா சிவகுமார்

## இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள் வருகை

(கோப்பாய்)

பாடசாலை மாணவர்களுக்கு ஆக்க பாடத்தில்கடதாசிப் பூக்கள் செய்யும் நுட்பங்களை போதிக்கும் முகமாக இந்தியாவிலிருந்து இரு ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

விரிவுரை முறையிலும், செயற்பாட்டு முறையிலும்கடதாசிப் பூக்களை செய்யும் முறை பற்றிய பயிற்சிகளை இவர்கள் வழங்கி வருவதுடன் இது சம்பந்தமான கைநூல்களையும் விற்பனை செய்து வருகின்றனர்.

(க-79)

# முன்னெப்போதும் கண்டிராத பாரிய நிதி நெருக்கடியில் இலங்கை அரசு

# வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது

## பிரதி நிதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுதந்திரத்திற்கு பின்னர் ஸ்ரீலங்கா முன் ஒருபோதும் முகம்கொடுத்திராத பாரிய நிதி நெருக்கடியை தற்போது எதிர்நோக்கியுள்ளதனால் தேர்தல்கால வாக்குறுதிகளைகூட நிறைவேற்ற முடியாத நிலைமையே தற்போது காணப்படுவதாக ஸ்ரீலங்காவின் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தனா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பல கடன்கள் இவ்வருடஇறுதிக்குள் முதிர்வுறுவதால் விரும்பியோ விரும்பாமலோ எந்தஅரசு ஆட்சியிலிருந்தாலும் வட்டி உட்பட 327 மில்லியன் ரூபா கடன்செலுத்தப்படவுள்ளது.

ஆனால் நாட்டில் இவ்வருடம் வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வருமானம் 278 மில்லியன் ரூபா மாத்திரமே இதற்கு மேலதிகமாக கடந்தஅரசின் பதவிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பாக எந்தகடன் பதிவேட்டிலும் பதியப்படாத கடன்கள் இருக்கின்றன.

கடன்கொடுத்தவர்கள் வங்கிகளூடாக அவற்றை கேட்குப்போது தான் அந்தகடன் தொடர்பாக அறிய முடிகின்றது. இத்தொகையானது இலங்கையின் வருமானத்தின் இருமடங்கு. இந்நிலையில் கடன் பளு 200 வீதமாக அதிகரித்துள்ளது. இதற்கு மேலதிகமாக 8 லட்சத்து 5 ஆயிரம் அரச ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படாமல் உள்ளன.

சுமார் 40 ஆயிரம் பேருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் சமுர்த்தி கொடுப்பனவுகள், சுகாதாரத்துறை வீடமைப்புத்துறைத் தேவைகள் மற்றும் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளது.

இதனால் புதிதாக அரச துறைக்கு ஊழியர் நியமனம் செய்தல் மற்றும் மீள் நியமனம் போன்றவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

(க)

## அச்செழு பாடசாலை மீண்டும் பழைய இடத்தில்

### விசேட நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம் இன்று முதல் மீண்டும் தனது பழைய இடத்தில் இயங்க உள்ளது.

இராணுவ நடவடிக்கைகாரணமாக நீண்ட காலமாக 'பிறிதோரிடத்தில் இயங்கிய இப்பாடசாலை மீண்டும் பழைய இடத்தில் இயங்குவது குறித்து அப்பகுதி வாழ் கல்விஆர்வலர்கள் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

கல்லூரி அதிபர் இ. இராசசேகரம் தலைமையில் பாடசாலையில் இடம் பெறும் விசேட நிகழவில் யாழ். கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் ந. வரதராஜன், கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ. குணநாதன், அச்செழுபடைமுகாம் அதிகாரி கேணல்ஹேரத்உட்பட பிரமுகர்கள் பலர் விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

(க)

## 450 மில்லியன் செலவில் உதை பந்தாட்ட அரங்கு

(கொழும்பு)

சர்வதேச உதைபந்தாட்ட அரங்கு ஒன்று 450 மில்லியன் ரூபா செலவில் கோட்டே, பெத்தகானாவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை கடந்த புதன்கிழமை அமைச்சர் ரவி கருணாநாயக்கா நாட்டினார்.

இவ் அரங்கு அமைப்பிற்கான நிதியுதவியை ஆசிய உதை பந்தாட்ட சம்மேளனம்வழங்கவுள்ளது.

இதன் நிர்மாணப் பணிகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ந-03)

## இலங்கை காலநிலை

## வானிலைத் தரவுகளை இணையதளத்தில்பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை முழுவதும் நிலவும் காலநிலை, வானிலைத் தரவுகளை எந்த வேளையிலும் இணையத்தளத்தின் மூலம் பெற்றுக்கொள்ள வழிசெய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக மீனவர்கள், உல்லாசப்பயணிகள் போன்றோரின் நலன்கருதியே இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தகவல்களை W.W W. METEO. SLT; LK என்ற இணையத்தள முகவரியில் பெற்றுக்கொள்ளமுடியுமென யாழ். வானிலை ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரி ஆர். பிரதீபன் தெரிவித்தார். (உ-19)

## காவலூருக்கு பேருந்து சேவை விஸ்தரிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக்கானவட பிராந்தியப் போக்குவரத்துச் சேவையின் பேருந்துச் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இரவு 7.30 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து 780 ஆம் இலக்க பாதையூடாக ஊர்காவற்றுறைக்கும் இரவு 8 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து 777 ஆம் இலக்க பாதையூடாக ஊர்காவற்றுறைக்கும் பேருந்துச் சேவை புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஊர்காவற்றுறையில் இருந்து 6. 30மணிக்கு 780 ஆம் இலக்கப் பாதையூடாக யாழ்பேருந்து நிலையத்திற்கான பேருந்துச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ-75)

# தமிழ் ஈழக் கோரிக்கையை அடுத்தே புலிகளின் போராட்டம் ஆரம்பம்

### தேசிய சமாதானப் பேரவை இயக்குநர் தெரிவிப்பு

(வவுனியா)

தமிழ் மக்களின் தமிழீழ கோரிக்கையை முன்வைத்தே, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

தேசியசமாதானப் பேரவை இயக்குநர்களில் ஒருவரான அகிம்ஸ்த பெரேரா நேற்று முன் தினம் மாலை வவுனியாவில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளினாலும், அரசாங்கத்தினாலும் இருதசாப்தங்களாகமேற்கொண்டு வந்த யுத்தத்தினை மேலும் முன்னெடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலை காரணத்தால் தான் இவ்விருவரும் யுத்த நிறுத்தத்திற்கு இணங்கியுள்ளனர்.

இவ் யுத்தநிறுத்தத்தின் அடிப்படையிலேயே தற்போது நாட்டில் சமாதான சூழ்நிலை உருவாகியுள்ளது.

நாடு இப்போதும் இரண்டாகத் தான் உள்ளது என்பதே யதார்த்தம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(க-08)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(சுதுமலை)

ஆனைக்கோட்டை பொதுச் சுகாதாரப்பரிசோதகர்பிரிவில் உள்ள பின்வரும் பகுதிகளில் எதிர்வரும் புதன்கிழமை வளர்ப்பு நாய்களிற்கு ஆர்.வி தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

காலை 9மணிமுதல் 10.30 மணிவரை ஆனைக்கோட்டை உயரப்புலம் பாரதி சனசமூக நிலையத்திலும் 11.00 மணி முதல் 12.30 மணிவரை ஆனைக்கோட்டை 3ம்கட்டை உதயதாரகை சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது.

மேலும் மானிப்பாய் பட்டினசபைப் பகுதியிலும் மருதடி சுற்றாடலிலும் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப் படவுள்ளது.எனவே இப்பகுதியில் வளர்ப்பு நாய்களைகட்டி வளர்க்கும்படியும்மானிப்பாய் பட்டினசபைஅறிவித்தல்விடுத்துள்ளது. (க-252)

## கொழும்பில் இடம் பெறும் மூன்று நாள் கருத்தரங்கு

(கொழும்பு)

இலங்கை உலக வர்த்தக அமைப்புகளுடன் செய்து கொள்ளவுள்ளவர்த்தகசேவைகள் உடன்படிக்கையின் முக்கியத்துவம் குறித்து இலங்கை வர்த்தக சங்கத்திற்கு விளக்கமளிக்கும் முகமாக தேசிய ரீதியிலான மூன்று நாள் கருத்தரங்கு ஒன்றைவர்த்தகதிணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இக்கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமைதொடக்கம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

வர்த்தகம் மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா அங்குரார்ப்பணம் செய்துவைக்கும் இக் கருத்தரங்கில் உலக வர்த்தக அமைப்பின் ஜெனிவா செயலகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

(க-03)

## ஆலயம் புனருத்தாரணம்

(கிளிநொச்சி)

1996 சப்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக பெரும் சேதத்தை அடைந்த கிளிநொச்சி அருள்மிகு முருகன் ஆலய கட்டிட புனருத்தாரண வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருகிறது. (க)

## புதிய படை முகாம்கள்

(தென்மராட்சி)

சாவகச்சேரி டச்சு வீதி, தபாலக வீதி மற்றும் நுணாவில் கிழக்கு பகுதிகளில் ஆட்களில்லாத வீடுகளில் புதிய படைமுகாம்களை அமைக்கும் பணிகளில் படையினர் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக இப்பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் மத்தியில் பெரும் அச்சமும் கவலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (க-77)

## வட்டுக்கோட்டையில் நடமாடும் பற்சிகிச்சை

(சுதுமலை)

அராலி வட்டுக்கோட்டை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள 16 பாடசாலைகளில் மாணவர்களின் நன்மை கருதி இன்று தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து ஐந்து தினங்கள் நடமாடும் பற்சிகிச்சை முகாம் ஒன்று வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் தமது வகுப்பாசிரியர், அதிபர் ஊடாக பெற்றோர்களுடன் சமுகமளித்து உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (க-252)

## நாளை முக்கிய கலந்துரையாடல்

(சுதுமலை)

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

(க-252)

## வடமாகாணத்தில்

# 100 கோடி ரூபா செலவில் வைத்தியசாலைகள் புனரமைப்பு

## அமைச்சர் பி.தயாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்திலுள்ளஅரச வைத்தியசாலைகள் சில 100 கோடி ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக சுகாதார போசனை நலத்துறைஅமைச்சர் பி தயாரட்ண தெரிவித்துள்ளார்.

கல்முனையில் அண்மையில் இடம் பெற்ற வைபவமொன்றில் பிரதம அதிதியாககலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி, பருத்தித்துறை, கைதடி போன்ற இடங்களிலுள்ள வைத்திய சாலைகளே புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இவ் வைத்தியசாலைகளினை புனரமைப்பு செய்வதற்கென வெளிநாட்டு நிறுவனங்களின் உதவி பெறப்படவுள்ளது.

அத்துடன், நாட்டிலுள்ள சகலபொதுசுகாதாரபரிசோதகர்களுக்கும்மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-08)

# இன்று ஒரு தகவல்

## கடமையுணர்வு வேண்டும்

ஒரு கிராமப்பாதையின் மத்தியில் ஒரு கல் தலையை உயர்த்திக்கொண்டு புதைந்து கிடந்தது. அந்தப்பக்கம் போவோர்வருவோர்எல்லாம் அதில் இடித்துக் காயமடைந்தார்கள் சிலர் அதில் தடுக்கி விழுந்து சென்றார்கள்.

'என்ன அரசாங்கம் இது! இந்தக் கல்லை அகற்றாமல் விட்டிருக்கிறதே!' என அவரவர் அரசாங்கத்தை நொந்து கொண்டு போனார்களே ஒழிய ,ஒருவரும் அதைஅகற்ற துணியவில்லை.

அதில் இடித்துக்கொண்ட ஒரு கிழவர் 'பாவிப்பயல்கள் பிறந்த இந்த ஊரிலே இந்தக் கல்லை எடுத்துப்போட நாதியில்லையே!' என்று சாபமிட்டாரே தவிர அவரும் அதை அகற்றவில்லை.

இரவில் மாறுவேடத்தில் நகரசோதனை செய்து வந்த அவ்வூர் அரசன் இதையெல்லாம் கவனித்து வந்தான்.ஒரு நாள் இரவு அந்தக் கல்லைப் பெயர்த்து அதனடியில் தன் முத்திரையையும் சில பொற்காசுகளையும் வைத்து, அதன் மீது முன்பு இருந்தபடியே கல்லை வைத்துவிட்டுச் சென்றான்.

பல நாட்கள் கழித்து ஒரு நொண்டிப் பிச்சைக்காரன் ஒருநாள் தட்டுத்தடுமாறிக் கொண்டு அந்தப்பக்கம் வந்தான் அதில் தடுக்கி விழப் போனான். ஆனால் விழுந்து விடவில்லை. தன்னுடைய நிலை மற்றவர்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாதே என்று எண்ணி, மெதுமெதுவாக சுற்றிலுமிருந்த மண்ணை அள்ளி எடுத்து. அந்தக் கல்லைஅப்புறப்படுத்தினான். அதனடியில் கிடந்த அரச முத்திரையையும் பொற்காசுகளையும் கண்டதும் அவனுக்கு கிலி பிடித்துக்கொண்டது. எடுத்துக்கொண்டு அரண்மனைக்கே சென்றான். அரசனைக்கண்டு அவைகளைக் கொடுத்தான்.

'இத்தனை மக்கள் வாழும் இந்த ஊரிலே அரசாங்கத்தைப் பழித்தும் சாபமிட்டும் வந்தார்களே ஒழிய உன்னைப் போல் கடமையைச் செய்ய ஒருவரும் வரவில்லை. அதனால் இந்தப் பொற்காசுகளை நீயே வைத்துக்கொள் என்று திருப்பிக் கொடுத்து விட்டான்.

அந்தப் பிச்சைக்காரன் அளவிலா மகிழ்ச்சியடைந்தான்.

நன்றி அநுராகம்

# அரசின் முயற்சிகளுக்கு ஐ. நா. செயலர் ஆதரவு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கைஅரசு எடுத்துவரும் சமாதான முயற்சிகளுக்கு ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் தனது ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அண்மையில் நியூயோர்க் சென்றிருந்த போது ஐக்கிய நாடுகள் சபைக் கட்டிடத்தில் செயலாளர் நாயகம் கோபி அனானைச் சந்தித்தார் இச் சந்திப்பின்போதே கோபி அனான் இலங்கையின் சமாதான முயற்சிக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்

செயலாளர் நாயகம் கோபி அனான் டிரோனுடன் உரையாடுகையில் தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அரசு அழைப்பதற்கு எடுத்துவரும் முயற்சிகளை தான் வரவேற்பதாகத்தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலையான சமாதானம் ஏற்படுமானால் தேவையானபோது உதவிகள் வழங்கத் தயார் என்றும் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கோபி அனானை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## காவலூரில் அறநெறிபாடசாலைகளுக்கு இலவச பாடநூல்கள்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு இலவச பாடநூல்கள் வழங்கப்படவுள்ளன.

இந்து கலாசார திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இந்நூல்கள் உதவி அரச அதிபர் பணிமனை மூலம் அறநெறிப்பாடசாலைகளிற்கு வழங்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் காரைநகரில் 3 அறநெறிப் பாடசாலைகளும் அனலைதீவில் ஒரு பாடசாலையும் ஊர்காவற்றுறையில் 6 பாடசாலைகளுமாக மொத்தம் 40 அறநெறிப் பாடசாலைகள் இயங்குவதும் குறிப்பிடத்தக்கது. (உ-246)

## இசற் புள்ளியிடல் முறை மறு பரிசீலனைக்கு பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் மாணவர்களை அனுமதிப்பதற்கென அறிமுகப்படுத்தப்பட்ட இசற்புள்ளியிடல்முறையினை மறுபரிசீலனை செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தொழிற்கல்வியமைச்சர் கபீர்ஹா சிமுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை இசற் புள்ளியிடல் முறை தொடர்பாக மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பது குறித்து பிரதமர் எடுத்துள்ள முடிவுகளை தேசிய இளைஞர் மன்றம் பாராட்டியுள்ளது. (உ-8)

# பிரதான இரு கட்சிகளையும் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு மக்கள் விடுதலைமுன்னணி அழைப்பு

(கொழும்பு)

நாட்டின் இருபிரதான கட்சிகளையும் பகிரங்கவிவாதத்திற்கு வருமாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது இடம் பெற்று வரும் சமாதான முயற்சிகள், நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, விலை வாசி, உயர்வு ஆகியன தொடர்பாகவே பகிரங்க விவாதம் நடத்தவருமாறு ஐக்கிய தேசிய முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ் விரு கட்சிகளுடனும் சமாதான முயற்சிகள் தொடர்பாக பகிரங்க விவாதம் நடத்துவதன் மூலமே நாட்டு மக்களுக்கு அது தொடர்பான உண்மை நிலை புரியுமென அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உ-8)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சேவை மூப்பு,திறமைஅடிப்படையில் பதவி உயர்வுவழங்குவதன்மூலம்இலங்கைக்கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பிற்குஆட்சேர்ப்புச்செய்வதற்காக இம் மாதம் 14ஆம் திகதி வர்த்த மானியில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

விண்ணப்பங்கள் யூலை மாதம் 12 ஆம் திகதிக்குமுன்னராக அனுப்பப்பட வேண்டும். (க-3)

## அலுவலகங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி இன் சுரன்ஸ் கம்பனிச் செயற்பாடுகளை வடக்கு-கிழக்குமாகாணத்தில் விஸ்தரிக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம், வவுனியா திருகோணமலை, மட்டக் களப்பு ஆகிய இடங்களில் அலுவலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்திற்கான கிளை யாழ். வணிகர் கழக மேல் மாடியில் திறக்கப்பட்டுள்ளது.

இக்கம்பனிக்கு ஊழியர்களை உள்வாங்குவதற்கான நேர்முகப்பரீட்சைநேற்றுமுன்தினம் தொடக்கம்யாழ் வணிகர் கழக மண்டபத்தில் நடைபெற்றுவருகின்றது. (க-2)

## தேர்வு அனுமதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தாதிகளுக்கான விஞ்ஞான மாணி கற்கை நெறிக்குயாழ். பிராந்திய திறந்த பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கான தேர்வு அனுமதிப் பரீட்சை இம்மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தேர்வுஅனுமதிப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள்தமதுஅனுமதி அட்டைகளை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பிராந்தியஇயக்குனர்ச.ஆ.ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (உ-6)

## கணனிகள் கைவந்து சேரவில்லை

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்திற்கென கொழும்புத் தலைமையகத்தினால்5கணனிகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை கணனிகள் கைவந்து சேரவில்லையென பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, இவ்வாறான இழுத்தடிப்புக்களால் தமது அன்றாடக்கடமைகள் மட்டுமல்லாது இங்கு கற்கை நெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களும் பெரும்பாதிப்பினை எதிர் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். (உ-6)

## இந்தியாவில் இருந்து இருநூறு ஈழ அகதிகள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

தென்னிந்தியாவிலிருந்து 200 க்கும் அதிகமான இலங்கை அகதிகள் இவ்வாண்டு நாடு திரும்பியுள்ளனர்.

சட்ட ரீதியாக அகதிகளை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கும் சூழ் நிலையொன்று இன்னும் அங்கு உருவாகவில்லையென அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலையைத் தொடர்ந்து 1 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அங்கிருந்து நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் ஐ. நா.உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (உ-8)

## மது போதையில் கடமை புரிவோருக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தில் மது போதையில் கடமையாற்றுபவர்கள் குறித்துஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும்,

மக்களின் தேவைகளை இழுத்தடிக்காமல் உடனடியாகப் பூர்த்தி செய்யுமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்குமாறும் உள்நுறை அமைச்சர் ஜோன் அமரதுங்க திணைக்கள் ஆணையாளர் விஜயரட்ணசிங்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடமை நேரத்தில் மது போதையில் இருப்பவர்கள் மீது சட்டவைத்திய அதிகாரியின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திணைக்களத்தில் பிரிவுபிரிவாகச் சென்று அதிகாரிகள், அலுவலர்கள், உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் ஆகியோரின் கடமைகளை அடிக்கடி கண்காணிக்குமாறும் அமைச்சர்பணிப்புரை வழங்கியுள்ளார். (உ-3)

## வளிமண்டல ஆராய்ச்சி திணைக்களம் சென்று விபரங்களைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களத்தினைப் பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் கற்பித்தல் சம்பந்தமாக காலநிலைத் தரவுகள் மற்றும்விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ள விரும்பும் மாணவர்கள் கிழமையின் ஏழு நாட்களிலும் காலை 9.30 மணிக்குபின்னர்வருகை தருமாறு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளைதிருநெல்வேலி வளிமண்டல ஆரய்ச்சித் திணைக்களம் நிறுவப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகின்றதும் குறிப்பிடத்தக்கது. (உ-19)

## சிந்தனைக்கு விருந்து

### வீருநோக்கி வந்தவருக்கு வரவேற்பு!

சிரங்கினுக்கு மருந்திட்டுச் சீழைப் போக்கிச்
சிகிச்சைசெயப் புகுந்தார்க்குச் 'சிரங்கிஃ தல்ல
உரக்கெடுக்கும் குட்டம்' என உரைத்தால் அந்த
உலைவினரின் துயருக்கு முடிவுண்டாமோ?
வரையெனவே பெருத்தமனை மண்மே டாகி
வாழ்நிலையைப் போக்கஅதைத் திருத்தி வாழும்
சிரத்தையுடன் வந்தவரைப் 'போம்போம். உள்ளே
செல்லாதீர், நிலக்கண்ணி' என்கின் றாரே!

-பழையவன்

வரை-மலை உலைவினர்-துன்பப்படுபவர்

## பாதுகாப்பு அமைச்சராக பெண் நியமனம்

### கொலம்பிய வரலாற்றில் முதல்சம்பவம்

(பொகோரா)
கொலம்பியா அரசாங்கம் கெரில்லாக்களின் தாக்குதலுக்குள் சிக்கியுள்ள இவ்வேளையில் பாதுகாப்பு அமைச்சராக பெண் ஒருவரை நியமித்துள்ளது.

ஜனாதிபதி அல்வாரோ உரைப் இனால் நியமிக்கப்பட்ட மார்டாலுசியா ரெமிரெஸ் முன்னாள் வர்த்தக அமைச்சராக கடமையாற்றியவராவார்.

கொலம்பிய வரலாற்றில் பாதுகாப்பு அமைச்சராக பெண் நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல்தடவையாகும். சிறந்த சட்டத்தரணியான இவர் பாதுகாப்பு, இராணுவ நடவடிக்கைகளை திட்டமிடுவதில் சிறந்த ஆளுமையுடையுவர் என தெரிவிக்கப்படுகிறது. (க-03)

## ஐரோ. நாடுகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும்தருணம் வந்துவிட்டது

### நேட்டோ செயலாளர் எச்சரிக்கை

(லண்டன்)
இரசாயன, உயிரியல் ஆயுத தாக்குதல்களுக்கு எதிரான பாதுகாப்பைஐரோப்பியநாடுகள் உறுதிப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நேட்டோ நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் ஜோர்ஜ் வெலிட்சின் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னைய காலங்களில் உள்ளூர்ப் பிரச்சினைகளாக இருந்துவந்த பயங்கரவாதம் தற்போது உலகளாவிய ரீதியில் சர்வதேச பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

இவ்வாறான இரசாயன உயிரியல் தாக்குதல், பயங்கரவாத நாடுகளிலிருந்தே வரக்கூடும் என்பதனால் அந்திரெக்ஸ். வைரஸ் போன்றவற்றுக்கு எதிரான தடுப்பூசி. நோயை இனம்காணும் வழிவகைகள் என்பவற்றினை கண்டுபிடிக்காவிட்டால் ஐரோப்பியநாடுகளில் பாரிய விளைவுகள் ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (உ-8)

## கடற் கொள்ளையரால் இந்திய மீனவர்கள்கடத்தல்

(புதுடில்லி)
வங்காள விரிகுடாவில் வைத்து 22 இந்திய மீனவர்களை கடற்கொள்ளைக்காரர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு இந்தியாவின் மேற்கு வங்காளத்தின் காடுகள் நிறைந்த கரையோரப்பகுதியில் மீன் பிடிப்பதற்காக சென்றபோதே இவ்வாறு 22 இந்திய மீனவர்களும் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவரை விடுவித்த கடற்கொள்ளைக்காரர்கள், கடத்திச் செல்லப்பட்ட ஏனைய மீனவர்களை விடுவிப்பதற்கு 40 ஆயிரம் டொலரை பணயப்பணமாக இந்திய அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

இதனையடுத்து இந்திய கரையோரகாவல் பணிகளில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டதோடு, கடத்தப்பட்ட மீனவர்களை கண்டுபிடிக்கும் முயற்சிக்கு விசேட கொமாண்டோபடையணியும் அமைக்கப்பட்டுள்ளதாக இந்தியபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

# உலக தரிசனம்

### பாகிஸ்தானுக்கு எதிராகவல்ல

## பயங்கரவாதத்துக்கு எதிராகவே இந்தியா போர்புரிய முனைகிறது

### பி. ஜே. பி. தலைவர் தெளிவுபடுத்துகிறார்

(புதுடில்லி)
இந்தியா பாகிஸ்தானுக்கு எதிராகவன்றி பயங்கரவாதத்தை எதிர்த்தே போர் தொடுக்கமுற்பட்டு வருகிறது என பி.ஜே.பி.தலைவர் ஜனா கிருஷ்ண மூர்த்தி தெரிவித்துள்ளார்.

அண்மையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியா தனது வரலாற்றில் எந்தவொரு நாட்டையும் தாக்கியதில்லை ஆனால் எல்லை கடந்த பயங்கரவாதத்தை எதிர்த்துபோராடவே இந்தியாஉறுதி பூண்டுள்ளது.

காஷ்மீரின் சுகந்திரப் போராட்டம் எனக் கூறிக் கொள்வோர் தொடர்பாக சர்வதேச சமுதாயம் சில தவறான கருத்துக்களை கொண்டுள்ளதுஎன்று அவர் மேலும் தெரிவித்தார்.

காஷ்மீருடன்மட்டும் நின்றுவிடாது இந்தியா முழுவதுமே நாசவலைகள் மூலம் பதற்றத்தை ஏற்படுத்த பாகிஸ்தான் சதித்திட்டம் தீட்டி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (உ-8)

## இந்திய இடது சாரிக்கட்சிகள் அப்துல் கலாமுக்கு எதிராக வேட்பாளரைநிறுத்தமுடிவு

(புதுடில்லி)
குடியரசுத்தலைவர் பதவிக்கு வேட்பாளராக நியமிக்கப்பட்ட பிரபலஅணு விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாமுக்கு எதிராக ஒரு வேட்பாளரை நிறுத்தப்போவதாக இடதுசாரிக்கட்சிகள் அறிவித்திருக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை புதுடில்லியில் புரட்சி ஷோசலிசக் கட்சியின் செயலர் அத்வானி றாய் இதனைத்தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளரான கலாமுக்கு காங்கிரஸ் கட்சிஆதரவு தெரிவித்திருப்பதையடுத்து அக்கட்சி ஜனநாயக சக்திகளையும்மதசார்பின்மைகொள்கைகளையும் ஏமாற்றி விட்டதாகவும் அத்வானிறாய் குற்றம் சாட்டியுள்ளார். (உ-8)

## ஜப்பானில் பூமியதிர்ச்சி

(டோக்கியோ)
ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் சிறு அளவிலான பூமியதிர்ச்சி அண்மையில் இடம்பெற்றுள்ளது.

5.2 றிச்சர்ட்அளவில் பதியப்பட்டுள்ள இப்பூமியதிர்ச்சி டோக்கியோ நகரை அண்டியுள்ள பிரதேசங்களிலும் உணரப்பட்டுள்ளது.

இப் பூமியதிர்ச்சியில் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. (உ-8)

## உணவு விடுதியில் தீ விபத்து 24 பேர் உடல் கருகிப் பலி

(பீஜிங்)
சீனாவில்புறர்நகர்ப்பகுதியிலுள்ள உணவு விடுதி யொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 24 பேர் உயிரிழந்ததுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

உணவு விடுதியில் திடீரென ஏற்பட்ட தீ விபத்து குறித்து சீனப்பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றார்கள்.

இதற்கிடையில் விடுதி தீப்பற்றிக் கொண்டமைக்கான காரணங்களை கண்டறியும் நோக்குடன் சீன அரசு குழுவொன்றை அவ்விடத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. (க-8)

### அமெரிக்க தூதரக குண்டுவெடிப்பு

## அல்ஹுணூன் அமைப்பு உரிமை கோரியது

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்னால் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலுக்கு அல்ஹுணூன் என்ற புதிய கிளர்ச்சிக் குழுவொன்று உரிமை கோரியுள்ளது.

உலகின் அனைத்து ஊடக நிலையங்களிற்கும், இவ்வமைப்பு கையால் எழுதப்பட்ட உரிமை கோரும் அறிக்கையினை அனுப்பிவைத்துள்ளது.

அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் ஜிகாத் போரை எதிர் கொள்ளத் தயாராகவேண்டும்.

இது ஒரு ஆரம்பத் தாக்குதல் நடவடிக்கையே இது போன்ற பல தாக்குதல் நடவடிக்கைகள் இடம் பெறும்எனவும் அவ்வறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாகிஸ்தானில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இக்குண்டுவெடிப்பைதொடர்ந்து அமெரிக்கா அங்குள்ள தனது பணிமனைகளை காலவரையறையின்றி மூடியுள்ளது. (உ-8)

## பாகிஸ்தான் ஆளுநர் தங்கியிருந்த வீட்டின் மீது ரொக்கட் தாக்குதல்

(இஸ்லாமாபாத்
பாகிஸ்தானின் வடமேற்கு மாகாண ஆளுநர் இப்திகார் கூசேன்ஷா, தீவிரவாதிகளின் ரொக்கட் தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள சுயாட்சி பெற்ற பழங்குடிப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட போது தங்கியிருந்த வீட்டின் மீது தீவிரவாதிகள் ரொக்கெட் தாக்குதலை நடத்தினர்.

தாக்குதல்குறிதவறியதனால் அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். (த)

## அமெரிக்க வர்த்தக மையம் தாக்குதல் விவகாரம் 147 பேர் தருத்து வைப்பு

(வாஷிங்டன்)
கடந்தசெப்டெம்பர் மாதம் நடத்தப்பட்ட அமெரிக்கவர்த்தக மையம் மீதான தாக்குதல் தொடர்பாக 147 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என அமெரிக்காவின் நீதித்துறை அறிவித்திருக்கின்றது.

அமெரிக்காவின் மாகாண நீதிமன்றம் விடுத்த கோரிக்கையை அடுத்தே இவ் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமெரிக்க தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் 18 பேர் இதுவரை காலமும் தமது வழக்குகளிற்காக வழக்கறிஞர்கள் எவரையும் நியமிக்கவில்லை எனவும் அத்துறை தெரிவித்திருக்கிறது.

வர்த்தக மையக்கட்டடம் தாக்குதல் தொடர்பாக அமெரிக்க அரசினால் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் மனிதாபிமான அடிப்படையில் நடத்தப்படவில்லை என பல் வேறு பட்ட அமைப்புகளினால் குற்றம் சாட்டப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (க-08)

### இந்திய-பாக். எல்லைப் பதற்றம் தணிவு

## அரபிக் கடலில் நிறுத்திய யுத்தக் கப்பல்களை பாக். திருப்பியழைப்பு

அரபிக் கடலில் நிறுத்தி வைத்திருந்த யுத்தக் கப்பல்களை பாகிஸ்தான் திருப்பியழைத்துள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளிடையேநிலவிவந்தமுறுகல் நிலையைத் தொடர்ந்து, தனது பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் எல்லைக் கடலோரங்களில் இவ்வாறான யுத்தக் கப்பல்களை பாகிஸ்தான் நிறுத்திவைத்திருந்தது.

தற்போது இவ்விரு நாடுகளிடையே ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு, பாகிஸ்தானின் விமானங்கள் வான் பரப்பில் பறப்பதற்கு விதித்திருந்த தடையை இந்தியா நீக்கியுள்ளதையடுத்து,

பாகிஸ்தானும் இவ்வாறான தொரு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக இராணுவச் செய்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## உறக்கத்தில் இருந்த மாணவர்கள் எண்மர் உடல் கருகிப் பலி

(சியான்)
சீனாவின் ஹந்தயேன் மாநில கிராமபுறத்தில் உள்ள மாணவர் விடுதியில் அண்மையில் இரவு ஏற்பட்ட தீ விபத்தில் உறக்கத்திலிருந்த8 மாணவர்கள் உடல்கருகிப்பலியாகியுள்ளனர்.

இறந்தவர்கள் அனைவரும் 9 முதல் 11வயது வரையான சிறுவர்கள் எனவும் இச் சம்பவத்தில் 11 வகுப்பறைகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்குதங்கியிருந்தசகமாணவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். (உ-9)

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.
குறள்

# வலம்புரி

## வெளிநாட்டு நிதி உதவி

அரசு- விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதன் பின் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளன. குறிப்பாக யுத்தத்தால் பாதிப்படைந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களின் புனரமைப்புக்கென வெளிநாடுகள் தமது உதவியை வழங்க முன்வந்துள்ளன.

அந்த வரிசையில் பிரிட்டிஷ் அரசு தனது முதற்கட்ட உதவியாக 68 இலட்சம் ஸ்ரேலிங் பவுணை வழங்கியுள்ளது. இதேபோன்று இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுவும் இம்முறை தாராள நிதியுதவியை வழங்கும் என எதிர்பார்க்கலாம். இதில் முக்கிய விடயமென்னவெனில் யுத்தத்தால் அழிந்துபோன வடக்குக் கிழக்குப் பிரதேசத்தைக் கட்டியெழுப்பவென ஒதுக்கப்பட்ட நிதியானது உரிய பிரதேசங்களுக்குச் செலவாகுவதை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

ஏனெனில் கடந்த காலங்களில் வடக்குக் கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியானது தென்னிலங்கையின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட்டன.

அதேபோல் வடக்குக் கிழக்குப் பகுதிக்கு அனுப்படுகின்ற இயந்திரங்கள், உபகரணங்கள் தென்பகுதியில் எங்கோவொரு மூலையில் பயன்படுத்துவதும் அதற்குப் பதிலாக ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த இயந்திரங்களை அனுப்பிவைப்பதும் அவை கிடப்பில் போடப்படுவதும் நடந்து முடிந்த சம்பவங்கள்.

எனவே இத்தகைய விரும்பத்தகாத நடவடிக்கைகள் நடப்பது தவிர்க்கப்பட வேண்டும். இவை தொடருமாயின் சிங்கள-தமிழ் மக்களிடையே நிலவுகின்ற சமாதான உறவு விரிசலடையக்கூடிய துர்ப்பாக்கியம் ஏற்படலாம்.

இது விடயத்தில் அரசு மிகத் தெளிந்த நோக்குடன் செயலாற்றுவது மிக மிக அவசியமாகும்.

சிங்கள-தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இனபேதமையை தொடர்ந்தும் வளர்க்காதிருப்பதற்கு எல்லா இன மக்களையும் சம கண் கொண்டு நோக்குவது மிகஅவசியமாகும்.

இவற்றுக்கு மேலாக நிதியை வழங்குகின்ற நாடுகள் தமது நேரடிப் பார்வையில் புனரமைப்புப் பணியை - கண்காணிக்கும் பொறுப்பை மேற்கொள்வது சாலச் சிறப்புடையதாகும்.

# நல்லன எல்லாம் தரும் நாகபூஷணியைப் பணிந்தால் வினைத்துன்பமெல்லாம் போம்

சமயம்; இலக்கியம்; வரலாறு; தத்துவம்; அரசியல் எனப் பல்வேறு துறைகளிலும் தனது தனித்துவத்தை இணைத்துவைக்குமாறு பதிய வைத்திருக்கும் பெற்றி 'மணி பல்லவம்' எனப் போற்றப்படும் பெருமை நயினாதீவிற்கு உண்டு. இது வெறும் புகழ்ச்சியல்ல. இனம், மதம், மொழி போன்ற பல வழிகளிலும் இச்சிறுதீவு இலங்கையின் பூர்வீகத்தோடு இறுகப்பிணைந்துள்ளது. இரண்டு மைல் நீளம், முக்கால் மைல் அகலமுள்ள இந்தச் சிறுமணல் மேடு இலங்கையிலுள்ள நான்கு மதங்களும் வழிபடுவதற்குரிய சிறப்புப் பெற்றுள்ளமை இதற்குப் பெரும் மகத்துவத்தையும், மாண்பையும் தந்துள்ளது.

## ஆறுமுக நம்பி

முக்கியமாக இந்துசமயம், புத்தசமயம் ஆகிய இரண்டு மதங்களும் பன்னெடுங்காலமாக இங்கு நிலைபெற்றுள்ள வழிபாட்டிடங்களைப் புனித இடங்களாகப் போற்றிவருகின்றன. அறுபத்து நான்கு சக்திபீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் இங்கு அமைந்திருக்கின்றது என்று சாக்த மதத்தினர் கூறுகின்றனர். புத்தபீடிகை இங்கு அமைந்திருப்பதாகப் பௌத்தர்கள் கருதுகின்றனர். நாக வழிபாட்டுத்தலங்களில் புராதனமான நாகம்மாள் ஆலயம் இங்கிருப்பதாக வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றார்கள். இதைவிட போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சியின் சுவடுகள் இங்கிருப்பதாகவும் கருதப்படுகின்றது.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள இலக்கியச் சான்றுகளோடு இனங்காணப்படும் அமுதசுரபி, கோமுகி போன்ற இடங்களின் எச்சங்களும் இங்குண்டு. கல்விவளம், கலைவளம், அருள்வளம், ஆன்மீகவளம் என்பன இயற்கையாகவே ஏனைய இடங்களைவிட ஒப்பீட்டு ரீதியாக இத்தீவிலே பல்கிப்பெருகி இருக்கின்றது. இதன்காரணமாக உள்நாட்டவர், பிறநாட்டவர், சமயப் பெரியார்கள், தத்துவ ஆசிரியர்கள் சுற்றுலாப்பயணிகள் என்போர் விருப்போடும், உவப்போடும் தரிசிக்கும் இடமாகவும் மதிப்புப்பெற்றுள்ளது.

1983 ற்கு முன்னர் சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற இடமாக இது இருந்தது. அதன் பின்னர் போர்ச் சூழல் காரணமாக இறை பயணிகளின் வருகை குறைந்துவிட்டது. சுற்றுலா முக்கியத்துவத்தை விட இங்கு எழுந்தருளியிருக்கும் நாகபூஷணி அம்மனின் அருட் பிரவாகம் உலகெங்குமுள்ள இந்துக்களை ஈர்த்துவந்தது. பௌத்தர்களும் 'நாகதீபம்' என்று இதனைப் போற்றித் தரிசித்து வந்தனர். போர் ஓய்ந்து அமைதிச் சூழ் நிலை தோன்றிய பின் இந்நாட்டின் பிரதமர் உட்பட மந்திரிமார்களும் நயினாதீவிற்குச் சென்று, நாகபூஷணி அம்மனையும் புத்தவிகாரையையும் தரிசித்து, நாட்டின் அமைதிக்கான வேண்டுதலை முன்வைத்துள்ளனர்.

### பீடம் அமைந்தவிதம்

முன்னொரு காலத்தில், தனக்கு ஏற்பட்ட பிரமசத்தி தோஷத்தை நீக்குவதற்காக இந்திரன் சக்திபீடத்தை இங்கே அமைத்தான் என்று கூறுவர், ஒருகாலத்தில் பாரதம் முழுவதும் பசிப்பிணி தோன்றிய போது, மணிமேகலை இத்தீவில் அட்சய பாத்திரத்தைப் பெற்றுப் பசிப்பிணி போக்கினாள் என்பர். இங்குள்ள ஒரு மணிப் பீடத்திற்காகக் குலோதரன், மகோதரன் என்ற இரு அரசர்கள் சண்டை இட்டபோது புத்தபெருமான் வந்து அமைதியை நிலைநாட்டியதாகவும் வரலாறு உண்டு. அதேபோல நாகத்திற்கும், கருடனுக்கும் சண்டை மூண்ட போது வீராசாமி என்ற இந்தியவணிகர் சமரசம் செய்ததாகவும் செய்திகள் உண்டு. அதற்கான கற்சான்றுகள் இன்றும் கடலில் உண்டு. எல்லா வகையாலும் எண்ணினால் இச்சிறுதீவு, முன்னைப்பழம் பொருட்டு முன்னைப்பழம் பொருளாம் ஆதிபராசக்தியின் உறைவிடமாக இருந்தது என்பதற்குச் சந்தேகமே இல்லை. இங்கு எழுந்தருளியிருக்கும் அன்னையைத் தரிசித்துத் தனமும்; கல்வியும், தளர்வறியா மனமும், இனம் பெருகுவதற்காக மழலைச் செல்வங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வோர் அனேகர். அல்லலும்வல்வினையும் துன்பமும் அன்னையைத் தொழுதால் அகன்று விடும் என்பது அடியார்கள் நம்பிக்கை.

### சுற்றுலாவிட மானால் புனிதம் கெடும்

பத்திரிகைகளிலும் பிற ஊடகங்களிலும் இத்தீவை உல்லாசப்பயணிகளின் உல்லாச புரியாக மாற்ற வேண்டுமென்ற கருத்து அண்மைக் காலத்தில் வெளிவந்தமை மனதை வாட்டுகிறது. அப்படி மாறினால் இத்தீவின் புனிதத்தன்மை கெட்டுவிடும். இந்துக்களும், பௌத்தர்களும் இதனை வன்மையாக எதிர்க்க வேண்டும். கோயிலிற் சேரும் காணிக்கைகள் ஆலயத்தின் அபிவிருத்திக்காகவும் அடியார்களின் வசதிகளுக்காகவும், உள்ளூர்ச் சேவைகளுக்காகவுமே செலவு செய்யப்பட வேண்டுமென அடியார்கள் கருதுகின்றார்கள். 'தெருவுத் தேங்காயை வழியிற்பிள்ளையாருக்கு அடிக்காதீர்' உள்ளூரில் தற்போது நிலைகொண்டிருக்கும் கடற்படையினரின் பாசறை நீக்கப்பட்டுப் பௌத்த ஆலயத்தின் பாதுகாப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்தல் நலம் பயக்கும். பஸ் சேவை ஒழுங்காக நடைபெற ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆலய அறங்காவல் சபையினர் தீர்த்தக்கரைக் காணியைப் பொறுப்பேற்றுப் புனரமைப்புச் செய்ய வேண்டும்.

ஒரு அருவருப்பான காரியம், தினம், தினம் வரும் அடியார்களின் மனதைப் பெரிதும் பாதிக்கின்றது. அதாவது நயினாதீவில் பிடிக்கும் மீன் யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்காகக் கோபுரத்திற்கு முன்னுள்ள பாலத்தின் முகப்பால்; வெடுக்கு நீர் அடியார்கள் மேல் ஒழுகி நாற்றம் எடுக்கக் கூடியதாகக் கொண்டு செல்வது வேதனையைத்தருகின்றது. இதனைத் திருத்துவதற்கு ஊர்மக்கள் உரக்கக் குரல் கொடுப்பார்களா? மீனாட்சிக்கு மீன் அபிஷேக ஆராதனையா? தட்டிக்கேட்டு அம்பாள் நிற்சயம் தண்டிப்பாள். இவை யாவும் மக்கள் சிந்தனைக்கு, 'தூயன துணியுங்கள் துன்பமெல்லாம் நீங்கும்'. ●

## பொலிஸ் சார்ஜன்ட் பலி

(கொழும்பு)

காவத்தையில் நேற்றுக் காலை தனியார்பஸ்-மோட்டார்சைக்கிள் விபத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பலியானார்.

காவத்தை பொலிஸ் நிலையத்திற்கு நேற்றுக்காலை கடமையை பொறுப்பேற்க சென்ற வேளையிலேயேஇவர் பலியாகிஉள்ளார்.

தனியார் பஸ் சாரதியும், நடத்துனரும் தற்போது காவத்தை பொலிஸ்நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

(க-8)

# இளைஞர்கள் அடாவடித்தனம் நாளுக்கு நாள் அதிகரிப்பு

### கோப்பாய் மக்கள் அதிருப்தி

(கோப்பாய்)

இளைஞர்களின் அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக கோப்பாய் பகுதி பொதுமக்கள் தரப்பிலிருந்து அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பருத்தித்துறை வீதியில் கோப்பாய் பழைய தபாற்கந்தோரடிக்கும், கோப்பாய் சந்திக்கும் இடையில் மாலை வேளைகளிலேயே இவ் அடாவடித்தனங்கள் பெருமளவில் இடம்பெறுவதாக அப்பகுதிமக்கள் மேலும் புகார் தெரிவித்துள்ளனர்.

தனியார் கல்விநிலையங்களுக்கு சென்றபின் வீடு திரும்பும் மாணவிகள் இத்தகைய செயல்களால் பெரிதும் துன்பமுறுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் இப்பகுதியில் கசிப்புவிற்பனை தாராளமாக இடம்பெறுவதாகவும் கசிப்பு அருந்திவிட்டு வீதி ஓரங்களில் அமர்த்திருப்போர் வீதியில் பயணிப்பவர்களுக்கு இடைஞ்சல் விளைவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-79)

## தினசரி தியானம்

### அருள்பற்று

அருளாகி நின்றசுகம் ஆகாமல் ஐயோ
இருளாகி நிற்க இயல்போ பராபரமே

- தாயுமானவர்

மண்ணுலகினின்று விண்ணுலகுக்கு மனிதனை எடுத்துச் செல்லுவது அருளபற்று. அக் ஞான இருளினின்று ஞான ஒளியில் அது கொண்டு சேர்க்கிறது. அருள் நாட்டம் வருகிறபொழுது மனிதன் கீழ்மையை அகற்றத் தீர்மானித்துக் கொண்டான் என்பதாகிறது. அருள் நாட்டம் இல்லை என்றால் மனிதன் இன்னும் விலங்குத் தன்மையிலேயே திளைத்திருக்கின்றான் என்று அது நிரூபிக்கிறது. அருள் பற்றினின்று அறமும், இரக்கமும், தூய்மையும், அன்பும் தோன்றுகின்றன.

- ஸ்ரீமத்சுவாமிசித்பவானந்தர்

சாவகச்சேரி சம்பவம்

## மிதிவெடியில் சிக்கிய வயோதிப பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுப்பின்பக்க பற்றையை துப்புரவு செய்து கொண்டு இருந்தபோது பற்றைக்குள் புதைக்கப் பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் துரைச்சாமி. லட்சுமி (வயது 51) என்ற வயோதியப்பெண்மணி ஒருவர் முழங்காலுக்கு கீழ் தனது காலை இழந்துள்ளார்.

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியில் நேற்று முன் தினம் காலை 9.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப் பட்டவயோதிபப் பெண் யாழ்.போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-06)

## இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு
## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

# ஆய்வரங்கு - 2002

பொருள் : "சிலப்பதிகாரத்திற் பண்பாட்டுக் கோலங்கள்"

நாள்: ஜூன் 22, 23, 24 ம் திகதிகள் (மூன்று தினங்கள்)

நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 5.30 மணிவரை

நிகழ்விடம்: கைலாசபதி கலை அரங்கு, யாழ். பல்கலைக்கழகம்

## தொடக்க வைபவம்

**22.06.2002 சனிக்கிழமை காலை 9.00மணி**

தலைமை : பேராசிரியர் அ.சண்முகதாஸ்
பீடாதிபதி/ பட்டப்பின் படிப்புகள் பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

பிரதம விருந்தினர் : மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன்
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்.

சிறப்பு விருந்தினர் : பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.

ஆசியுரை : சிவஸ்ரீ என்.நகுலேஸ்வரக் குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்,
நகுலேஸ்வரம்.

வரவேற்புரை : திரு. க.பரமேஸ்வரன்
செயலாளர்,
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு.

தொடக்கவுரை : பேராசிரியர் சி.பத்மநாதன்
வரலாற்றுத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

தொடக்க ஆய்வுரை : பேராசிரியர் அனுராதா செனிவீரத்ன
வரலாற்றுத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

தமிழக அறிஞர்கள் இருவரும், பேராதனை, மட்டக்களப்பு, தென்கிழக்கு, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த தமிழறிஞர்களும், இவ் ஆய்வரங்கு அமர்வுகளில் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

மூன்று தினங்களிலும் மாலை 6.30 மணி தொடக்கம் சிறப்பான இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இலக்கிய ஈடுபாடுள்ளவர்களையும், கலை ஆர்வலர்களையும் இந் நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248 1/1, காலி வீதி,
கொழும்பு - 4.

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்.

(C/4436)



# YOGI HOME SCIENCE ACADAMY
## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.

- மனையியல் புதிய பிரிவு வகுப்புக்கள் 21.06.02 அன்று முதல் ஆரம்பமாக உள்ளது.
- விசேட பயிற்சி நெறியாக முக ஒப்பனையும் நவீன தலை அலங்காரங்களும். (15 வகுப்புக்கள் மட்டும்)

❖ சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம்


(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)

(5445)



# யாழ் - கொழும்பு சேவை


யாழ் - கொழும்பு போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகள் தங்களுடைய ஆசனப் பதிவுகள் மற்றும் விசேட போக்குவரத்து சேவைகளுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி



## தணிஸ் ரெக்ஸ்

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை

தொலைபேசி : 021 - 2955



[C/4425]


### தீவுப் பகுதிகளுக்கு...

இதனைத் தொடர்ந்து கண்காணிப்புக் குழுத்தலைவர் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப்பேச்சு நடத்தியிருந்தார்.

இதனை அடுத்து நிபந்தனைகள் அற்ற நிலையில் இன்று தீவுப்பகுதிக்கு விடுதலைப் புலிப்போராளிகள் செல்லவுள்ளனர்.

இவர்கள்அல்லைப்பிட்டி, மண்கும்பான் சாட்டி, புளியங்கூடல், தம்பாட்டி, சரவணை,சுருவில் வேலணைத்துறையூர் ஆகிய இடங்களுக்கு செல்லவுள்ளனர்.

இவ்வாறு செல்லவுள்ள விடுதலைப் புலிஇயக்க உறுப்பினர்களுக்கு வரவேற்பளிக்கப்படுவதைத் தொடர்ந்து வேலணைத்துறையில் பிற்பகல் 3மணிக்கு பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

நாளை 18ம் திகதி காலை 10 மணிக்கு புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயத்திலும் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 7 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் 19ம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3மணிக்கு நயினாதீவிலும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

34 விடுதலைப் புலி உறுப்பினர்கள் தீவுப்பகுதிக்குச் செல்கின்றபோதும் அவர்களில் 14பேர் தீவுப்பகுதியில் தங்கியிருந்து அரசியல் பணிகளைக் கவனிப்பார்கள் என்றும் 20பேர் மூன்று நாட்கள் அங்கு தங்கியிருந்த பின்னர் யாழ்ப்பாணம் திரும்பவுள்ளார்கள் என்றும் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்துள்ளார்.(ம)


வன்னியில் விற்பனை ஆகின்றது.
லாலா சோப் எமது தயாரிப்பான சண்சயின் சோப்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி


## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக புவியியல் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று பி.ப 3 மணிக்கு புவியியல் துறை மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று இடம் பெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சி.ஜெயசங்கர் "உலகமயமாதலும் மூன்றாம் உலக நாடுகளில் அதன் தாக்கமும்" எனும் பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரும் வருகை தரும்படி அழைக்கப்பட்டுள்ளனர். (த)

### வடமராட்சியில்...

இப் பரிவர்த்தனை நிலையத்தின் மூலம் சுமார் 130 இணைப்புகள் வழங்கப்படவுள்ளதாகவும் நேற்று வரை நால்வர் மட்டும் இணைப்புப் பெற பணம் செலுத்தியுள்ளதாகவும் ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

### சேதமுற்ற ...

யாவும் பற்றைக் காடாகக் காட்சியளித்தது.

அமைச்சர் இம்தியாசுடன் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என்.கே.சிவாஜிலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ)

உலக கிண்ண கால்ப்பந்தாட்டப் போட்டியில்

# ஸ்பெயின், செனகல் அணிகள் கால் இறுதி போட்டிக்கு தகுதி


(ஒய்ட்டா)

தற்போது நடைபெற்று வரும் உலகக் கிண்ண உதைப்பந்தாட்டத்தில் இரண்டாம் சுற்றுப் போட்டிகளில் ஸ்பெயின், செனகல், அணிகள் மோதி கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

ஸ்பெயினுக்கும் அயர்லாந்திற்கும் இடையில் நடந்த போட்டி மேலதிக நேரத்தை அடைந்த நிலையில் இரு அணிகளும் எந்தவித கோல்களும் எடுக்காத போதும் பெனால்டி முறையில் விளையாடி ஸ்பெயின் அணி 3:2 என்ற நிலையில் கால் இறுதிக்கு தெரிவானது. கால் இறுதியில் ஸ்பெயின் இத்தாலியை அல்லது தென் கொரியாவுடன் மோதும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மற்றைய போட்டியில் சுவீடனுடன் மோதிய செனகல் அணி 2:1 என்ற நிலையில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தெரிவானது. செனகல் அணி கால் இறுதியின் போது துருக்கியுடன் அல்லது யப்பானுடன் மோதும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)


# கண்ணீர் அஞ்சலி



பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. இ. தவராசா அவர்களின் தந்தையார் **திரு. சின்னவன்-கிருஷ்ணன்** அவர்கள் காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்

தலைவர், பணியாளர்கள்
பனை அபிவிருத்திச்சபை

(C/4439)



# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் **திரு. தம்பிராசா செந்தில்ராசா (சிவா)** அவர்கள் 13.06.2002ல் காலமாகியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் அவரதம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்

தலைவர், பணியாளர்கள்
பனை அபிவிருத்திச்சபை

(C/4438)

வலம்புரியின் வாரமலர் Sankunatham பக்கங்கள் - 16

# சங்கு நாதம்

சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி:- 03 திங்கட்கிழமை (17.06.2002) தொலை பேசி 3378 நாதம்:- 17

### அமெரிக்கா- இந்தியா- சீனா

# முக்கூட்டு வல்லரசுகள் சேர்ந்து புலிகளை ஒடுக்குவதற்கு திட்டம்





நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# அமெரிக்கா- இந்தியா- சீனா

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைப் பற்றி ''இந்த நூற்றாண்டின் உலகத் தமிழ்த்தலைவன் பிரபாகரன். சங்க இலக்கியங்கள் பேசிய தமிழ் வீரமறவன் தற்போது ஈழுத்தில் பிறந்துள்ளான் அவனே பிரபாகரன்'' இது மூத்த தமிழ்க் காவலர் கா.ஆ.பெ.விசுவநாதம் கூறிய கருத்து.

விசுவநாதம் அவர்கள் இன்று இல்லை. தலைவர் பிரபாகரன் பற்றி அவர் மேற்கண்டவாறு கூறிய போது அவருக்கு வய்து 90. முதிர்ந்த ஞானம்' பட்டறிவு என்பவற்றின ஊடாக ஓர் தீர்க்க

னாள் பிரதமர் இந்திரா காந்தி அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்தார். யூலைக் கலவரத்தில் தமிழ் மக்கள் அகதிகளாக வடக்கு நோக்கி வரமுடியாது இருந்த போது ''சிதம்பரம்'' கப்பலை அனுப்பி தமிழ் மக்களை வடக்குக்கு அனுப்பி வைத்தார்.

சிதம்பரம் கப்பலை அனுப்பி வைத்ததோடு இந்தியாவின் தலையீடு ஆரம்பமாகியது. அதற்கு முன் தமிழ்த்தீவிரவாதிகளுக்கு இந்தியா ஆயுதம் கொடுத்ததாக- இராணுவப் பயிற்சி கொடுத்த த்ாக மறைமுகத் நகவல்கள்

தியப்படைகள் தமது மிலேச்சத் தனத்தை கட்டவிழ்த்து விட்டன என்பதே உண்மை. இதனால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள்.

தமிழினம் தனது விடுதலைக்காக தன்னாட்டுப்படைகளுடன் மட்டுமன்றி அமைதிஎன்ற பேரில் வந்து அமளி ஏற்படுத்திய அண்டை நாட்டுப்படையுடனும் போராடவேண்டிய ஓர் சூழ் நிலை ஏற்பட்டிருந்தது. சுருங்கக் கூறின் விடுதலைப் புலிகள் இரு நாட்டுப் படைகளுடனும் போராடிய அனுபவம பெற்றவர்கள். அதி

ஒத்திகைகள் எல்லாம் நமக்கும் ஏற்படலாம் என புலிகளுக்கு எதிராக இலங்கை அரசுக்கு ஆயுதம் வழங்கிய நாடுகள் கருதின.

### அச்சத்திற்குக் காரணம் புலிகளின் தாக்குதல் திறனே

உலகில் பல நாடுகளில் பல தீவரவாத அமைப்புக்கள் இயங்குகின்றன. அவ்வாறு இயங்குகின்ற தீவிரவாத அமைப்புக்களிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிறை வித்தியாசம் உண்டு. ஏனை

கூடாது என்பது இந்தியாவின் நிலைப்பாடாக இருந்தது எனினும் அந்த நிலைப்பாடு புலிகளுக்கு எதிரான கொள்கையால்



# முக்கூட்டு வல்லரசுகள் சேர்ந்து

தரிசனத்தை விசுவநாதம் அவர்கள் கூறியிருந்தார் என்பதை இப்போது உலகம் உணர்ந்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு



வெளியாகி இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவை தமிழ் மக்கள் சார்பாக நடந்த சம்பவங்கள். ஈழத்தமிழர்களுக்கு இந்தியா உணவுப் பொருட்கள்ளை அனுப்ப முன்வந்த சமயம் அப்போது பிரதமராக இருந்த காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ இந்தியாவில் எத்தனையோ ஏழை மக்கள் உணவுப் பஞ்சத்தால் வாடுகின்றனர். இந்தியா விரும்பினால் உணவுப்

லும் இருநாட்டுப் படைகளுடன் போராடி வெற்றி பெற்ற அனுபவம் என்பது அவ்வமைப்பை மேலும் பலப்படுத்த உதவியதுடன், உலகத்தின் பார்வையிலும் முக்கியத்துவம் பெறலாயிற்று.

### ராஜீவ் காந்தி கொலை

இந்திய அமைதிப்படை ஈழ மண்ணிற்கு வந்து தமிழ் மக்களைக் கொன்றொழித்த வடுவை

அமைப்புக்கள் தாம் வாழ்வதற்காகப் பேராடுகிறார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் தமிழினம் வாழ்வதற்காக தம்மைத் தியாகம் செய்கின்றனர். தன்னையே அழித்து தாக்குதல் நடதது கின்ற ஓர் போராளிக்குப் பின்னால் இருக்கக் கூடிய தேவைப்பாடு எதுவாக இருக்கும். இதற்கான விடையை நாம் கேட்டுக் கொள்ளாவிட்டாலும் உலக நாடுகள் குறிப்பாக அமெரிக்கா போன்ற

மாற்றப்பட்டு தனது ஆதரவோடு புலிகளுக்கு எதிரான போக்குடைய நாடுகள் தன் சார்பில் இலங்கைக்குள் நுழைவதை இந்தியா விரும்பியது. அதன் வெளிப்பாடாகவே அமெரிக்காவின் ஆதிக்கம் இலங்கைக்குள் அதிகரித்து வருவதாகும்.

நோர்வேயின் சமாதான முயற்சியுடன் இலங்கைக்குள் அமெரிக்காவும் கூடவே நுழைந்துள்ளதை மறுப்பதற்கில்லை. தம்

# புலிகளை ஒடுக்குவதற்கு திட்டம்

உலகில் இன்று உயர்ந்து நிற்பதற்கு அந்த அமைப்பில் உள்ள உறுப்பினர்களின் தியாகம் என்பதே முழுமையான காரணமாகும். தலைவனின் வாக்கை வேதவாக்காகக் கருதும் உயரிய பக்குவம் மூவேந்தர் காலத்திலும் இருந்ததாக வரலாறு இல்லை.

தங்கள் தலைவனை ஒரு முறை கண்டுவிட்டால் அதுவே பாக்கியம் எனக் கருதும் விடுதலைப் புலிகளின் மதி நுட்பம், தாக்குதல் திறன், உளவறியும் நுண்ணறிவு போன்றவற்றின் செயற்பாடுகளைக் கண்டு வல்லரசுகளான அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகள் மூக்கில் விரலை வைத்தன.




விடுதலைப் புலிகள் என்றால் ஓர் சிறிய தீவிரவாத அமைப்பு என்றே ஆரம்பத்தில் கருதப்பட்டது. ஆனால் இந்திய அமைதிப் படை இலங்கைக்குள் நுழைந்து விடுதலைப் புலிகளுடன் யுத்தம் நடத்தியதில் இருந்து புலிகள் இலேசான யுத்த பலம் உடையவர்கள் அல்ல. அவர்கள் பராக்கிரம பலசாலிகள், அவர்களை

**விதுரன்**

வெல்வது எளிதன்று என்பதைப் புரிந்து கொண்டது. இதனை இந்தியப் படைத்தளபதிகளாக இருந்த கல்கத், சுந்தர்ஜீ ஆகியோர் எழுதிய தங்கள் அனுபவப் பகிர்வில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

### இந்தியாவின் தலையீடு

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் நேரடித் தலையீடு 1983ம் ஆண்டு யூலையில் தென்னிலங்கையில் இடம் பெற்ற. இனக்கலவரத்தோடு ஆரம்பமாகியது. காலஞ்சென்ற முன்

பொருட்களை அவர்களுக்குக் கொடுக்கட்டும் எனக் கூறியிருந்தார்.

பிரேமதாஸாவின் பேச்சுக்களும், நடவடிக்கைகளும் இந்தியாவிற்கு எதிர்புடையதாகவே இருந்தது. இதனால் ஆத்திரமடைந்த இந்தியா இலங்கையின் வான்பரப்பிற்குள் அத்துமீறி தனது மிராஜ் விமானங்களை அனுப்பி யாழ்ப்பாணத்தில் உணவுப் பொதிகளைப் போட்டது. மிராஜ் விமானம் உணவுப் பொதிகளைப் போட்டபோது யாழ்ப்பாண மக்கள் புதிய ரக விமானம் குண்டு போடுவதாகக் கருதி பதுங்கு குழிகளுக்குள் ஒழிந்து கொண்டதும் உண்டு.

ஈழத்தமிழ் மக்களுக்காக அண்டை நாடான இந்தியா செய்து கொண்ட உச்சமான ஆதரவு அதுவென்றே கூறவேண்டும்.

இவற்றிற்குப் பின்னரே இந்திய அமைதிப்படை இலங்கைக்கள் நுழைந்தது. இந்திய அமை



திப் படையின் இலங்கை வருகை தமிழ் மக்களிற்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டதெனவும், எனினும் அது தலைகீழாக மாறி விட்டது எனவும் அப்போது பிரதமராக இருந்த காலஞ்சென்ற ராஜீவ் காந்தி தன்னிடம் தெரிவித்ததாக கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் செய்தியாளர் மாநாடு ஒன்றின் போது தெரிவித்திருந்தார்.

இந்திய அமைதிப்படை எந்த நோக்கத்தோடு இலங்கைக்கு வந்தது என்பதை அறுதியிட்டுக் கூறுவதோ, ஆராய்து பார்ப்பதோ தேவையற்றதாயினும் முடிவு தமிழ் மக்களுக்கு எதிராக இந்

விடுதலைப் புலிகள் ஒருபோதும் மறந்தாரில்லை. உதவி என்ற பேரில் வந்து தமிழ் மக்களின் உயிரையே பறித்தெடுத்த பாதகச் செயலைப் புலிகள் ஒரு போதும் மன்னித்தது கிடையாது. அவ்வகையில் அமைதிப்படையின் போக்கை கட்டுப்படுத்திப் படைகளைத் திருப்பித் தனது நாட்டுக்கு அழைத்திருக்க வேண்டிய அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அதணைச் செய்யத் தவறிவிட்டார். இதனால் அவருக்குத் தண்டனை வழங்கவேண்டிய சூழ்நிலை உருவாகியிருந்தது. பாரத மக்களைப் பொறுத்தவரை, குறிப்பாக தமிழ் நாட்டு மக்களைப் பொறுத்தவரை ராஜீவ் காந்தியின் மரணம் விருப்புடையதல்ல. அது அவர்களுக்கு தீராத ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் அமைதிப்படையினால் கொல்லப்பட்ட, கற்பழிக்கப்பட்ட, சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்ட, சொத்துக்களை இழந்த குடும்பங்களுக்கு ராஜீவ் காந்தியின் மரணம் பழிக்குப்பழி என்ற வகையில் ஆறுதலைக் கொடுத்திருககும்.

### உலக நாடுகள் வியப்பு

இந்திய அமைதிப்படை தமிழ் மக்களைக் கொன்றொழித்த போது, கோரத்தாண்டவம் ஆடிய போது தமிழனுக்கு நாடா, நகரமா நீதியார் கேட்பது என்பது போல் மௌனித்திருந்த உலக நாடுகள் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட போது வியந்தன.

தமிழனுக்கு அநீதி விளைவிக்கப்பட்டால், அந்த அநீதிக்கு துணைபோனால் அது வல்லரசாக இருந்தாலும் தண்டனை உண்டு. அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவே முடியாது என்பதை அத்தண்டனை என்பது காலம் கடந்தும் அதாவது யாழ்ப்பாணத்துக் கல்வித் திணைக்களங்கள் அரியஸ் கொடுப்பதற்கு எடுக்கின்ற காலமாகக் கூட அது இருக்கலாம் என்பதனை உலக நாடுகள் புரிந்து கொண்டன.

அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பிய பிரதமர் ராஜீவ் காந்திக்கு நடந்த கதையைக் கேட்ட, இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்கும் நாடுகளுக்கு கிடுநடுக்கம் ஏற்படலாயிற்று. ராஜீவ் காந்திக்குத் தண்டனை வழங்குதவற்கு எடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள், அதற்கான

வல்லரசுகள் அதனை அறியாமல் இருக்கப் போவதில்லை. அந்த அறிவுக்கான தேடலில் கிடைக்கின்ற விடை தமிழினம் தனக்கென்ற சுய கௌரவத்திற்காக எதிர்காலச் சந்ததி உரிமையோடு சுதந்திரமாக வாழ்வதற்காகச் செய்கின்ற தியாகத்தின் உச்சக் கட்டமே அதுவென உணர்ந்து கொள்கிறது. இத்தகைய தியாகத்தாலேயே அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் அச்சம் கொள்கின்றன.

### வல்லரசுக்ளின் கூட்டு

விடுதலைப் புலிகள் பற்றிய பய உணர்வு ராஜீவ் காந்தியின் மரணத்தோடு ஏற்பட்டதாயினும் கொலனாவைத் தாக்குதல், மத்திய வங்கிக் குண்டு வெடிப்பு, ஆனையிறவு அடி, கட்டுநாயக்கா விமானத் தளம் மீதான தாக்குதல் போன்றவை அமெரிக்காவையே நிலைகுலையச் செய்தன.

கடல், தரை, ஆகாய வழிகளில் தாக்குதல் நடத்தக்கூடிய அரசுடன் விடுதலைப் புலிகள் போராடுவது என்பது ஒருபுறம். ஆனால் உச்சப் பாதுகாப்புடன் இருக்கக் கூடிய கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குள்ளேயே புகுந்து விளையாடுவது என்பது தூரதர்ஷன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட ''ஓம் நமச்சிவாய'' நாடகத்தில் வருகின்ற காட்சியைப் போன்றதே தவிர அது கற்பனையிலும் எட்டப்பட முடியாத தாக்குதலாக அமைந்துள்ளது.

இத்தகைய தாக்குதலினால் உலக நாடுகள் குறிப்பாக இலங்கைக்கு ஆயுத, இராணுவ உதவிகளை, ஆலோசனைகளை வழங்கிவரும் நாடுகள் பெரும் அச்சம் கொண்டன. எனினும் தமது அச்ச உணர்வை வெளிக் காட்டவோ புலிகளின் கோரிக்கை நியாயமற்றது எனக் கூறவோ அந்நாடுகளால் முடியவில்லை. இதன் காரணமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதனூடாக இலங்கைக்குள் நுழைவதும், அதனூடே விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைப்பதும் வல்லரசுகளின் நோக்கமாக இருந்தது.

### அமெரிக்காவுக்கு இந்தியா ஆதரவு

ஒரு காலத்தில் இலங்கை விவகாரங்களில் தன்னைத் தவிர வேறு எவரும் தலையிடக்

மால் விடுதலைப் புலிகளை எதிர் கொள்ள முடியாது என்ற நிலையில் புலிகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டு இலங்கை அரசு அன்னதானத்திற்கு அரிசி தண்டப்போனது போல் அமெரிக்கா, சீனா, இந்



தியா என ஒவ்வொரு நாடாக அலைகிறது. அமெரிகாவைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகளின் விடயத்தை தனித்துக் கையாள்வதற்கு விருப்பமில்லை. ராஜீவ் காந்திக்கு நடந்த கதி நல்ல ஞாபகத்தில் இருக்கிறது. அதேபோல் இந்தியாவுக்குப் புலிகளின் விடயத்தில் கடும் போக்கைக் கொண்டிருப்பதாக தமிழகத்திற்குத் தெரியாத வகையில் நடந்துகொள்ளவேண்டும். சீனாவைப்பொறுத்த வரை இலங்கைக்குக் கொடுத்த ஆயுதத்தால் அரசுக்கு அவமானம் வரக்கூடாது. இத்தகையதோர் நிலையில் அமெரிக்கா, இந்தியா. சீனா ஆகிய முக்கூட்டு வல்லரசுகள் விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்காக ஒன்று சேர்ந்துள்ளன். இக்கூட்டின் வெளிப்பாடே அமெரிக்காவுடனான இலங்கை ஒப்பந்தம், பிரதமர் ரணிலின் இந்திய விஜயம், சனாவுடனான இராணுவ உதவி உடன்படிக்கை போன்றவையாகும்.

ஒட்டு மொத்தத்தில் விடுதலைப்புலிகளின் பலம், உள்ளூர தமக்குள் வெறுப்புக் கொண்ட மூன்று வல்லரசுகளை ஒன்றிணைத்துள்ளது எனில் அவர்களின் பலம் எத்தகையது என்பதை உணர முடியும்.

# பத்திரிகையில் கலை இலக்கிய விமர்சனங்கள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவினால் நடாத்தப்பட்டுவரும் இலவச பத்திரிகையாளர் கற்கைநெறி பூர்த்தியாகும் கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளையில் யாழ் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை (26.05.2002) அன்று ''பத்திரிகையில் கலை இலக்கிய விமர்சனங்கள்'' என்ற தலைப்பில் ஆற்றிய கருத்துரையின் சாரத்தையும், பயிற்சி பெறுபவர்கள் சார்பில் ஒரு சிலரின் இப்பயிற்சிநெறி பற்றிய கருத்துக்களையும் இங்கே தருகின்றோம்.



சில பத்திரிகைகள் செய்திகளோடும், செய்தி விமர்சனங்களோடும் நின்று விடுகின்றன. சில வியாபாரப் பத்திரிகைகளாக இருக்கின்றன. ஏனைய பத்திரிகைகள் கலை இலக்கியம் தொடர்பான விடயங்களையும் தாங்கி வெளி வருகின்றன. இவ்வாறு ஒரு பத்திரிகை பல துறைகளை உள்ளடக்கியதாக வெளிவரும் பொழுது கலை இலக்கிய விமர்சனங்களும் அதில் இடம் பெற்று விடுகின்றன. இதை எழுதும் போது சிலவற்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பத்திரிகை நிறுவனத்தில் உதவிப் பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பவர்கள் கூட இவற்றை எழுதும்படி ஆசிரியரால் பணிக்கப்படலாம். எனவே அவை பற்றிய உத்திகள் ஒரு பத்திரிகையாளனுக்குக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். அந்தப் பகுதியில் அனுபவ முதிர்ச்சி பெற்றவர்களின் எழுத்துக்களை அப்படியே இனங்கண்டு கொள்ள முடியும்'. சரியானதைச் சரியென்றும் பிழையானதைப் பிழை என்றும் நேரே சொல்கின்ற திறன் விமர்சனங்களுக்கு வேண்டும். இப்பண்புக்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த சுப்புடு சிறந்த உதாரணமானவர். சில விமர்சகர்கள் அப்படைப்பிலுள்ள உயர்வான நல்ல விடயங்களைக் கூறி விட்டு குறைகளைக் கண்டும் காணாததுமாக விட்டு விலகுகிறார்கள். அது சிறந்த விமர்சகனுக்குரிய பண்பு அல்ல.

விமர்சகன் படைப்பாளிக்கு உதவி புரிபவன். அவன் பணி விடயங்களை நுனித்து நோக்கிச் சரியாக எடை போடுவதாக அமையும் போது நெறியாளனோ, இலக்கிய கர்த்தாவோ முன்னேற்றப் பாதையில் சரியானதை சரியான தருணத்தில் வெளிக்கொணரும் திறமையை அடைவான். ஆனால் விமர்சகன் ஒருவரில் வெறுப்புக் கொண்டு தீமை செய்வதற்காக எழுதுவானானால் அதை மன்னிக்க முடியாது. உண்மையை நேரடியாக எடுத்துச் சொல்வது ஒரு முறை. அல்லது அதைப் பிரதி வாதங்களுடன் தர்க்க ரீதியாகச் சரியான காரணத்துடன் எடுத்துச் சொல்வதனால் அது நிச்சயமாக ஏற்றுக் கொளளப்படும்.

கலை, இலக்கிய விமர்சனங்கள் செய்யும் போது சில அளவு கோல்கள் இருக்கின்றன. இவற்றைப் பத்திரிகையாளர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். நோக்கு, விடயம் பற்றிய தெளிவான அறிவு என்பன அவனுக்கு அடிப்படையான தகுதிகளாகக் கொள்ளப்படுகின்றன. ஒரு கலையை அல்லது இலக்கியத்தை நாம் ஏன் படைக்கின்றோம் என்ற வினாவுக்கான விடையாக சமூக மாற்றத்திற்காகவும், சமூகச் சீர்திருத்தத்திற்காகவும் என்பதே பொருத்தமாக அமைகிறது. ஆரம்ப கால மனிதன் அழகுணர்வுக்காகக் கலைகளை ஆக்கினான். வக்கிர புத்தி உள்ளவர்களான மனிதர்களை மாற்ற அழகுணர்வே உதவுகிறது. எனவே அழகுணர்வைத்தூண்ட வேண்டிய தேவை சமூகத்தில் உள்ளது. மனித விழுமியக்கல்வியும் அழகுணர்வும், சமய உணர்வும் அவனைப் பரவசமடையச் செய்ய கலை ஊடகமாக இருந்தது. ஒரு காலத்தில் அது கட்டு மீறி விரசமாக மாற முற்பட்டபோது அதை நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் கலை கலைக்காக அல்ல, கலை மக்களுக்காக என்ற கோட்பாடு பிறந்தது.

இதேவேளை அறிவினை ஊட்டும் ஊடகமாகவும் கலை இலக்கியங்கள் உதவுகின்றன. எனவே ஒரு கலை மக்கள் பண்புடையதாகவும், மக்கள் பணியுடையதாகவும் இருக்க வேண்டுமென்பதில் வேறுபட்ட கருத்துகளுக்கு இடமிருக்க முடியாது. சூனியத்திலிருந்து எதுவுமே எழுவதில்லை. மக்கள் பண்புக்கு உதாரணமாக கலையோ, இலக்கியமோ இருக்கும் போதே அதைப் பார்ப்பவர்களோ, படிப்பவர்களோ விளங்கிக் கொள்வார்கள். அது அவர்களின் மொழியில் படைக்கப்படும் பொழுது வெற்றி பெற்று மக்கள் கலையாகிறது. தமிழ் மொழியில் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்று இரு தன்மையான பயன்பாடுகள் இருப்பதனால் நாவல், சிறுகதை எழுத்தாள்ர்கள் இச்சிக்கலுக்குள் அகப்படுகிறார்கள்.

ஒரு இலக்கிய ஆசிரியனுக்குத் தேவையான விடயம் அவன் சாதிக்க வேண்டியவைகள் மக்களின் துன்ப துயரங்களைத் தீர்ப்பதற்கு ஒரு வழியைக் காட்டுவதே ஆகும்.

**M.S.S. கீர்த்தி**

கலை பரவசத்தை ஏற்படுத்தும் போது அது கீழ்த் தரமான இன்பமாகவோ, தற்காலிக மானதாகவோ இருக்காமல், உடலுக்கும், உள்ளத்திற்கும் மகிழ்வூட்டுவதாக அமைய வேண்டும். அவற்றைக் கருத்தில் கொண்டு படைக்கப்படும் படைப்புகளுக்கு திறனாய்வு செய்கின்ற போது இதழியலுக்கும். மொழிக்கும் இடையிலான தொடர்பைப் பேணி ஆக்கபூர்வமான கருத்தாடல்களை மேற்கொள்ள வேண்டும். எனவே பத்திரிகையில் தொழில் புரியும் ஒருவனுக்கு பல முகங்களும், வேறுபட்ட பார்வைகளும் அவசியமாகும் - என்றார்.

இப்பத்திரிகையாளர் பயிற்சி நெறியில் மிகுந்த ஆர்வத்துடன் மாணவ மாணவிகள் பங்கு கொள்வதைப் பார்க்குமிடத்து குடாநாட்டின் பத்திரிகைத்துறை வளர்ச்சி இனி வருங்காலங்களில் மேலும் விருத்தி பெற்றுப் பல ஜாம்பவான்களை உருவாக்கும் என்பதில் சந்தேகங்கொள்ள இயலாது. பயிற்சியாளர்கள் சிலரின் உள்ளக்கிடக்கைகளை அறிய அவர்களிடம் வினாத்தொடுத்த போது: ''இங்கு நாம் பெற்ற பயிற்சியின் மூலம் புதிய விடயங்களை அறியவும், பத்திரிகைத்துறை சார்ந்தோரின் அனுபவப்பகிர்வுகளைக் கேட்கவும், அதிலுள்ள நெளிவு சுழிவுகளை ஓரளவு தெரிந்து கொள்ளவும் முடிந்தது. கையெழுத்துப் பிரதியை உருவாக்கி எமது சுய ஆற்றலை வளர்க்க முடிந்தது. மேலும் பத்திரிகைகளை வாசிக்கும் பழக்கம் கிராமப் புறங்களில் குறைவாக உள்ளது. அப்படிப் படிக்கிறாவர்களும் அரசியல், சினிமாப் பகுதிகளையே ஆர்வத்துடன் பார்க்கிறார்கள். பாடசாலைகளில் மாணவர் மத்தியில் பொது அறிவையும், வாசிப்புப் பழக்கத்தையும் வளர்க்குமுகமாக காலைவேளையில் தலைப்புச் செய்திகளைக் கொடுக்கின்றோம் என்று தெரிவித்தார் ஆசிரியரான இ.ஜெயக்குமார்.

எழுத்தாளர் தாட்சாயிணியை இது குறித்துக் கேட்ட போது: பத்திரிகைகளில் பெண்கள் பெயர்களில் பல விடயங்களை ஆண்கள் தான் எழுதுகிறார்கள். இதனால் அச் செய்திகளுக்கு உரிய உயிரோட்டமும், உணர்வும் கெட்டு விடுகின்றன. இலக்கியப் பக்கங்களை விட்டாலும் மகளிர் பகுதியிலும் இதே நிலை தான் இருக்கிறது. பெண்கள் தமது ஆளுமையை வளர்க்கக் கூடியதாகத் துன்பங்களிலிருந்து வெளியேறி மகிழ்ச்சிகரமான வாழ்வை முன்னெடுக்க ஆலோசனை வழங்குவனவாக பெண்களுக்கான செய்திகள் அமைய வேண்டும். பெண்களின் கவர்ச்சியை வியாபாரம் ஆக்காது, அவர்களுக்கு எழுத்துலகில் சந்தர்ப்பம் வழங்கி அவர்களின் பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்தால் அது நம்பகத்தன்மையின தாகவும், சமுதாய சம நிலையைப் பேணுவதாகவும் இருக்குமென நம்புகின்றேன் என்று கூறினார்.

ஜே.திவாகர் பயிற்சி பற்றிய அனுபவங்களைக் கூறுகையில்; பத்திரிகை சகல துறைகளின் சங்கமிப்பாக விளங்குவதால் இத்துறையைப் பயில வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. அறிவு ரீதியான பல விடயங்களும், செய்திகளின் தன்மைகளும் எழுத வேண்டுமென்ற ஆர்வமும் கிடைத்தது. களப் பயிற்சியிலும் கூடிய கவனம் செலுத்தியிருந்தால் ஒரு பூரணமான நிலையைப் பெற்றிருக்கலாம் என்று கருதுகிறேன். என்றாலும் இருட்டிலிருந்த எம்மை வெளியே கொண்டு வருவதற்கும், திறமைகளை வெளிக் கொணரவும் இப்பயிற்சி எமக்கு உதவியுள்ளது.

பல்கலைக் கழகக் கல்வியை முடித்துக் கொண்ட சுனித்தா என்பவர் பத்திரிகைகள் தொடர்பாகவும், பெண்களின் நிலை தொடர்பாகவும், பயிற்சி தொடர்பாகவும் தெரிவித்த சில கருத்துக்கள்:

சமூகச் சீர்கேடுகளில் இருந்து மக்களைக் காப்பதற்குப் பத்திரிகை மூலம் குரல் கொடுப்பதே ஒரே வழியாகும். இளைஞர்கள் மதுவுக்கு அடிமையாகவும் சிகரெட் பிடிக்கவும், சமூக விரோதச் செயல்களில் நாட்டங் கொள்ளவும், ஏதுவான சூழ் நிலைகளை மாற்றி பெற்றோருக்கு இது தெளிர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு பத்திரிகைகளுக்கு உண்டு. பெண்கள் மகளிர் பக்கத்தையும், சினிமாப் பக்கத்தையுமே அதிகம் விரும்பிப்படிக்கிறார்கள். சினிமாவில் நடிக, நடிகைகளின் தனிப்பட்ட வாழ்க்கையை அலசாது மேலும் நல்ல விடயங்களை ஊடகங்கள் தரலாம். எமது சமூகம் முன்னேறவில்லை. இதனால் பெண்கள் சமூகக் கட்டுப்பாடுகள் காரணமாகப் பத்திரிகைத்துறையில் முழுமையாக ஈடுபட முடியாதுள்ளது. இனிமேல் அவ்வாறான நிலைமைகள் மாற்றி அமைக்கப்படுமென நம்புகிறேன். இப்பயிற்சியின் மூலமாக பத்திரிகை எழுத்துப் பாணிகள், நுட்பங்கள், எழுத்தாளர், பத்திரிகையாளர் அனுபவங்களைக் பெற்றுக் கொண்டோம்.

# கலை இலக்கிய வீதியில்....

எவ்வளவு வசதியீனங்களுக்கும், அவலங்களுக்கும் நடுவேயும் வன்னிப் பகுதியில் வெளியிடப்பட்டுள்ள படைப்பிலக்கியங்கள் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் உன்னதமான இடத்தைப் பெற்றுள்ளன. புத்தக உள்ளடக்கத்திலிருந்து அதன் வடிவமைப்பு வரை கனதியும், தனித்துவமும் கொண்டவையாக இத்தொகுதிகள் உள்ளன. இன்னும் சொன்னால் எல்லா விதத்திலும் இன்றைய இளம் படைப்பாளிகளுக்கும், எழுதிக் கொண்டிருப்போருக்கும் இந்தத் தொகுதிகள் ஆதர்ச ஆக்கங்களாக உள்ளன.

அண்மையில் வெளியான 'ஆனையிறவு' கவிதைத் தொகுதி தமிழில் வெளி வந்துள்ள சிறந்த கவிதைத் தொகுதியாகும். களத்திலே நின்ற போராளிகளின் இதய கீதம், அழுத் தமான வரலாற்று ஆவணம், ஏற்கனவே வெளி வந்த 'வெளிச்சம்' சிறுகதைத் தொகுதிகளும் இத்தரத்தினவே. விடுதலைப் போராட்டத்தை கலாரீதியாகவும், உயிர்ப்புடனும் வெளிப்படுத்தும் இந்தத் தொகுதிகளை மறுபிரசுரம் செய்வது இப்போது மிக அவசியம்.

தற்செயலாக நண்பர் ஒருவரின் கையில் வெளிச்சம் கதைத் தொகுதியைப் பார்த்தேன். தமிழகத்தில் பதிப்பிக்கப்பட்டது. ஈழத்து படைப்பாளிகளின் ஆக்கங்களை அவர்களின் எந்த அனுமதியுமின்றி நூலாகப் பதிப்பிக்கும் முயற்சி தமிழகத்தில் இப்போது அதிகரித்து வருகிறது. உலக ரீதியாக 'புலமைச் சொத்துச் சட்டம்' மிகவும் வலுவானது. கிரியா, இராமகிருஷ்ணன் தனது அகராதி அமைப்பை வெளிநாடு ஒன்று அனுமதியின்றிக் கையாண்டதற்காகச் சட்ட நடவடிக்கை எடுத்தது நினைவில் வந்தது. ஈழத்தின் படைப்புக்களை அனுமதி ஏதுமின்றி தமிழ்ப்படைப்பகங்கள் வெளியிடும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டியது அவசியம். 'ஆனையிறவு' தொகுதியையும், வெளிச்சம் கதைகளையும் வாசித்த போது இன்னொரு எண்ணம் தோன்றிற்று.

இந்த ஆக்கங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்ப்பது மிக அவசியம்.

## சிறுகதைத் தொகுப்புகள்

இலங்கையர்கோனிலிருந்து இன்றைய தரமான படைப்பாளியின் இன்றைய ஆக்கம் வரை 24 கதைகளைத் தேர்ந்தேடுத்த சிறுகதைகளாகக் குணசேன நிறுவனத்தின் மூலம் நூலாக வெளியிடும் முயற்சில் ஈடுபட்டுள்ளேன். இதை சிங்களத்திலும், முடியுமானால் ஆங்கிலதிலும் வெளியிட எண்ணுகின்றேன். 1990களின் பின்னர் எழுதப்பட்ட சிறந்த கதைகள் சஞ்சிகைகளில் வெளி வந்தன. நூல் வடிவம் பெறவில்லை. இந்தப் படைப்புகள் பற்றிய தகவல்களையும் ஆக்கங்களையம் நான் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்.

இது போலவே ''இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்'' என்ற தலைப்பில் ஈழத்துச் சிறுகதைகளை 1930 - 1993 காலப்பகுதியை மையமாக வைத்து 3 தொகுதிகளாக வெளியிட முயற்சிகள் மேற்கொண்டோம். இதில் 'வெள்ளிப்பாதசரம்', 'ஒரு கூடைக் கொழுந்து' என்ற இரு தொகுதிகள் வெளியாகி விட்டன. மூன்றாவது தொகுதியை மெரு கூட்டி வெளியிட எண்ணுகிறேன்.




இதற்கும் இன்றைய படைப்பாளி களின் ஒத்துழைப்பு எனக்குத் தேவைப் படுகிறது.

## ஈழத்துத் தமிழ் இலக்கிய செல் நெறி

பேராசிரியர் சிவலிங்கராசாவின் 'ஈழத்துத் தமிழ் இலக்கிய செல் நெறி' (19ஆம் நூற்றாண்டு வரை) என்ற நூலைப் படித்தேன். அருமையான நூல். இதைப் பற்றி தனியாக விரிவாக எழுதுவேன். தமக்குக் கற்ப்பித்தவர்களின் விரிவுரைகளை புள்ளியும் மாற்றாமல் இத்துறை நூல்களாக வெளியிட்டோரிடையில் பேராசிரியரின் இந்த ஆய்வு நூல் தனித்தும் சிறந்தும் நிற்கிறது.

சமூகவியல், மானிடவியல் பின்னனியிலே பக்கச்சார்பற்ற நிலையில் ஈழத்து இலக்கிய வரலாறு ஒன்று எழுதப்பட வேண்டிய தேவையின் விளைவாக இந்த நூல் உருவாகியுள்ளது. புதிய ஆய்வுத் தகவல்களை, ஆதாரங்களை இந்நூலில் சிவலிங்கராசா வெளிப்படுத்துகிறார்.

புத்தக அடுக்குகளுள் ஆய்வு மேற்கொள்ளும் அறிவாளிகள் நடுவே சிவலிங்கராசா மிக வித்தியாசமானவர். அவரை ஒரு 'ஆவணக் களஞ்சிய' மாகஅவரோடு பேசிக்கொண்டிருந்த சில நிமிசங்களிலேயே என்னால் வியக்க முடிந்தது. இந்த மனிதர்




**செ.யோகநாதன்**

எவ்வளவு பயனுள்ள விடயங்களை தமிழியலுக்கும், வர்லாற்றுக்கும் மிகுந்த சிரமப்பட்டுச் சேகரித்து வைத்திருக்கிறாரே என்ற பிரமிப்பும் உண்டாகிறது. ஈழத்தமிழியல் இவர் போன்றோரையே இன்று வேண்டி நிற்கிறது.

## செங்கையாழியானின் சிறுகதை வரலாறு

வெளிவர முதலே சண்ட மாருத வாதப் பிரதிவாதங்களை உண்டாக்கி விட்டது. செங்கையாழியான் எழுதிய சிறுகதை வரலாறு. சில சிறுகதை ஆசிரியர்கள் தம்மைப் பற்றிச் சரியாகக் குறிப்பிடவில்லை என்று அவர் மீது பாய்கிறார்கள். அது சரி, இலங்கை கதைத் தொகுதிகளை தாம் விரும்பியவர்களை உள்ளடக்கித் தொகுப்பவர்கள் தரமான எழுத்தாளர்களை வேண்டுமென்று புறக்கணிக்கும் போது அத்தொகுதியில் இடம் பெறுவோர் இது பற்றி மௌனம் காப்பது நீதியாகுமா?

(தொடரும்)

## ஊகித்துக் கொள்ளுங்கள்



எம் பசுக்கள்
கொல்லப்பட்ட தம்
கன்றுகளுக்காய்..
சுடுகண்ணீரைச்
சொட்டின
சோர்ந்தன

கன்றுகளைத்தான்
முடியாதெனினும்
நீதியையேனும்
உயிர்ப்பிக்க வேண்டி
'மனு' - நீதி அரசுக்கு
மனுச் செய்தன

மனு - நீதி அரசு
பசுக்களின் மனுக்களைப்
பரிசீலித்தது
நீதி வழங்கவும்
நிச்சயித்தது

அடுத்த விடியலில்....
தேசியத் தேரின்
அசோகச் சக்கரத்தின்
அடியில்
மாண்டு கிடந்தன
மனுச்செய்த பசுக்கள்

# ஆளும் சாகாமல் நோயும் தீராமல் வைத்தியம்!

## உளவியல் போரில் பிரதமருக்கு வெற்றி!!

இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்போம் என்று பொதுத் தேர்தலில் ஐ.தே.க கூறி வந்தது. தேர்தலின் பின்னர் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையையும் செய்தது. சமாதானப் பேச்சுகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் அதற்கிடையே பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன சீனாவுக்கு ஆயுதங்கள் வாங்கச் சென்றுள்ளார். மீண்டும் யுத்தம் ஏற்படுமென்பதையே இது உணர்த்துகிறது. நாரகேன் பிட்டி, பாமன்கடை போன்ற இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன. இது எதனைக் காட்டுகிறது? இவ்வாறு சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண கேள்வி எழுப்பியிருக்கிறார். இவைகள் மீண்டும் யுத்தம் ஏற்பட விருப்பதையே காட்டுகின்றன. விடுதலைப்புலிகளும் சமாதானம் என்று கூறிக்கொண்டு போருக்கு ஆயத்தங்களே செய்கின்றனர் என மேலும் தெரிவித்திருக்கிறார்.

### சமாதான நம்பிக்கை

தமிழ்க் கட்சிகளிடமும் விடுதலைப்புலிகளிடமும் சமாதானம் பற்றிய நம்பிக்கையை தோற்றுவிக்கும் விதத்தில் பிரதமர் பேசி வருகின்ற போதிலும் உண்மையில் யுத்தத்திற்கான சூழ்நிலையையே தோற்றுவித்து வருகிறார். இந்தியாவினதும், அமெரிக்காவினதும் உதவியுடன் புலிகளை யுத்தத்தில் தோற்கடிக்கும் முயற்சிகளிலேயே அவர் ஈடுபட்டிருக்கிறார் என்று விமர்சனங்கள் வேறு வெளிப்பட்டிருக்கின்றன.

யுத்தம் ஒன்று ஆரம்பமாகும் பட்சத்தில் வடக்கு- கிழக்கு கடல் பகுதியில் அமெரிக்க யுத்தக் கப்பல்களை நிறுத்தியும், வான் பரப்பில் இந்திய விமானங்களைப் பறக்கச் செய்தும் புலிகளின் மனோதிடத்தை உடைத்து விடுவதன் மூலம் புலகளுக்கு தோல்வியைத் திணிக்க முடியும். அத்துடன் சிங்கள மக்கள் மத்தியில் இக்கருத்து பரவுவது சமாதானத்திற்கு மாறான யுத்த சிந்தனையை தூண்டிவிடும் போது ஐ.தே. முன்னணி மீது அவர்கள் அபிமானம் வளரும் என்பது பிரதமரின் சிந்தனைப் போக்கு என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இவ்வாறு விமர்சனங்கள் கிளம்பியிருக்கும் வேளையிலேயே பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன சீனாவிற்கு விஜயம் மேற் கொண்டிருந்தார். சீனாவிடமிருந்து ஆயுதம் கொள்வனவு செய்யும் ஆயத்தங்கள் பற்றி முன்னரே செய்திகள் வந்திருக்கின்றன. இதற்கான குழுவில் மூவர் அங்கம் வகிப்பதாகவும், அவர்களில் ஒருவர் அரசின் சமாதானசெயற்பாடுகளில் முக்கிய பொறுப்பு வகிக்கும் அதிகாரியென்றும், அவர் உத்தியோக ரீதியாகச் சீனாவுடன் தொடர்புள்ள இராஜதந்திரியென்றும் கூறப்படுகிறது. கடற்படை மற்றும் விமானப் படை அனுபவம் உள்ளவர்களும் குழுவில் உள்ளனராம்.

### அதிரடித் தகவல்

சமாதானச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அமைச்சர் ஒருவரும் ஆயுதக் கொள்வனவில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறாரென்ற தகவல்கள் சமாதானச் செயற்பாடுகளில் நம்பிக்கையற்றவர்களே சமாதானச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற அதிரடித் தகவலையும் தெரிவிக்கின்றன. ஒரு புறம் சமாதானப் பேச்சு. மறு புறம் ஆயுதக் கொள்வனவும் போருக்கான ஆயத்தங்களுமாக இரட்டை வேடக் காட்சிகள் தெரிகின்றன.

திருமலை எண்ணெய்க்குதம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டு விட்டது. உள்நாட்டில் பெற்றோலியப் பொருட்களின் விற்பனையும் அனுமதிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இந்தியா நாட்டங் கொண்டுள்ளதாகச் செய்தியொன்று தெரிவிக்கிறது. அமெரிக்காவுடனான சேவை ஒப்பந்தமும் இறுதியாக்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக புலிகளுக்கு எதிர்ப்பாளர்களாக உள்ளவர்களையும், எதிர்ப்பாளர்களாக மாறக் கூடியவர்களையும் வரிசைப்படுத்தி அவர்களைப் புலிகளின் உத்தேச ஈழப் பிரதேசத்தின் கேந்திர நிலைகளில் நிறுத்தி வைத்து விட்டால் புலிகளின் முயற்சிகள் பலிக்காத நிலை ஏற்படும். அவர்கள் தனி ஈழம் ஒன்றை அமைப்பதற்கு நடத்தக் கூடிய ஆயுதப் போராட்டம் இனிமேல் வெறுமனே இலங்கை அரசாங்கத்தையும் இராணுவத்தையும் எதிர்த்து நடத்துவதுடன் நின்றுவிடாது. ஆனால் அமெரிக்கா இந்தியா உட்பட்ட நாடுகளையும் எதிர்த்து நடத்தப்பட வேண்டும் என்ற கட்டத்திற்கு செல்ல வேண்டிய தேவையைப் புலிகளுக்கு உணர்த்துகிறது. உளவியல் ரீதியான அச்சுறுத்தலாக அமைகிறது

புலிகள் சந்திக்க வேண்டிய தடைகள் இன்னவை என்று பட்டியலிட்டுக் காட்டுவது போல இவைகள் அமைந்தாலும், புலிகளும் இவற்றை உற்று நோக்குவதாயும், மசிந்து கொடுக்காத தமக்கேயுரித்தான போக்கில் தொடர்ந்து செல்வதற்குத் தயாராகவிருப்பதையும் மட்டு -அம்பாறை மாவட்டப் புலிகளின் பொறுப்பாளர் கரிகாலனின் பேச்சுக் காட்டுகிறது. ''மக்களின் ஆதரவு இருக்கும் வரை அமெரிக்கா அல்ல உலகின் எந்த சக்தியாலும் எம்மை எதுவும் செய்து விடமுடியாது''. என்றும் ''விடுதலை கண்ட நாடுகளிலெல்லாம் மக்கள் அனுபவித்த கஷ்டங்களோடு ஒப்பிடுகையில் எமது மக்கள் அனுபவித்த கஷ்டங்கள் ஒன்றும் பெரிதல்ல. வியட்நாமிய தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்கள் அனுபவித்த கஷ்டங்கள் சொல்லில் வடிக்க முடியாதவை எனினும் மக்கள் போராட்டத்திற்கு அளித்த ஆதரவு காரணமாக அந்நாட்டில் உலக வல்லரசான அமெரிக்காவே தோல்வி கண்டது. அண்மைக்காலமாக தமிழர் பிரச்சினையில் அமெரிக்காவும் தேவையற்ற விதத்தில் மூக்கை நுழைத்து வருகிறது'' என்று புலிகளின் 52ஆவது பயிற்சிப் பாசறை நிறைவு விழாவில் சிறப்புரையாற்றிய கரிகாலன் தெரிவித்திருக்கிறார். அதாவது மக்களின் மனங்களில் செய்யப்படும் முடிவுகளை வல்லரசுகளின் போர்த்திறன்களால் வெல்ல முடியாது. மனம் என்பது அணுக்குண்டையும் விட வலியது. ஏனென்றால் அணுகுண்டைச் செய்ததும் அதற்கு இசைவு கொடுத்ததும் மனிதமனம் தான். அந்த மனங்களின் உறுதி நிலைப்பாடு வெல்லும் என்பது புலிகளின் நிலைப்பாடு. இதனை எமக்கும் அமெரிக்காவுக்கும் நினைப்பூட்டும் விதத்தில் கரிகாலன் வியட்நாமில் அமெரிக்கத் தோற்றத்தை நினைப்பூட்டியுள்ளார். கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழ் மக்கள் அனுபவித்த கஷ்டங்களை விட இன்னும் அதிகமாக அனுபவிக்க வேண்டிவரும் எனவும் கூறுவதுடன், அத்து மீறி நடந்து கொள்ளும் எவரும் வரலாற்றிலிருந்து பாடம் படிக்க வேண்டும் என்பதை நினைவூட்டும் விதத்திலேயே அமெரிக்காவின் வியட்நாம் தோல்வியை எடுத்துக்காட்டியுள்ளார்.

சமாதானம் என்னும் தலைப்பில் ஐ.தே.மு.அரசாங்கம் நடத்திவரும் ஆரவாரங்கள் உளவியல் ரீதியாக மக்களைப் போருக்கு தயாரிப்பனவாக உள்ளன. ஒரு போருக்கு தாம் தயாராகி வருவது போன்ற மனோநிலையில் தென்பகுதி மக்களை உணர வைத்துக் கொண்டு சமாதானத்தை முன்னெடுக்கும் கைங்கரியங்களை மேம்போக்காக முன்னெடுப்பது இரட்டைப் பலனைத்தரலாம் என்று அரசாங்கம் கருதுவது போல் தெரிகிறது. இலங்கைப் படைகளுக்கு வெளிநாடுகள் பயிற்சியளிப்பது சாதாரண விடயங்களாகி விட்டன. இந்த வரிரைசயில் இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகள் எமது நாட்டுப் படைகளுக்குப் பயிற்சிகளை வழங்கி வருகின்றன. ஆனால் இம்முறை இந்தியாவிற்கு விஜயம் செய்த பிரதமர் இலங்கைப் பொலிஸாருக்கும் குறிப்பிட்ட சில பயிற்சிகளை இந்தியா மூலம் வழங்குவதற்கு ஏற்பாடுகளை செய்திருக்கிறார். போரிலீடுபடும் இராணுவத்தினருக்குப் பயிற்சி என்பது போல் உள்நாட்டின் சட்ட அமுலாக்கத்துறையினருக்கு வெளிநாடொன்றின் பயிற்சி யென்பது வித்தியாசமானது. பிரபாகரனைக் கைது செய்யும் தனது திட்டத்தில் மாற்றமில்லை என்று இந்தியா மீண்டும் அறிவித்துள்ள நிலையிலும், இந்தியாவின் உளவு நிறுவனமான ''றோ'' பற்றி புலிகள் கொண்டிருக்கும் சந்தேகத்தினடிப்படையிலும் இது அச்சுறுத்தலே.

### வல்லரசுகளின் மேலாதிக்கம்

வல்லரசு நாடுகளுக்கு உள்நாட்டில் பௌதீக ரீதியாகவும், நிர்வாக மட்டங்களில் ஆலோசனைகள் வழியாகவும் இடமளிப்பது ''உலகம்'' பிரபாகரனுக்குகெதிராக நம் பக்கமே நிற்கிறது என்று தென்பகுதி மக்களை நினைக்க வைக்க உதவும். ஐ.தே.மு தலைமையின் செல்வாக்கைப் பாதுகாக்கும். மறுபுறம் இதே செயல்கள் புலிகளின் தளமாகிய தமிழ் மக்ககளை போருக்குத் துணியாத மனநிலைக்குள் தள்ளி விடும். இதனால் தாம் விரும்பிய நிபந்தனைகளுடன் சமாதானத்தைத் திணிக்க அரசுக்கு வாய்ப்பு ஏற்படும் என்று ஆதிக்கச் சிந்தனையாளர்கள் நின்னைப்பர். ஆனால் இந்த நிகழ்ச்சிகளுக்கூடாக வல்லரசுகள் தாம் விரும்பிய படி நாட்டினுள் இடம் பிடித்துக் கொண்டு விட முடியும்.

இறைமையும் கறையான் அரித்தெடுக்கும் பாணியில் அரித்தெடுக்கப்பட்டு விடும். இவற்றினால் பெறப்படும் இறுதி வெற்றி யாருக்கு என்று பார்த்தல் முக்கியமானது. குளத்தைக் கலக்கி மருந்துக்கு இரையாக்கும் முயற்சியா? உலக



மயமாக்கல் ஒரு புறம் நாட்டின் தனித்துவத்தை இழக்கச் செய்து வருகிறது. மறுபுறம் புலிகளை வெல்லும் பூச்சாண்டியில் வல்லரசுகள் நாட்டை தமது விளையாட்டு மைதானமாக்கிக் கொள்கின்றன.

இறைமைக்காகவும் தன்னாதிக்கத்திற்காகவும் உயிரைப் பணயம் வைத்துப் போராடச் சபதம் பூண்ட சக்திகள் பதுங்கிக் கொள்வதும் தெரிகிறது.

தமிழர் தாயகம் கோரிக்கை பற்றி தென்னிலங்கை சக்திகள் பெரும் முஸ்தீபில் இறங்கிய போது பிரதமர் உடனே தலையிட்டார். ''இருப்பது ஒரே தாயகம் தான்'' என்று ஒரே வார்த்தையில் பதில் கூறி எழுந்த எதிர்ப்பை அடக்கி விட்டார். ஆனால் 1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ''மரபு வழிவாழ்விடம்'' அங்கீகரிக்கப்பட்டு வடக்கு -கிழக்கு இணைக்கப்பட்டிருப்பதை நினைவுபடுத்தாமலேயே விட்டு விட்டார்.

**சர்வன்**

தாய்லாந்தின் பேச்சுக்கள் இடைக்கால நிர்வாகம் பற்றியதாக மட்டுமே இருக்கும் என்ற நிலைப்பாட்டிற்கு எழுந்துள்ள எதிர்ப்பை ''அடிப்படையான விடயங்கள் பற்றியும் முக்கியமாகப் பேசப்படும்'' எனக் கூறி அடக்கி விட்டார்.

புலிகள் மீண்டும் போருக்குத் தயாராகுறார்கள் எனக் கிளம்பியுள்ள வாதங்களை, இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் ஒப்பந்தங்கள் செய்வதன் மூலம் ''சண்டையில் புலிகள் வெல்வதற்கு இடமளிக்க மாட்டேன்'' என்பது போலக் காட்டி வருகிறார். திலக்மாரப்பனவின் ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தங்களும் போக்கு காட்டுவதற்காக செய்யப் படுவதானாலும் கூட வாங்கப்படும் ஆயுதங்களும் கடற்கலங்களும் சும்மா கிடக்கப் போவதில்லை.

* * *

# பிறந்த் நாள் பலன்கள்

## ஜூலை

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

எந்த ஒரு செயலிலும் முதலில் விரைவுடன் இறங்கி விடுவார்கள். பிறகு, மற்றவர்கள் வியக்கும்படி அந்த வேலையை அப்படியே விட்டுவிடுவார்கள். அல்லது, பின்வாங்கி வீடுவார்கள்.

இளம் வயதிலேயே இவர்கள், முன்கூட்டி எதையும் காணும் திறமையினால் பணம் சேர்த்தால் தான் உண்டு.

இவர்கள் உயர்ந்த நிலைகளுக்கு வரமுடியும். பெரும் புகழையும் அடைவார்கள். அப்போது, இவர்களைப் பற்றி அனைவரும் அறியும் படியான வாய்ப்பு ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் இவர்கள் பெரும் துன்பங்களைக் காணவேண்டி வரும். உலகத்தின் கண்முன் எவ்வளவுதான் வெற்றி வீரர்களாக இருந்தாலும், இவர்களால் மகிழ்ச்சியுடன் இருக்கவே முடியாது.

மாபெரும் திட்டங்களைத் தாம் இவர்கள் எப்போதும் கனவு காணுவார்கள். மற்றவர்களுக்காக சிறந்த பணிகளில் இறங்குவார்கள். ஆனால்,மற்றவர்கள்இவர்களைக் குறைகூறத் தொடங்கிவிட்டால், வெறிபிடித்தவர்களைப் போல நடந்து கொள்ளுவார்கள்.

ஆழ்ந்த அன்பு இவர்களிடம் இருந்த போதிலும், அதைச் சிலர் வெளியே காட்டிக்கொள்ளுவதில்லை. ஆகையால் இவர்கள் எப்போதும் கடுகடுகப்புடன் இருப்பதாகவே மற்றவர்கள் நம்புகிறார்கள்.

இவர்களுக்கு மிக எளிய ஞாபக சக்தி உண்டு. எல்லா விஷயங்களையும் இவர்கள் தமது மனத்தில் பதிய வைத்துக் கொள்வார்கள். உள்ளத்தின் தத்துவங்களிலோ, ஆத்மதத்துவங்களிலோ, மதத்தீத்துவங்களிலோ, இவர்கள் நிபுணர்களாக இருப்பார்கள்.

நம்மைச் சேர்ந்தவர்கள் என்று இவர்கள் எண்ணுபவர்கள் மீது ஆழ்ந்த அன்பு செலுத்துவார்கள். குடும்ப வழக்கங்களுக்கும், பரம்பரை வழக்கங்களுக்கும் இவர்கள் மிகுந்த ஆதரவு தருவார்கள்.

### உடல் நிலை

வயிற்றில் அமிலக் கோளாறுகள் இவர்களுக்கு ஏற்படும். அடிக்கடி பேதி உண்டாகும். மீன் களை இவர்கள் தவிர்ப்பது நல்லது. வாயு, வீக்கங்கள், கால்கள் பாதங்கள் தொடர்பு கொண்ட நோய்கள் இவர்களை அடிக்கடி தாக்கும்.

### வண்ணங்கள்

பச்சை, பழுப்பு, வெள்ளை ஆகியவையும் இவர்களுக்கு ஏற்றவை

***இந்த மாதத்தில் பிறந்த சிலர்:-***

* சார்லஸ் லாப்டன் (ஹாலிவுட்நடிகர்)

* நத்தேனியல் ஹத்தோன்(எழுத்தாளர்)

* பெர்னார்ட் ஷா

* முசோலினி

* ஹென்றி ஃபோர்டு

* காமராஜர்

## ஆகஸ்ட்

*ஜூலை 21ஆம் திகதியிலிருந்து ஆகஸ்ட் 20ஆம் திகதி வரையில் பிறந்தவர்களுக்கான பலன்கள்.*

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டுச் சிறந்தவர்களாக விளங்க வேண்டுமென்று விரும்புவார்கள். இவர்கள் உயர்ந்த மனிதர்களுடன் மட்டும் தொடர்பு கொள்ள விரும்புவார்கள். இவர்களுடன் தொடர்பு கொண்ட எவராவது குற்றங்கள் புரிந்து விட்டாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் தன்மையுடையவர்களாகவே இருப்பார்கள்.

### நல்லிதயம் கொண்டவர்கள்

மனிதாபிமானம் படைத்தவர்கள். நல்லிதயம் கொண்டவர்கள் என்று பலரும் சொல்லும் படி இவர்கள் மற்றவர்களிடம் இரக்கம் காட்டி, பொதுவாகக் குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு உயர்ந்து விளங்குவார்கள்.

நூற்றுக்கணக்கான எதிரிகள் தோன்றினாலும், ஒரு நண்பனைக் கடைசி வரையில் காப்பாற்றும் மன உறுதி படைத்தவர்கள் இவர்கள். ஏமாற்றிவிட்டாலோ, கடமை தவறி விட்டாலோ, இவர்களால் அதைப் பொறுத்துக் கொள்ளவே முடியாது. அப்போது இவர்கள் இதயமே வெடித்து விடுவதைப்போல் குமுறுவார்கள்.

இவர்களைப் பொறுத்த வரையில் வன்மையாளர்களாகவும், நாணயமான வர்களாகவும் இருப்பார்கள். ஆனால், பொதுவாக இவர்கள் மற்றவர்களிடம் ஏமாந்து, வாழ்க்கையில் கசப்பை அடைந்து மற்றவர்களைக் குறை கூறிச் சீறி விழுவார்கள்.

தொகுப்பு
**வளவன்**

பண விஷயங்களில் இவர்கள் மிகுந்த வாய்ப்புற்றவர்களாகவே இருப்பார்கள். எண்ணாத இடங்களிலிருந்து இவர்களுக்கு எதிர்பாராமல் பணம் வந்து சேரும். ஆனால், இவர்களுடைய ஆசையெல்லாம், அன்பில் தான்!

மற்றவர்களைத் தூண்டிவிடும் குணம் இவர்களுக்கு உண்டு. நெப்போலியன் இந்த மாதத்தில் பிறந்தவன். நெப்போலிய கார் லோலங், துணிந்த செயல்களில் இவர்கள் இறங்குவார்கள். இவர்கள் மிகவும் பெருமை கொண்டவர்களாக இருப்பார்கள். இதனால், இவர்களுக்கு அடிக்கடி துன்பங்கள் வருவது உண்டு. இவர்கள் பெரிய மனமுள்ளவர்களாகவும், பரந்த நோக்கம் உடையவர்களாகவும் இருப்பார்கள்.

(தொடரும்)

## வியாசர் சார்! தமிழர்கள் பொறுமை சாலிகளாமே உண்மையா?

*R.சுலோஜனா. பருத்தித்துறை*
A-9பாதை திறந்தும் பொருட்களின் விலையில் மாற்றமில்லையே ஏன் அங்கிள் ?

**ஏறிய விலை இறங்கியதாக வரலாறுண்டோ மகனே?**

*ஜோ.ஜோ.டி கொழும்புத்துறை*
கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்றால்? காதல்?

**ஆறு நாளாகவும் இருக்கலாம்.**

*தே.தங்கன் நீராவியடி*
வியாசர் மாமா! மதம் விட்டு மதம் மாறுபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**இனம் விற்பவர்கள் போல் மதம் விற்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள். இது ஒரு புறம், மறுபுறம் மதங்களும் மக்கள் நலன் பேண வேண்டும் இல்லையேல் கட்சி மாறவே செய்வர்.**

*நிரஞ்சன் அல்வாய்*
வியா மாமா! உங்களுக்குப் பிடித்த பூ எது? பிடிக்காத பூ எது?

**பிடித்தது – தாமரைப்பூ**
**பிடிக்காதது – தாளம்பூ**

*T.P.தீப். சண்டிலிப்பாய்*
வியாசரே! பெண்ணினத்திற்கு பெருமை சேர்ப்பவை எவை?



**அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு.**

*கஜன். சங்கானை*
ஆள் பாதி ஆடை பாதி என்கிறார்களே உண்மையா?



**ஆடை பாதி என்பதை சிலர் தவறாக விளங்கிக் கொண்டு முழு ஆடையைப் பாதியாக்கி விட்டார்கள்.**

*பிரகாஷ் நல்லூர்*
நாகரிகம் என்ற பெயரில் சில பெண்கள் பண்பாட்டை மீறுகிறார்களே ஏன்?

**பண்பாடென்பது பண்பு என்ற வினையடியிலிருந்து தோன்றியது. பண்படாதவர்கள் பண்பாட்டை மீறச் செய்வார்கள்.**

*நேசன் மாகியப்பிட்டி*
வியா அங்கிள்! பெண்களின் அழகை மதிப்பிடுவது எப்படி?

**அழகுராணிப் போட்டியில் நடுவராக இருந்தவரிடம் கேட்க வேண்டிய கேள்வி இது.**

*கோகுலன் நுணாவில்*
வியா ஐயா! பள்ளித் தேர்வுகளில் பெண்கள் அதிகம் தேர்ச்சி பெறுவது எப்படி?

**மனனம் செய்யும் சக்தி இருப்பதால்.**

*செந்தூரன் மட்டுவில்*
எங்கள் ஊரில் ஒரு பட்டிமன்றம் நடத்துகிறோம். அதற்கு ஒரு நல்ல தலைப்புச் சொல்லுங்களேன்?

**மட்டுவில் என்ற படியால் உடைந்த வீடு உன்ர வீடா?, என்ர வீடா? எனப்பட்டிமன்றம் வைக்கலாம்.**

## வியாசரின் பதில்கள்

*மதியழகன் யாழ்ப்பாணம்*
வியாசர் சார்! இன்றைய இளைஞர்களின் முக்கிய தேவை என்ன?

**காதல், வேலைவாய்ப்பு.**


*சியாமளா வண்ணை*
வியாசர் சார்! ஆண்களுக்கு அடங்கி நடப்பதுதான் பெண்கள் தலை எழுத்தா?

**சகோதரி சியாமளா! பெண்கள் தங்கள் தலையெழுத்தை மாற்றி விட்டார்கள் இப்போது ஆண்கள் பெண்களுக்கு அடங்கி நடக்கிறார்கள்.**

*பொ.குணரத்தினம் நாவலர்வீதி*
கல்வி என்பது அறிவிற்கா. உத்தியோகத்திற்கா?

**உத்தியோகத்திற்கான அறிவுக்கு.**

*சீலன் யாழ்ப்பாணம்*
வியாசர் சார்! தமிழர்கள் பொறுமை சாலிகளாமே உண்மையா?



**தமிழர்கள் விசுவாசமான அடிமைகள் என்று தான் நானறிந்தேன். ஓ! அடிமைகள் பொறுமையாக இருப்பதும் வழக்கம்தான்.**

## வியாசரே! பெண்ணினத்திற்குப் பெருமை சேர்ப்பவை எவை?

*மதிவதனி துன்னாலை*
கல்லானாலும் கணவன் என்பது இன்றைக்குப் பொருந்துமா?

**என்றைக்கும் பொருந்த வேண்டும்.**

*ராஜ் பண்ணாகம்*
இன்று கவலைப்பட வேண்டிய விடயம் எதுவாக இருக்கும்?



**இளைஞர் சந்ததியினது கலாசாரச் சீரழிவு.**

*அனுசியா சுன்னாகம்*
முகத்துக்கு நேரில் புகழ்ந்து விட்டு முதுகுப் பக்கம் வசைபாடுகிறவர்களை எப்படிக் கணிப்பது?

**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என இராமலிங்க சுவாமிகள் போல் இறைவனிடம் கேட்க வேண்டும் வேறு வழியில்லை.**

*மைத்ரி. நெடுந்தீவு*
வலக்கை வாங்குவதை இடக்கை அறியலாமா?

**''நிச்சயமாக அறிய வேண்டும்'' இல்லையேல் கொடுப்பதை விட வாங்குபவன் உயர்ந்து விடுவான்.**

*பிரவீனா மானிப்பாய்*
மனம் எந்நேரமும் மகிழ்ச்சியுடன் இருக்க என்ன செய்ய வேண்டும்?

**கற்பனை உலகில் சஞ்சரிக்க வேண்டும்.**

## ஆள் பாதி ஆடை பாதி என்கிறார்களே உண்மையா?

*முகுந்தன் கரணவாய்*
வியாசர் அவர்களே! காதலுக்கும் திருமணத்துக்கும் என்ன வேறுபாடு?

**தலை எழுத்துக்கும் விதிக்கும் உள்ள வேறுபாடு (தலை எழுத்து கட்டாயம் நடக்குமென்பதில்லை. ஆனால் விதியென்பது கட்டாயம் நடந்து விடும்)**

*K.கற்பகவல்லி பருத்தித்துறை*
குற்றம் செய்யாமலே தண்டனை அனுபவிப்பவர்களைப் பற்றி .. ?

**இராமாயணத்தில் எந்தக் குற்றமும் செய்யாத பரதன் பாத்திரம் தன்பப்பட்டதுபோல் முன் வினைப் பயன் அவ்வாறு செய்விக்கிறது?**

*T.அபிஷேக் கோப்பாய்*
ஹாய் வியாசரே! நலமா? எனது அபிமான நடிகை சிநேகாவின் முகவரியையும் தொலைபேசி இலக்கத்தையும் தருவீர்களா?


**அபிஷேக்! வேண்டாமப்பா யாழ்ப்பாணத்தில் தொலைபேசிகளில் சிலர் சிலருக்கு அடிக்கடி தொந்தரவு கொடுக்கிறார்கள் பாவம் சிநேகா நிம்மதியாக இருக்கட்டுமே.**

*அச்சுதன் பண்ணாகம்*
பெண்களை தெய்வமாக மதிப்பது ஏன்?

**தெய்வங்கள் கோபம் கொள்ளக் கூடாது என்பதற்காக.**

## இன்று கவலைப்பட வேண்டிய விடயம் எதுவாக இருக்கும்?

# வாசகர் இதயநாதம்



திங்கள் தோறும்
திகட்டாத தகவல்களை
தித்திக்கும் சுவையுடன்
திகழ வைக்கும்
வலம்புரியின் வாரமலராய்
வாசனை வீசும் சங்குநாதமே
வாழ்க உன் பணி
வளர்க உன் புகழ்!

T.ரூபி,
பருத்தித்துறை.

பல்சுவை அம்சம் பொருந்திய
தன்னிகரற்ற வார ஏடான
சங்குநாதமே உனது
வண்ணமுறும் வனப்பினை
கண்டு வியக்கின்றேன்.

என்.தாஸ்,
சாவகச்சேரி.

ஆக்கங்கள் யாவும்
ஒளிவீசும் நல்முத்துக்கள்
அவனிதனில் நாதம் பரப்பி
பவனிவர வாழ்த்துகின்றேன்
வாழ்க! வளர்க!

R. பர்ணா
ஞானவாம் மத்தி

வாரத்திலே ஒரு நாள்
உண்மைச் செய்திகளை
வாரி வழங்கும்
வலம்புரி மைந்தனே
குமணனை விஞ்சுகின்ற
சங்குநாதமே!
உன் புகழ் இவ்வுலகில்
இனிதே பரவுக.

எஸ். முரளி,
கல்வியங்காடு.

சங்குநாதத்தின் சிறப்பு மிகு தோற்றத்தைக் கண்டு மகிழ் வெய்தும் அதே வேளை அதன் பணிகள் பார் எல்லாம் சிறக்க எனது நல்லாசிகள்.

திவ்வியா,
சாவகச்சேரி.

வாசகர்களின் நெஞ்சங்களில்
நீங்காது நின்று நிலைக்கும்
உன் நாமம் என்றுமே உன்
வளர்ச்சிக்கு உரம் ஊட்டி
நிற்கும் என்பதில் ஐயமில்லை.

வெ.கரன்,

பல்சுவை அம்சங்களை தன்னகத்தே கொண்டு மிளிரும் வார ஏடான சங்குநாதமே! வளர்க நின் சேவை வாழ்க உன் பணி ஓங்கட்டும் உன் நாமம்.

கபிலன்,
மீசாலை.

வலம்புரி முத்தே சங்குநாதமே
திங்கள் தோறும் கைகளில்
தவழும் உன் ஸ்பரிசத்தை
தினம் சுவைக்கின்றேன்.

வெ. சுகந்தினி,
நீர்வேலி

மங்களம் பொங்கட்டும்
உன் பணி தொடரட்டும்
நீ தரும் இந்த
இதமான நாதங்களால்
இங்கு மட்டுமல்ல
மற்றெல்லா இடங்களிலும்
மாண்புடன் நீ சென்று
தமிழ் மானம் தனைதலை
நிமிர்த்தவும் - அதில்
தமிழர்களின் பெருமைகளை
ஓர்வரியில் பறை சாற்றிடவும்
மக்களெல்லாம்''சங்குநாதமே''
எம் நாதம், எம் மண்ணில்
நாதமென
ஓங்கி குரல் எழுப்ப
உன் பத்திரிகை பணி
பலகோடி வாசகர்களின்
உள்ளத்தில்
மதி போல ஒளிரவும்,
மாண்புடன் உனக்கு
மக்களெல்லாம் மாலை சூடி
மனங்களில் சாந்தி பெற
இவனும்உன்னை வாழ்த்துகிறேன்
வாழ்க நாதமே
வளர்க உன் பணி.

பிறின்ஸ் கியூடெக்.

# அர்த்தமுள்ள இந்து மதம்



## கவிஞர் கண்ணதாசன்

நல்ல மனைவியைத் தேர்ந்தெடுப்பது போலவே, நல்ல நண்பனைத் தேர்ந்தெடுப்பதிலும் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும்.

உன் எதிரியை நீ சுலபமாக அடையாளம் கண்டு கொண்டு விட முடியும்.

ஆனால், நண்பர்களிலே, நல்ல நண்பர் யார் என்பது அனுபவத்தின் மூலமேதான் தெரியுமே தவிர, சாதாரண அறிவினால் கண்டு கொள்ள முடியாது.

முகத்துக்கு நேரே சிரிப்பவன்,
முகஸ்துதி செய்பவன்,
கூனிக் குழைபவன்,
கூழைக் கும்பிடு போடுப்வன,

இவனெல்லாம் நல்ல நண்பன் மாதிரியே தோற்றமளிப்பான்.

எந்த நேரத்தில் அவன் உன்னைக் கவிழ்ப்பான் என்பது அவனுக்கும் கடவுளுக்கும் மட்டுமே தெரியும்.

ஆகவே ஒருவனை நண்பனாக்கிக் கொள்ளுமுன், அவனைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சரியாகத் தெரிந்த பின்பு தான், அவனிடம் ரகசியங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

நன்றாக ஆராய்ந்து, 'இவன் நல்லவன்தான்' என்று கண்டபின், ஒருவனை நண்பனாக்கிக் கொண்டு விட்டால், பிறகு அவன்மேல் சந்தேகப்படக் கூடாது.

''அவசரத்தில் ஒருவனை நம்பிவிடுவதும், நம்பிக்கைக்கு உரியவன் என்று தேர்ந்தெடுக்கபபட்ட ஒருவனைச் சந்தேகிப்பதும், தீராத துயரத்தைத் தரும்'' என்றான் வள்ளுவன்.

''தேரான் தெளிவும் தெளிந்தானகண்
ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.''

சரி, நல்ல நண்பனைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

யாரோடு நீ பழக ஆரம்பிக்கின்றாயோ, அவனோடு நீ இனிமையாகப் பழக வேண்டும்.

கொஞ்சக் காலத்திற்கு அதை, நீ நட்பாகக் கருதக் கூடாது.

வெறும் பழக்கமாகத்தான் கருத வேண்டும்.

உனக்குக் கஷ்டம் வந்தபோது அவன் கை கொடுத்தால், உன்னைப்பற்றி நல்ல விதமாக, நீ இல்லாத இடத்தில் அவன் பேசுவதைக் கேள்விப்பட்டால்,

பிறர் உன்னைப்பற்றித் தவறாகப் பேசும்போது, அவன் தடுத்துப் பேசியதாக அறிந்தால்,

அவனை நீ நம்பத் தொடங்கலாம்.

தொடர்ந்து இது போன்ற புல செய்திகளைக் கேள்விப்பட்ட பிறகுதான், அவனை நண்பனாக நீ வரித்துக் கொள்ள வேண்டும்.

பல இடங்களில் ஒரே மாதிரி ஒருவன் நடிக்க முடியாது. ஆகவே உன்மீது அவன் வைக்கும் அன்பும் உண்மையாகத்தான் இருக்க முடியம்.

நட்பு என்பது வெறும் முகஸ்துதி அல்ல. ஆபத்தில் உதவுவது ஒன்றே நட்பு.

நீ அழும்போது உண்மையிலேயே அவனுக்கும் அழுகை வருகிறது என்றால், அதுதான் நட்பு.

''முகநக நட்பது நட்பன்றுஞ நெஞ்சத்து
அகநக நட்பதே நட்பு.''

''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.''
என்றான் வள்ளுவன்.

நண்பர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறது ஒரு பழம் பாடல்.

பாடல் மறந்துபோய் விட்டது. விளக்கம் இதுதான்.

ஒன்று, பனைமரம் போன்ற நண்பர்கள்; இரண்டு, தென்னைமரம் போன்றவர்கள்; மூன்று வாழைமரம் போன்றவர்கள்.

பனைமரம் யாராலும் நட்டு வைக்கப்பட்டதல்ல.

பனம்பழத்தைத் தேடி எடுத்து யாரும் புதைப்பதில்லை.

அது தானாகவே முளைக்கிறது.

தனக்குக் கிடைத்த தண்ணீரைக் குடித்துத் தானாகவே வளர்கிறது.

தனது உடம்பையும், ஓலையையும், நுங்கையும் அது உலகத்திற்குத் தருகிறது.

நம்மிடம் எந்த உதவியையும் எதிர்பாராமல், நமக்கு உதவுகிறவன், பனைமரம் போன்ற நண்பன்.

தென்னைமரம் நம்மால் நடப்படுகிறது.

அதற்கு அடிக்கடி தண்ணீர் ஊற்றி வளர்த்தால்தான் அது நமக்குப் பலன் தருகிறது.

அதுபோல், நம்மிடம் அவ்வப்போது உதவி பெற்றுக் கொண்டு நண்பனாக இருக்கிறவன், தென்னைன மரத்துக்கு இணையான நண்பன்.

வாழைமரமோ, நாம் தினமும் தண்ணீர் ஊற்றிக் கவனித்தால்தான் நமக்குப் பலன் தருகிறது.

அதுபோல் தினமும் நம்மிடம் உதவி பெற்றுக் கொள்கிறவ்ன் வாழைமரம் போன்ற நண்பன்.

இந்த மூவரில்,

பனைமரம் போன்ற நண்பனே நீ தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டிய நண்பன்.

எனக்கு அப்படிப்பட்ட நண்பர்கள் சிலர் கிடைத்தார்கள்.

எனக்குக் கிடைத்த நண்பர்களில் நூற்றுக்கு ஒருவர் இருவரே அப்படிப்பட்ட நண்பர்களாக இருந்தார்கள் என்பது பொருந்தும்.

மற்றவர்கள் எல்லோரும் என்னிடம் பணம் பறிப்பதற்காகவே நண்பர்களாக இருந்தார்கள்.

## நல்ல நண்பன்

அதிலே நான் ஏமாளியாக இருந்தேன் என்பதை ஒப்புக் கொள்வதில் வெட்கமில்லை.

ஆனால் என்னை ஏமாற்றிய நண்பர்கள் எல்லாம் இன்று செல்வாக்கிழந்து ''கோழி மேய்க்கிறார்கள்'' என்பதை எண்ணும் போது, சிநேகிதத் துரோகிகளுக்கு இறைவன் அளிக்கும் தண்டனையைக் கண்டு, நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மற்றவர்களுக்கு அந்த அனுபவம் வரக்கூடாது என்பதற்காகவே இதை எழுதுகிறேன்.

இந்துக்களின் இதிகாசங்கள், நல்ல நண்பன் எப்படி இருப்பான் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

ஸ்ரீராமனுக்குக் கிடைத்த நண்பர்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைத்தால் துன்பங்களே இல்லாமல் போய்விடும். ஸ்ரீராமனின் துன்பங்களை யார் யார் பங்கு போட்டுக் கொண்டார்கள்?

அதை ரகுநாதனின் வாய்மொழியாகக் கம்பன் சொல்கிறான்.

''குகனொடும் ஐவ ரானோம்
முன்பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவ ரானோம்
எம்முறை அன்பின் வந்த
அகமலர் காதல் ஐய
நின்னொடும் எழுவ ரானோம்!''

வீடணன் நண்பனான போது, வீடணனைப் பார்த்து ஸ்ரீ இராமன் சொன்ன வார்த்தைகள் இவை.

''வீடணா! நானும் இலக்குவனும், பரதனும், சத்துருக்கனனும் நான்கு சகோதரர்களாகப் பிறந்தோம்.

கங்கை இரு கரையுடையான், கணக்கிறந்த நாவாயான் குகனைச் சந்தித்த போது, நாங்கள் ஐவரானோம்.

சுக்ரீவன் எங்களோடு சேர்ந்தபோது நாங்கள் அறுவரானோம்.

உன்னைச் சேர்த்து இப்போது எழுவராகி விட்டோம்.''

ஆம், ராமனுக்கு அவர்கள் செலுத்திய அன்புக் காணிக்கை ராமனுடைய சகோதரர்களாகவே அவர்களை ஆக்கி விட்டது.

நல்ல நட்புக்கு என்னென்ன இலக்கணங்கள் உண்டோ அவை எல்லாம் கூடி வாய்க்கப் பெற்ற ஒருவன் நண்பனாக மட்டுமின்றிச் சகோதரனாகவும் ஆகிவிடுகிறான்.

நண்பர்கள் தனக்கு உதவி செய்தார்கள் என்பதற்காகத் தன் சொந்தச் சகோதரர்களையே ஒருவன் விரோதித்துக் கொண்டு செஞ்சோற்றுக் கடன் கழித்து, ஒருவன் மகாபாரதத்தில் காட்சியளிக்கிறான்.

அவனே கர்ணன்.

கர்ணன் குந்தியின் மகன்; பாண்டவர்களின் சகோதரன்.

கௌரவர்கள் அவனிடம் பாராட்டிய நட்புக்காக, அவர்கள் செய்த உதவிக்காக, போர்க்களத்தில் தன் சகோதரர்களையே எதிர்த்தான் கர்ணன்.

நட்பு என்பதும், செஞ்சோற்றுக் கடன் கழித்து நன்றி செலுத்துவது என்பதும் இந்துக்களின் மரபு.

அந்த மரபின், நட்பின் மேன்மையை வற்புறுத்தும் புராணக் கதைகள் பலவுண்டு.

நல்ல மனைவியை எப்படி இறைவன் அருளுகிறானோ, அப்படியே நல்ல நண்பர்களை அருளுமாறு இறைவனைப் பிரார்த்திப்பது நல்லது.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞானசங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

## சுவையும் மணமும்

கடந்த வாரம் ''நாம் உண்ணும் உணவு'' எனும் தலைப்பில் நம் ஆரோக்கிய வாழ்வுக்கு உகந்த உணவு வகைகள் பற்றி எழுதியிருந்தோம். உணவு என்றதும் நாம் உணர்வதெல்லாம் அதன் சுவையும் மணமுமே! இந்தச் சுவையும் மணமும் எவ்வாறு உருவாகின்றன? இவற்றிற்குரிய காரணங்கள் என்ன? சுவை, மணம் என்பவற்றிக்கு அடிப்படைக் காரணிகள் சில இராசாயனப் பதார்த்தங்கள் ஆகும். அவை எவையென இவ்வாரம் பார்ப்போம்.

| | |
|---|---|
| உள்ளி<br>Garlic | - இருஏலைல் இரு சல்பைட்டு (அலிசின்)<br>Diallyl disulfide (allicin) |
| வாழைப்பழம்<br>Banana | - சம பென்ரைல் அசற்றேற்று<br>Isopentyl acetate |
| மீன்<br>Fish | - அனிலீன்<br>Aniline |
| கூழ் முட்டை<br>Rotten egg | - ஐதரசன் சல்பைட்டு<br>Hydrogen Sulfide |
| வனிலாக் காய்<br>Vanilla beans | - வனிலின்<br>Vanillin |
| பூஞ்சணம் பிடித்த பட்டர்<br>Rancid butter | - பியூற்றிறிக்கமிலம்<br>Butyric acid |
| கொடித் தேசி<br>Lemon | - லிமொனீன்<br>Limonene |
| சந்தனம்<br>Sandal Wood | - சன்ரலோல்<br>Santalol |
| ரம் வாசனை<br>Rum flavouring | - சமபியூட்டைல் புறப்பியோனேற்று<br>Isobutal propionate |
| திராட்சை<br>Grape | - மீதைல் அந்திரனிலேற்று<br>Methyl anthranilate |
| வின்ரர் கிறீன் எண்ணெய்<br>Oil of wintergreen | - மீதைல் சலிசிலேற்று<br>Methyl Salicylate |
| கசப்பு வாதுமை<br>Bitter almond | - பென்சல்டிகைட்டு<br>Benzaldehyde |
| கிராம்பு<br>Cloves | - இயூயினோல்<br>Eugenol |
| கறுவா<br>Cinnamon | - சினமல்டிகைட்டு<br>Cinnamaldehyde |
| பெப்பமின்ட்<br>Pepermint | - மென்தோல் அல்லது மென் தோள்<br>Menthol or Menthone |
| மல்லிகை<br>Jasmine | - ஜஸ்மினைன்<br>Jasminine |
| பைன் மர இலை<br>Pine needle | - போமிக்கமிலம்.<br>Formic acid. |

கலாநிதி.நா. சிவயோகன்
பௌதிகவியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

### இவ்வாரப் புதிர் இல :03

ஒரு ஊரில் வயது போன கணித மேதையொருவர் இருந்தார். அவர் தனது உழைப்பிற்காகச் சில கணித வித்தைகளைச்செய்வது வழமை. ஒரு முறை அவர் ஒரு மந்திரப் பெட்டியொன்றைத் தயாரித்தார். அப்பெட்டியில் பணத்தை இட்டால் இரு மடங்காக்கித் தரும் எனவும் அறிவித்தார். இதையறிந்த பேராசையுள்ள வாலிபன் ஒருவன் அவரிடம் வந்து தான் அப்பெட்டியைப் பாவிக்கப் போவதாகக் கூறினான். அதற்கு அந்த வயோதிபர் மந்திரப் பெட்டியைப் பாவிப்பதற்குத் தனக்கு ஒரு தொகைப் பணம் தர வேண்டும் என்றார். அந்த வாலிபனோ மறுத்து விட்டான் . பின்னர் வயோதிபர் ஒவ்வொரு முறையும் மந்திரப்பெட்டியைப் பாவிக்கும் போது தனக்கு 12 ருபா தர வேண்டும் என்றார். அதற்கு இணங்கிய வாலிபன் தனது பணத் தை அந்தப் பெட்டியுள் போட்டான். ஆச்சரியம்! பணம் இரு மடங்காக வெளி வந்தது. அதிலே 12 ருபாவை வயோதிபரிடம் கொடுத்தான். பின்னர் எஞ்சிய பணத்தை மீண்டும் பெட்டியுள் இட்டான். பணம் மீண்டும் இரு மடங்காக வந்தது. மீண்டும் வயோதிபரின் பங்கைக் கொடுத் தான். பின் மூன்றாம் தடவையும் எஞ்சிய காசைப் போட்டான். மந்திரப் பெட்டி இரு மடங்காக்கிக் கொடுத்தது. அதிலே வயோதிபரின் பங்கைக் கொடுத்தான். பாவம் வலிபன்! அவன் கையில் எதுவுமே மிஞ்சவில்லை!

அப்படியாயின் ஆரம்பத்தில் அவனிடம் இருந்த பணம் எவ்வளவு?

இப்புதிருக்கான விடையை நீங்கள் கண்டு பிடித்தால் 21.06.2002ற்கு முன்னதாக

பத்திராதிபர்,
யாழ்.விஞ்ஞான சங்கம்(A)
மே/பா.விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு இத்துடன் உள்ள கூப்பனை வெட்டி இணைத்து அனுப்பவும்.

சரியான விடையெழுதும் மூன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 200ரூபா பரிசாக வழங்கப்படும்.

**குறிப்பு:- புதிர் இலக்கம் 01,02 இற்கான விடைகளும், பரிசில் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயரும் அடுத்த வாரம் வெளிவரும்.**

**யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்**
**புதிர் இல. 03**

முழுப்பெயர் :- ____________________

முகவரி :- ____________________

____________________

கையொப்பம் :- ____________________

# அண்ணல் காந்தியின்

சுற்றிலும் இருந்த கூட்டம் என்ன செய்வது என்று புரியாமல் நாற்புறமும் ஓடியது. கஸ்தூரி ''ஐயோ'' என்று அலறிக் கொண்டே கணவரை நோக்கி ஓடினாள். அதற்குள் அந்த யானை பயங்கர ஒலி ஒன்றை எழுப்பி, முன்னங்காலைத் தூக்கி காந்தியின் மார்பில் வைத்து ஓர் அழுத்து அழுத்தியது. 'கஸ்தூரி' என்று அலறினார் காந்தி. 'மோகனா என்று ஓலமிட்டாள் கஸ்தூரி.

அவள் கதறியதைக் கேட்டுப் பண்ணையில் உள்ளவர்கள் எல்லோரும் ஓடி வந்தார்கள். அதற்குள் கஸ்தூரியும் விழித்துக் கொண்டு விட்டாள். ஏதோ பயங்கரக் கனவு கண்டிருக்கிறாள் என்று எல்லோருக்கும் புரிந்து விட்டது. சுற்றி நிற்பவர்களைப் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டு மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள் அவள்.

ஆனால், அவள் கண்ட கனவு முழுதும் பொய்த்துப் போகவில்லை. மறுநாட் காலை ஜோன்ஸ்பர்க்கில் காந்தியை நான்கு ஐந்து பட்டாணியர்கள் நடுத் தெருவில் அடித்து நொறுக்கிவிட்டார்கள் என்று அவளுக்கு ஒரு செய்தி வந்தது.

நடந்தது இதுதான். சிறை சென்ற இருபது நாட்களுக்கெல்லாம், அதிகார வர்க்கம் ஒரு சமரசத்திற்கு வந்தது. இந்தியர்கள் தங்கள் கைவிரல் ரேகை முத்திரையை அளித்து தங்கள் பெயர்களைத் தாங்களாகவே பதிவு செய்து கொண்டுவிட்டால், 'கட்டாயப் பதிவுச் சட்டம்' வாபஸ் பெறப்படும் என்று ஜெனரல் ஸ்மட்ஸ் கூறி, காந்தியையும் இதர கைதிகளையும் விடுதலை செய்தார். இந்தச் சமரசத்தை காந்தி ஒரு கூட்டத்தில் விளக்கிய போது ஒரு பட்டாணியர், 'காந்தி லஞ்சம் வாங்கிக் கொண்டு இந்தியரைக் காட்டிக் கொடுத்து விட்டார்' என்று குற்றம் சாட்டினார். 'பெயரைப் பதிவுசெய்து கொண்டால் கொன்று விடுவேன்' என்றும் பயமுறுத்தினார். காந்தி மறுநாள் தம் பெயரைப் பதிவு செய்து கொள்ளப் போகும் வழியில் பட்டாணியர் சிலர் அவரை வழி மறித்துத் தாக்கி விட்டார்கள்.

நினைவற்றுக் கீழே விழுந்தவரை டோக் என்ற பாதிரியார் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அங்கு டாக்டர், காந்தியின் உதட்டிலும் கன்னத்திலும் தையல்கள் போட்டிருக்கிறார். 'இன்னும் பத்து நாட்களில் பண்ணைக்குத் திரும்பி விடுவார். வீணாகக் கவலைப்படவேண்டாம்' இந்தச் செய்தியைக் கொண்டு வந்தவர் நடந்ததைச் சொல்லி விட்டுப் போய் விட்டார். கஸ்தூரி மிகக் கவலைப்பட்டாள். கவலைப்படவே பிறந்தவள் ஆயிற்றே அவள்!

பத்து நாட்கள் கழித்துக் காந்தி பண்ணைக்கு வந்தார். காயம்பட்ட வடுக்கள் அவர் முகத்தில் காணப்பட்டன. அவர் இளைத்துக் கறுத்துக் போயிருந்தார். கன்னங்கள் ஒட்டி, உதடுகள் உலர்ந்து போயிருந்தன. அவரைக் கண்டதும் கடைசி இரண்டு பிள்ளைகளும் 'அப்பா!' என்று அலறிக் கொண்டு அவரிடம் ஓடி வந்தார்கள். அவர்களைத் தழுவிக் கொண்டார் தந்தை. பேத்தி ராமியைத் தூக்கி முத்தமிட்டார். சற்றுத் தொலைவிலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஹரிலாலின் கண்கள்கூடக் கலங்கி விட்டன.

கஸ்தூரி கணவனிடம் வந்தாள். எதையோ கேட்க வேண்டும் என்று முயன்றாள். பேச முடியாமல் அவள் தொண்டை அடைத்தது. சொல்லால் கொட்ட வேண்டும்என்று நினைத்ததை யெல்லாம் கண்ணீராகக் கொட்டித் தீர்ததாள்.

''ஏன் அழுகிறாய் கஸ்தூரி? என் காயமெல்லாம் ஆறிவிட்டன. களிமண் வைத்துக் கட்டினேன். புண்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. அது போகட்டும் உன் உடம்பு எப்படி இருக்கிறது? ரொம்பவும் இளைத்திருக்கிறாயே'' என்று மனைவியை அன்புடனும் பரிவுடனும் விசாரித்தார் காந்தி.

''இந்தச் சரீரம் எப்படியாவது பாழாய்ப் போகட்டும். உங்கள் உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்.இத்தனை பேர் உங்களை நம்பியிருக்கிறார்கள். நான்



இருந்தால் என்ன? போனால்

# கஸ்தூரி திலகம்

என்ன? ''

''அப்படி யெல்லாம் சொல்லாதே கஸ்தூரி. உன்னை நம்பி நான் வாழ்கிறேன். எனக்கு நீ வேண்டும். உன்னை நான் மிகவும் கஷ்டப்படுத்தி விட்டேன். இனிமேலாவது நீ சுகப்பட வேண்டும். நான் அதைப் பார்த்துக் களிக்க வேண்டும்.''

''நீங்கள் இருக்கும் போது எனக்கு என்ன குறை? நான் சுகமாகத்தானே இருக்கிறேன்..''

உடலால் பிரிந்த அந்தக் கணவனும் மனைவியும் உள்ளத்தால் பிணைக்கப்பட்டு இறுகினார்கள். ஆசை அறுந்தது. அன்பு வளர்ந்தது. அன்னியோன்னியம் மிகுந்தது. அவ்விருவரிடையே உயிருக்குயிரான உறவு ஒன்று துளிர் விட்டது. அவள் மீதிருந்த மோகத்திலிருந்து காந்திக்கு விடுதலை கிடைத்தது. ஆகவே கணவருடைய 'அடக்கு முறை'யிலிருந்து கஸ்தூரிக்கு விடுதலை கிடைத்தது.

காந்தி பிரம்மச்சரியத்தை ஏற்றுக் கொண்டு விட்டாரேயொழிய முற்றும் துறந்த துறவியாகி விடவில்லை. உடல் நசையைக் கட்டுப்படுத்தி விட்டார். அவரால் மனத்தை உடனே அடக்க முடியவில்லை. அது தீவிர பயிற்சியினாலும் கடவுள் அருளாலும் தான் ஏற்பட வேண்டும் என்று உணர்ந்தார் அவர். 'மனத்தைக் கட்டுப் படுத்த வேண்டுமானால் நாக்கைக் கட்டுப்படுத்த வேண்டும். வகை வகையாக, ருசிருசியாக உண்பது கூடாது! வயிறு புடைக்கப் புசிக்கக் கூடாது. அவ்வப்போது உடலைப் பட்டினி போட வேண்டும். உண்ணா நோன்பு மேற்கொள்ள வேண்டும். சிறு பிராயத்தில் தாயாரைப் பார்த்து ஏற்பட்ட பழக்கம் இப்போது பிரம்மச்சரியத்தைக் காப்பதற்குப் பயன்பட வேண்டும்.' சிறையில் தோன்றிய கருத்துக்களை வெளியே வந்ததும் செயல்படுத்தத் தொடங்கினார் காந்தி. அதற்கென ஒரு வாய்ப்பும் விரைவிலேயே கிடைத்தது.

கஸ்தூரி மீண்டும் இரத்தம் இழக்கத் தொர்டங்கினாள். ஆபரேஷன் செய்த பிறகு சில மாதங்கள் வரை அவளுக்கு அந்தத் தொல்லை இல்லாமல் இருந்தது. ஆனால் அவள் பூரண குணம் அடையவில்லை. இம்முறை தம்முடைய 'இயற்கை' வைத்தியத்தையே கையாண்டார் காந்தி. களிமண்ணும் தண்ணீர்த் தொட்டியும் கொண்டு வரப்பட்டன. வேறு வழியில்லாமல் கஸ்தூரி ஒப்புக் கொண்டாள். வேண்டாம் என்றால் அவர் கேட்கவா போகிறார்?

அந்த வைத்தியம் பலனளிக்காமல் போகவே உட்கொள்ளும் உணவில் ஒரு மாற்றம் சொன்னார்.

''நீ இனி மேல் உணவில் பருப்பு வகைகளும் உப்பும் சேர்த்துக் கொள்ளாமல் இருந்தால் உனக்குச் சீக்கிரம் குணமாகி விடும்.''

''பருப்பும் உப்பும் இல்லாமல் எப்படி உயிர் வாழ்வது? இதெல்லாம் என்னால் முடியாது. உங்களுக்குத் தோன்றியதையெல்லாம் சொல்லி என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்.''

''உன் நன்மைக்குத்தானே சொல்கிறேன். கொஞ்சம் நாக்கு ருசியைக் கட்டுப்படுத்தித்தான் பாரேன்''

''சுலபமாகச் சொல்லி விட்டீர்கள். பருப்பும் உப்பும் சாப்பிட வேண்டாம் என்று டாக்டர் சொன்னால் நீங்கள் கேட்பீர்களா?

''கட்டாயம் கேட்பேன். டாக்டர் சொல்லாமலேயே நான்

**பரணீதரன்**

அவற்றை விட்டுவிடுகிறேன். இப்போதே ஒரு தீர்மானம் எடுத்துக் கொள்கிறேன். இன்றையிலிருந்து ஒரு வருடத்திற்கு நான் பருப்பையும் உப்பையும் தொடப்போவதில்லை. நீ அவற்றை விட்டாலும் சரி, விடாவிட்டாலும் சரி, நான் என் விரதத்தைக் கடைப் பிடிக்கப் போகிறேன்.''

அன்பால் அவள் மனத்தை மாற்றுவதற்காகத் தன்னை வருத்திக் கொண்டார் காந்தி. அது தான் சத்தியத்தின் சக்தி. அதற்குப் பெயர்தான் சக்தியாக்கிரகம். நாட்டுக்குப் பயன்பட்ட 'அறப்போர்' வீட்டில் தான் பிறந்தது. அதற்கும் கஸ்தூரிதான் காரணமாக இருந்தாள்.

''வேண்டாம். எனக்காக நீங்கள் துன்பம் அனுபவிக்க வேண்டாம். நான் அவற்றை உணவிலிருந்து விலக்கியே விடுகிறேன். தயவு செய்து உங்கள் தீர்மானத்தைக் கை விட்டு விடுங்கள்.'' மன்றாடினாள் மனைவி.

''முடியாது! விரதம் ஏற்றுக் கொண்டு விட்டேன். அதைக் கைவிட முடியாது.'' கண்டிப்பாகக் கூறி விட்டார் கணவர்.

''நீங்கள் பிடிவாதக்காரர். உங்களை ஒருவராலும் அசைக்க முடியாது.'' சத்திய சோதனையில் இறக்கி விட்டவரிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்று நன்றாக உணர்ந்திருந்தாள் கஸ்தூரி.

அடுத்த ஆறு ஆண்டுகள் காந்திக்கு குடும்ப வாழ்க்கையை விட சிறை வாழ்க்கைதான் அதிகம். அவருடைய அறப் போருக்கும், அதிகாரவர்க்கத்தின் அடக்கு முறைக்குமிடையே ஏற்பட்ட மோதல்களின் ஒலி, உலகமெங்கும் எதிரொலித்தது. இருண்ட கண்டத்திலிருந்து அவர் காட்டிய சத்திய ஒளி, இருள் சூழ்ந்த உள்ளங்களுக்கெல்லாம் உற்சாகத்தை அளித்தது.

ஒரு வகையில், கணவர் மீண்டும் சிறை புகுந்தது கஸ்தூரிக்கு உற்சாகத்தைத் தந்தது. அவருடன் மூத்தபிள்ளை ஹரிலாலும் சிறை சென்றது அவளுக்குப் பெரும் மகிழ்ச்சியை அளித்தது. தங்களுக்குள் வீண் வாக்குவாதத்தையும் மனக் கசப்பையும் வளர்த்துக் கொள்ளாமல் தந்தையும் மகனும் சிறைக்குச் செல்லுவதிலாவது ஒற்றுமையாக இருக்கிறார்களே என்று திருப்திப்பட்டுக் கொண்டாள்.,

ஆனால் சிறையில் கூட காந்தியும், ஹரிலாலும் வாக்குவாதம் செய்து கொண்டுதான் இருந்தார்கள். ஏதோ, இளமையின் துடிப்பிலே, புதுமையின் கவர்ச்சியிலே ஹரிலால் சிறை புகுந்து விட்டானே தவிர, அவன் தந்தையின் கொள்கையை முழுமையாக ஏற்றுக் கொண்டதாகச் சொல்ல முடியாது. அங்கு வந்தும் தன்னையும் தம்பி மணிலாலையும் படிக்க வைக்காமல் அவர் பாழாக்குவதாகப் பழி சுமத்தினான். காந்தியும் அவனுக்குப் பொறுமையுடன் சமாதானம் கூறினார். இதைப் பற்றி தம் நிலையை விளக்கி சிறையிலிருந்து மணிலாலுக்கும் கடிதம் எழுதினார். அதில் கஸ்தூரியின் உடல் நிலையை விசாரித்தும் எழுதியிருந்தார். தாயைக் கண்ணிமை போல் காக்கும் படி குறிப்பிட்டிருந்தார். அந்த வரிகளை மணிலால் படித்துக் காட்டிய போது கஸ்தூரியின் கண்கள் கலங்கி விட்டன. ''சத்தியத்திற்காகக் கணவர் சிறையில் வாடுகிறார். அவர் கரம் பற்றிய நான் இங்கே சுகமாயிருக்கிறேன். இது சதி தர்மத்துக்குப் புறம்பானது'' சிறு வயதில் கணவர் சொன்ன அரிச்சந்திரன் கதை அவளுக்கு நினைவுக்கு வந்தது. ''சந்திரமதி பிறந்த மண்ணிலா நானும் பிறந்திருக்கிறேன்? சே! அவமானம்'' என்று தன்னையே நொந்து கொண்டாள்.

அவள் விரும்பியபடியே சிறை செல்வதற்கும் கஸ்தூரிக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

1913ஆம் ஆண்டில் தென்னாபிரிக்க சுப்ரீம் கோர்ட்டு திருமணங்கள் குறித்து ஒரு தீர்ப்புக் கூறியது. அதன்படி கிறிஸ்தவ சடங்குடன் நடந்த திருமணங்களும் பதிவு செய்யப்பட்ட திருமணங்களும் தான் சட்டப்படி செல்லத் தக்கவையாகக் கருதப்பட்டன. அதாவது இந்து, முஸ்லிம், பார்ஸி முறைப்படி நடைபெற்ற கல்யாணங்கள் எல்லாம் சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மணமான இந்தியப் பெண்கள் யாவரும் 'மனைவிகள்' என்ற புனித நிலையை இழந்தார்கள். அவர்கள் பெற்ற குழந்தைகள் சொத்துரிமையை இழந்தார்கள். இந்த அவமானத்தை உடனே துடைத்தாக வேண்டும். அதற்கு ஒரு கிளர்ச்சி துவக்கப்பட வேண்டும். துணிந்து விட்டார் காந்தி. குதித்து விட்டார் அறப்போரில். அதில் தாய்மார்கள் பங்கு கொள்ள வேண்டும் என்று சொல்லியும் விட்டார்.

பண்ணையிலுள்ள சகோதரிகளிடம் தமது திட்டத்தை விளக்கி, அவர்கள் எப்படிச் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும். நீதிமன்றத்தில் எவ்வாறு அவர்கள் நடந்து கொள்ள வேண்டும், சிறையில் எப்படி மன உறுதியுடன் இருக்க வேண்டும் என்றெல்லாம் 'பாடம்' சொல்லிக் கொண்டிருந்தார் காந்தி. இதை யெல்லாம் சற்றுத் தொலைவில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த கஸ்தூரிக்கு கோபம் வந்தது.

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### தாய் மொழி சிறந்தது தான் ஆனால் ....

காந்திஜிக்கு நாள் தோறும் நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்து குவியும். ஒன்றையும் படிக்காமல் விட மாட்டார் காந்திஜி. கூடுமான வரை அவ்வப் பொழுது பதிலும் எழுதி விடுவார்.

ஒரு நாள் திபெத்திலிருந்து லாமா என்ற ஒருவர் காந்திஜிக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஆனால் திபெத்திய மொழியிலல்லவா இருந்தது! ஆச்சிரமத்திலிருந்த யார் யாரிடமோ அதைக் காட்டி மொழி பெயர்க்கச் சொன்னார். ஊகூம்....ஒருவராலும் முடியவில்லை. யாருக்கேனும் அந்த மொழி தெரிந்தால் தானே?

சில நாள்கள் கழித்து இது பற்றி என்ன செய்வதென்று ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தார் காந்திஜி. ஒரு நாள் காலை பலபல வென்று விடியும் சமயம் அவருக்கு யோசனை உதித்து விட்டது. வெடுக்கென படுக்கையில் இருந்து எழுந்து அந்நேரத்திலேயே காகிதத்தையும் தன் பேனாவையும் கொண்டு வரச் சொன்னார். அவசர அவசரமாக அந்த லாமாவுக்கு குஜராத்தி மொழியில் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தைத் தபாலுக்கு அனுப்பும்பொழுது காந்திஜிக்கு சிரிப்பு வந்து விட்டது. 'நம்மைப் போல் அந்த லாமாவும் இக்கடிதத்தைப் படிக்க முடியாமல் தடுமாறுவார்' என்று தனக்குத்தானே நகைத்துக் கொண்டதில் வியப்பொன்றும் இல்லையல்லவா?

### அவருக்கு ஏன் மரியாதை

குற்றாலத்தில் ரசிகமணி டி.டி.கே. சிதம்பரநாத முதலியாரது இல்லத்திற்கு ஒரு இளைஞர் வந்திருந்தார்.

தான் கொண்டு வந்திருந்த பணம் செலவாகி விட்டது என்றும் திரும்பி ஊர் போகப் பணம் தேவைப் படுகிறது என்றும் அந்த இளைஞர் சொன்னார்.

அந்த இளைஞர் பொய் சொல்லுகிறார் என்று அங்கே இருந்த மற்றவர்களுக்குத் தோன்றியது.

ஆனால் டி.டி.கே. அந்த இளைஞருக்கு அவர் கேட்ட பணத்தைக் கொடுத்து அனுப்பினார்.

அங்கே இருந்த ஒரு தமிழறிஞர் ''ஐயா அந்த இளைஞன் யோக்கியமானவன் அல்ல என்று படுகிறது. அவன் பொய் சொல்லுகிறான் என்றே நாங்கள் நினைக்கின்றோம். நீங்கள் அவனுக்குப் பணம் கொடுத்து அனுப்பினீர்களே!'' என்று கேட்டார்.

டி.டி.கே.சி சிரித்துக் கொண்டு, ''அவன் பொய் சொல்லுகிறான் என்று எனக்கும் நன்றாகத் தெரியும். நான் இப்போது அவனுக்குப் பணம் கொடுத்து விட்டால் இனி அவன் மற்றவர்களைத் தொந்தரவு செய்யாமல் ஊர் போய்ச் சேர்ந்துவிடுவான் அல்லவா? அதற்காகத்தான் நான் பணம் கொடுத்தேன்? என்றார்.

# மௌனத்தின் தேடல்கள்

### உன்னோடு நான்!

குட்டித்தம்பி நீயடா
சுட்டித்தனம் பண்ணாதே
எட்டாத தூரத்திற்கு - எமை
விட்டுப் பெற்றோர் போனாலும்
கட்டி முத்தம் தந்திடவும்
காத்து உனை வளர்க்கவும்
காலமெல்லாம் நானிருப்பேன்
கவலை மறந்து சிரியடா!

*மதி,*
*மிருசுவில்.*

### தேடல்!

பச்சிளம் பாலகனே...!
உன் சகோதரி - உன்னில்
கொண்ட பாசத்தால்
உனை அழகு செய்கிறாள்
ஆனால்..... நீயோ.....!
அதை உணராது - எங்கோ
பார்வை செலுத்தி - என்ன
தேடல் தேடுகிறாய்!

*இ. மிதுலா,*
*நுணாவில்.*

### உதவிக் கரம்!

மனிதம் செத்துவிட்ட
மிருக பூமி தன்னில்
உதவிக் கரம் நீட்ட
இங்கு யாருமில்லை
உறுதி கொள் உடன் பிறப்பே
உயிர் உடலில்
இருக்கும் வரை
என் கரம் உனக்கு
ஆதரவளிக்கும்!

*D.மேரின்மிற்றா,*
*யாழ்ப்பாணம்.*

### நீ அநாதை இல்லை!

தம்பியே
அன்னம் ஊட்ட
தாய் இல்லை
அறிவூட்ட
தந்தை இல்லை
ஆனாலும் – நீ
அநாதையில்லை
பாசத்துடன் அரவணைக்க
அக்கா உண்டு.

*அருமை – அன்பு,*
*கொற்றையூர்.*

### முயற்சியே வளர்ச்சி!

அட சின்னத் தம்பி
உன்னைத்தான் நம்பி
அக்கா அனுப்புகிறாள் பள்ளி
அங்கு படித்திடு கல்வியை அள்ளி
அதற்கு எடுத்திடு முயற்சி
அதுவே உனக்கு உயர்ச்சி
உனக்கு அப்பாவாய்
அம்மாவாய் இருக்கும்
உன் அக்காவுக்கும் அதுவே
மகிழ்ச்சி.

*த.அனுந்தகுமார்,*
*யா.நெ.ம.ம.வி.*

### சாதனை படைத்திடு!

சகோதரா!
துன்பத்தோடு சம்பந்தம் செய்து
துயரின் மிதங்களைச் சொந்தமாக்கி
சோகத் தீக்குளிப்பில் எரியும் மெழுகுவர்த்தியாக,
எமது வாழ்க்கை கழிந்திடாமல் சரித்திர நிமிடங்களைச்
சந்திக்கும் சாதனை மனிதனாக மாறி நீயும்
எமது வாழ்வை அர்த்தமாக்கிடு!

*யோ. நித்தியா,*
*நல்லூர்.*

### ஆதரவு!

அன்புடன் அரவணைக்கும்
அன்னையும் நீயே,
அணைத்தெடுத்து, என்னைத் தோளிலிடும்
அப்பாவும் நீயே, அக்கா....!
உன்னை எங்ஙனம்
யான் மறப்பேன்...............!

*து.முகுந்தன், சாவகச்சேரி.*

### சத்தியம்!

தாய் இன்றி தந்தை இன்றி
தனியே நாம் நின்றாலும்
நானுள்ளேன் உனக்குதவ
நம்பியிரு தம்பியே
வான் மீது சத்தியம்
வளர்வோம் நாம் நிச்சயம்.

*அ.வாசு,*
*சாவகச்சேரி.*

### கும்பிட வேண்டும் வா!

என்
வாழ்க்கைச் சட்டைக்கு
பொத்தான் போடும்
முத்தான உன் விரல்களை
முடிந்த வரை நேசிக்கிறேன்
உன் கூந்தலுக்கு
பார்வைகளால்
குறிஞ்சி மலர்களைச் சூட்டிக்
குதூகலித்துக் கொள்கிறேன்
நானும் நீயும்
நாட்கள் கோடி சென்றாலும்
கூடியிருக்கும் வரங்கேட்டு
கும்பிட வேண்டும் வா!

*சூரியநிலா,*
*ஈச்சமோட்டை.*

### கலங்காதே!

தளிர் நடையில் உறவாடும்
பாலகனே!
விண்ணடைந்த அன்னையின்
அல்லலினால்
கலங்காதே - உன்னை
பாசத்துடன் அரவணைத்து
அன்பு காட்ட
உன் அக்கா உள்ளாள்.

*நா. பாரதி,*
*யாழ்ப்பாணம்.*

### தனிமரமாய்!

அம்மாவும் அப்பாவும்
ஆளுக்கொரு திசையில்
அரவணைக்க யாருமில்லை
அன்புத் தம்பியும் நானும்
தனிமரமாய் வாழ்கின்றோம்.

*ப.உதயகுமார்,*
*அளவெட்டி.*

### உங்களில்தான்!

ஆலயந் தோறும்
பக்த கோடிகள்
தெய்வத்தைத் தேடித்
தேடுதல் வேட்டைகள்...
உங்களில் அவனோ
சிரித்தபடி!

*இரா.ஜெயக்குமார்,*
*உரும்பிராய்.*

### கவலை வேண்டாம்!

ஓ சின்னவனே,
பெற்றோர் இல்லையென்று நீ
கவலை கொள்ளாதே!
உடையுடுத்தும் உன்னுறவு
என்றும் உனைக் காக்கும்
மறந்திடாதே!

*நா.ஜெனார்த்தனன்,*
*யாழ்ப்பாணம்.*



### நேரமாகிறது!

அக்கா!
சீக்கிரமாகத் "தெறி"யைப் பூட்டு
எனக்கு
பாடசாலைக்கு நேரமாகிறது.

*பா.திருக்குமார்,*
*ஆனைப்பந்தி.*

### பாச ஏக்கம்!

ஏய் .... பாலகனே....!
நீ மட்டும் அம்மாவிற்காக
ஏங்கி நிற்க
உன் ஏக்கத்தை
புரிந்து கொள்ளாது – உன்
சகோதரி..............
சட்டைத் தெறி பூட்டி
அழகு பார்க்கிறாளே
என எண்ணுகிறாயா?!

*P. தனுசா,*
*நல்லூர்.*

### ஆறுதல் அளித்திடுமா?

வீடிழந்து நாடிழந்து
நகரிழந்து உற்றார்
பெற்றாரிழந்து பரிதவிக்கும்
பிஞ்சு உள்ளத்திற்கு
அக்காவின் அரவணைப்பு
ஆறுதல் அளித்திடுமா?

*சி.கைலாயநாதன்,*
*கொக்குவில்.*

### சின்ன (த்) தம்பி

சின்னத் தம்பி சிணுக்கம் [illegible] சிரித்து
நிற்க
அருமைச் சகோதரி
அரவணைப்புக்
காட்டுகிறாள்
பாலர் [illegible] இருவரும்
பரந்த உலகில் பாசமுடன்
வாழ்ந்திடுவோம்~ என் தம்பியே
உனக்கு நான் அன்னையடா
வாழ்வெமக்குச் சொந்தமடா.

*த.தமயந்தினி,*
*கல்வியங்காடு.*

### அச்சமின்றி!

சகோதரர்கள் நாம்
சமாதான உலகிலே
சற்றேனும் அச்சமின்றி
சந்தோசமாக வாழ்ந்திடுவோம்.

*க. திருநீபன்,*
*கரவையூர்.*

### கலக்கம் ஏன்?

தன் பள்ளிப் பருவத்தை இழந்து
தம்பியின் எதிர்காலத்தை
வளப்படுத்தத் துடிக்கும்
தங்கையே! – உனது
எதிர்காலத்தை அவன்
வளப்படுத்துவான்
கவலைப்படாதே!

*இ.வணிகலாதன்,*
*புத்தூர்.*

### துணை!

சகோதரியே.........!
நீ உன் தம்பிக்கு
துணை புரிய நினைக்கிறாய்
ஆனால்........
உன் தம்பியோ
நான் உனக்கு துணைவரேன்
என்பது போல் நிற்கிறானே!

*பொ. குமணன்,*
*சாவகச்சேரி.*

### ஏக்கம்!

அன்பான அக்காவின் அரவணைப்பில்
வாழ்ந்திருந்தும்.
இவன் கண்ணில் இன்னும் ஏன் ஏக்கம்?
பாசமிகு பெற்றோரைப் பலியெடுத்த
கொடிய யுத்தம்,
மீண்டும் வந்தால்.......
இந்த எஞ்சியுள்ள அரவணைப்பும்
அறுக்கப்பட்டுவிடும்
என்றா....?

*சுகந்தன்,*
*அளவையூர்.*

### கவலையை மறந்து விடு!

தாயையும் தந்தையையும் ஒரு
கனப் பொழுதினில் இழந்து விட்டு
தவிக்கிறோம் இனிய அன்புக்காய்
தம்பி! என்னை அரவணைக்கத்தான்
கைகள் இல்லாவிடினும் உன்
எதிர்காலத்தை வளமாக்கிவிட
என் இரு கைகள் உள்ளதடா
கவலையை மறந்து விடு கண்ணே!

*நி. உஷா,*
*சங்குநகர்.*

### அரவணைப்பு!

காலை எழுந்தவுடன் காரியாலயம் செல்வதற்கு
அம்மாவும், அப்பாவும் அவரவர் வேலையில் ஈடுபட
அன்புத்தம்பியினை அரவணைத்து
அக்கா அழகுபடுத்தி விடுகிறாளா?

*கு.பாலா,*
*சுழிபுரம்.*

## மௌனத்தின் தேடல்கள் – 17



அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கி தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி:– 22.06.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் – 17
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்






## நவநாகரிகம் பெற்ற நடைப் பிணங்கள்!

சூரியனின் வியர்வை
சொரிந்தொழுகிச் சுட்டதனால்
தார்கரைந்து மேனியெங்கும்
அம்மைக் கொப்புளங்கள் போட்ட எங்கள்
வீதிகளில் .......
செம்பாட்டொழுங்கைகளில் ...........
செல்லுதிசை தெரியாமல்
சிலுவை சுமந்து செல்லும் சிறுவர்கள்! யாரிவர்கள்!
இந்தக் கரங்களிலே; இளம் பிஞ்சுத் தோள்களிலே
அம்பாரங்களை ஏற்றி அலைய விட்டோர் யாரென்றால்
கண்டிறோட்டால் வந்த ''கன''? வான்கள் சிலபேராம்!
அவர்கள்
கொண்டுவந்த கார்களிலே குட்டி நாய் பூனையெல்லாம்
அன்ரிகளின் மடியில் அரைத்தூக்கக் கோலத்தில்
பின்சீற்றில்! ஓமோம் வாயில்லா உயிர்களிலே
வலுகவனம் எனக் கேள்வி
அது நிற்க

நான்கின்மேல் இரண்டு கால்
நாகரிகம் பயணித்த பாங்காகும்
இங்கோ
பின்னம் தலைகீழாய்! பிழையெங்கோ நடந்திருக்கு
பாங்கா! நீ சுமந்து வந்த
இந்தக் கட்டிலுடை இரும்புக்கால் பார்க்கையிலே
உந்தன் முதுகெலும்பென் முன்னே நிழலாடும்
கொண்டு தந்த மெத்தையிலே
துறண்டி விழும் பொழுதெல்லாம்
உன்னிதயச் சுவரறையில் உதைப்பட்ட
குருதி மணம்
என் நாசித் துளைகளினைத் துளைத்தென்னைத்
தூக்கிலிடும்
அன்று தந்த றாக்கையிலென்
ஆடை தொங்கும் பொழுதுகளில்
அம்மணமாய் என்மனிதம் தொங்குவது போல் தெரியும்
என்ன செய்ய நண்பா!
யதார்த்த எறும்புகளால் வாழ்வென்ற திட்டைக்கு
கொண்டு செல்லப்படுகின்ற குறுணிப் பருக்கை நான்
என்னால் உனக்காக என்னால் உனக்காக....
எழுத மட்டுமே முடியும்.

சமுகுந்தன்.

## இலட்சியம் காண!



பொழுதே போகாமல்
புலம்பும் புது மனிதா
உறங்காத விழிகளுடன்
அறங்காக்கப் புறப்படு
கண்ணீரில் கரையாதே
தோல்விகளில் புதையாதே
தோல்விகளைக் கண்டு
தொல்லையடையாதே
உருக்கு மனிதனாய்
உழைக்கத் தொடங்கு
நம்பிக்கைச் சுடர்
நாளை வழி காட்டும்
துன்பப் பனி விலகும்
தூக்க நிலை சுழியும்
இதயத் திசை காட்டி
இலட்சியத்தைக் காட்டும்
இன்றே தொடங்கட்டும்
ஓயாத நெடும் பயணம்.

இரா.ஜெயக்குமார்.

## இனி நாளை .......!

சத்தங்கள் ஓய்ந்து
யுத்தங்கள் தீர்ந்து
சமாதானம் பிறக்குமென்ற
சந்தோசச் செய்தியுடனும்
வீதி காவலரண்கள் யாவும்
வினயமாய் விலகி
அல்லல்கள் நீங்கி
ஆனந்தம் பிறந்திடவும்
நட்டநிசி வேளையிலே
நங்கைகள் நடமாடவும்
நம்பிக்கையுடன் நாளைப்பொழுது
நன்றாய் மலரும்!

R.பர்ணா,
கரணவாய் மத்தி.

## அந்த இனிய வார்த்தை...!



உன்னைப் பார்த்த
நிமிஷமே நான்
காதலைக் காதலிக்க
கற்றுக் கொண்டேன்
காதலே நீதான்
என்று தெரிந்த பின்
நான் உன்னையே
காதலித்தேன்!
நீயும் ஏற்றுக் கொண்டாய்
என் புரிந்த உள்ளத்தை ....!

என் இதயத்தைத்
தொலைத்து விட்டு
வார்த்தைகளைத் தேடினேன்
உன் மௌனத்தை
உடைத்து - அந்த நாணத்துள்
இனிய வார்த்தைகளைப் புகுத்தி
உன் பால் வீதியில்
உரக்க அழைத்தேன்
ஏன் எங்கே ஓடி மறைந்தாய்
ஓ... இது தேய்பிறைக் காலமாயிற்றே
வெண்ணிலவே...!

அனலையூரான்.

## அவளும் ஒரு பெண்.....!



இருளாத வேளையிலும்
இருண்டு கிடக்கும் வாழ்வில்
ஒளியான உணர்வுகளைத்தேடி
ஓலமிடும் அவளிதயம்?
களையான கவலைகள்
கலைந்திட மாட்டாதா?
கனத்திருக்கும் சுமைகளை
கண்டு மனம் ஏங்கிடுவாள்
பூக்களின் வருடல்களிற்காக - அந்தப்
பூவிழி ஒருபோதும்
ஏங்கியதில்லை?
முட்களாவது வலிதராமல்
விலகிடட்டு மெனவே
பிரார்த்திப்பாள்
ஆனாலும்
சொற்களால் சுட்டிடும்
சோகத்தின் வலிகள்
முட்களின் விஷத்தைக்கூட
விழுங்கி விட்டுச்
சிரிக்கின்றதே?
கற்களில் மோதிடும் கால்கள்
கனத்த கண்ணீர்ச் சுமைகள்
கனவிற்குள் வாழும்
கண்மணி அவளும்
ஒரு பெண்...!

எஸ். நந்தூ,
இணுவில்.

## வண்டுதல்...



இந்த மண்ணில் அமைதி நிலவுக
எங்கும் இன்பம் மழையாய்ப் பொழிகுக
அந்தரங்கள் அகலுக யாவரும்
அன்பெனுங் கொடிக் கீழே திரளுக
எந்தக் கண்களும் கண்ணீரைச் சிந்திடல்
இல்லை இங்கினி என்றுஅசரீரி
எந்தத் திக்கும் எழுக அநீதியின்
இறப்பை நம்புவோம் துடக்குக் கழிக்குக
உயிர் பயிர்செய்தோம் விளைச்சல் பெருகட்டும்
உணர்வை மீட்டுவோம் இசை அமுதாகட்டும்
தயிர்கடைதல்போல் துயரம் கடைந்திடத்
தத்தளித்தனம் தடைகள் தகரட்டும்
கயிறெறிந்திட்ட எமனின் கரங்கட்டிக்
காட்டினோம் பயம் சாய்ப்போம் புருவங்கள்
உயர்த்தி எண் திசை எம்மையே நோக்கிட
புரிந்த ஈகங்கள் வெல்லணும் நேருவோம்.

த.ஜெயசீலன்.

## மனமே அழகு

நீ கறுப்பு என்பதால்
உன் காதலுக்கு மறப்பு
தெரிவிக்க மாட்டேன்
ஏனென்றால்
இருண்ட வானில் வெண்ணிலா
இருப்பதைப் போல்
உன் இருண்ட மேனியில்
வெள்ளை மனதையல்லவா
வைத்திருக்கிறாய்.

K.தீபா,
பருத்தித்துறை.

## சொல்லு.. நிலவே... சொல்லு....!

நிலவே .....
நீண்ட பெருமூச்சோடு
நினை நான் நெருங்குகிறேன்
நீ...........
ஆண்ட அடி வானம்
அமைதியிழந்ததை நினைத்து....
மூண்ட எம் காதலின்....
முடிவு ..... போல்....
உன்..... முடிவும் .....
முகவரியைத் தொலைக்க .....
இனி ..... யாரிடம் செல்வேன்..?
என் காதலை ........
கவிதையாய் தூதனுப்ப ....
சொல்லு ..... நிலவே .... சொல்லு...

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

## நண்பனாய்...!



உன் மிட்டாய்த் தனமான பேச்சால்
என்னைக் குழந்தைத் தனமாக
ஏமாற்றி
இன்று மறந்து விடு என்றாலும்
நான்
மறக்க மாட்டேன் உன் நினைவை
என் மனதில் நீ குடிவந்தது உன்
வலது காலை முன்வைத்தல்லவா?
பூக்களின் மீது பனித்துளியாய்
உன்
பசுமையான நினைவுகளோடு
இன்னும்
காத்திருக்கிறேன் உன்
வருகைக்காக...!

R.T.மயூரன்,
பொலிகையூர்.

## மரணித்த மனங்கள்!

யுத்தங்கள்
சத்தமின்றி கொல்கின்றன
மனிதரை மட்டுமல்ல
மனங்களையும்,
தினம் தினம்
புண் பட்டு - ஆறாத
வடுக்களாக்கி
கல்லறைக்குள் குடியேறி,
கருத்திழந்தவை
கணக்கற்றவை.

S.சூர்யா,

## இனிமை!

மழலையாய் தாய் மடிமீதில்
மகிழ்ந்த காலங்கள் ....இனிமை
சிறுவராய் மகிழ்வு கொண்டு
சிட்டுக் குருவிகளாய்ப் பறந்த
சின்ன வயதும் மிக இனிமை.
துயரும் பொறுப்பும் எதுவுமே
தெரியாது
சுற்றித் திரிந்து
பசி மட்டுமே உணர்ந்த
பத்தை அண்டிய வயதும்
இனிமை
பசி தீர்த்த தாயின் மடியில்
பக்குவமாய் உறங்கி
அமைதி கண்ட காலமதும்
இனிமை
குறும்புடன் சிறுவராய்
குத்தி முறிந்ததும்.... அயல்
வீடுதனில் திருடி உண்டதும்
வீதிதனில் சண்டித்தனம்
சளைக்காமல் செய்ததும்
இனிமை
இளைஞன் ஆனதும்
கனவு வந்ததும் காதல் வந்ததும்
எம் பொறுப்பும் புரிந்ததும்
இழந்ததும் இனிமை
இங்கு வேண்டுமென
இனிமை தேடியே இனி
இழக்கப் போவதும் இனிமை
-வாழ்வில் எல்லோருக்கும்
வரமாய் வேண்டும் இனிமை.

சி.மதியழகன்,
திக்கம்.

## என்னைத் தவிர



மதிமயங்கும்
மாலைப் பொழுது
உன் மனதை மயக்கும்
கவிதை யொன்றை
பரிசளிக்க - என்
மனம் ஏங்கித் தவிக்கிறது
அமர்ந்து
வர்ணனை வரிகளைத் தேடி
எண்ண அலைகளை
அனுப்பலாம் ஆனால்
எண்ணங்களிலும்
என்னிலும்
நீயே கலந்திருப்பதால்
என்னைத் தவிர
என்னிடம்
வேறெதுவும் இல்லை
இவ்வுலகில் நீ உதயமான
தினத்திற்குத் தருவதற்கு
என்னைத் தவிர
வேறெதுவும் இல்லை.

சு.ந.எழில்,
பொலிகை.

# ஆலய தரிசனம்

## சிறுகதை

**வாசுகி**

அபிராமியம்மா மீளாத்துயிலில் ஆழ்ந்திருந்தா. வெள்ளை வெளேரென்ற அவவின் முகத்தில் ஒரு நாணயம் அளவு குங்குமப் பொட்டு மிளிர்ந்து கொண்டிருந்தது. நிரந்தரப் புன்னகையொன்று இதழ்க்கடையில் விரிந்து முகத்தை மேலும் பொலிவு படுத்தியது.

வாழ்வினை நிறைவாக அனுபவித்துப் பூர்த்தியாக்கிச் சுமங்கலியாகப் போகின்றேன் என்ற நினைப்பு அவரது புன்னகைக்குக் காரணமாகலாம்.

இந்தக் காலத்தில் பூட்டப் பிள்ளையைக் காணும் வரை வாழ்வது என்பது சாதாரண காரியமா?

அதிக நோயாலும் அறுபது ஆண்டுகளாகத் தம் ஜீவனோடு கலந்து விட்டவளின் பிரிவைத் தாங்க முடியாமலும் உண்டான துயரங்களைத்தன்னுள் அடக்கி அந்த நினைவுச் சுழியில்அமுங்கியிருந்த பரமசாமியைத் தவிர இந்த மரணத்தை அவரது குடும்பம் இயல்பாக ஏற்றுக் கொண்டது போல் இருந்தது. ஒப்பாரி முதலிய சடங்காசாரங்கள் எதுவும் இன்றி சாயி பஜனைக் குழுவின் உருக்கமான பக்திப் பாடல்கள் மட்டும் அந்த வீட்டில் ஓங்கி ஏதோ ஒருவகையான அமைதியை நிலவப் பண்ணியது.

அபிராமியம்மா பரமசாமி தம்பதியருக்கு ஐந்து பிள்ளைகள் பரமசாமி கச்சேரியில் கிளாக்காக உத்தியோகம் பார்த்த போதும் தமது பரம்பரைத் தொழிலான தோட்டத் தொழிலையும் விடவில்லை.அபிராமியம்மா இவரது தோட்டத்தில் தானும் ஒருத்தியாகப் பாடுபட்டிருக்கிறார். இதனால் அவர்களது செவ்வையான வாழ்வில் வறுமை எட்டிப் பார்த்ததில்லை. மூன்று மகன்களையும் படிப்பித்து எஞ்சினியர், டொக்ரர் எனப் பெரியவர்களாக்கி விட்டார்கள். பெண்களில் ஒருத்தி நேர்ஸ். கடைக்குட்டி சாந்தா ஆசிரியை. கடைசி மகன் கொழும்பில் வசிக்கிறார். சாந்தா ரீச்சர் மட்டுமே யாழ்ப்பாணத்தில் குடும்பத்தோடு இருக்கிறார். ஏனைய பிள்ளைகள் குடும்பமாக வெளிநாடுகளில் வசிக்கிறார்கள்.

கொழும்பில் இருந்த மகன் தாயைப் பார்க்கச் சென்ற கிழமைதான் யாழ்ப்பாணத்துக்குக் குடும்பத்தோடு வந்திருந்தார். அந்த மகிழ்ச்சியின் பூரிப்பு அபிராமி அம்மாவிடம் தெரிந்ததை நான் இங்கு வந்திருந்த போது நன்கு அவதானித்தேன். ''குஞ்சு நான் வாழ்க்கையில அனுபவிக்க வேண்டியதெல்லாம் மகிழ்ச்சியா நிறைவா அனுபவிச்சிட்டன் அந்தக் கந்தன் என்னை எப்பவும் கைவிடேல்ல'' அப்பொழுது அவ எனக்குச் சொன்ன வார்த்தைகள் இவை.

உலகில் வாழும் எத்தனை சீவன்கள் இத்தகைய திருப்தியை அனுபவிக்கின்றன? வாழ்க்கை கரடுமுரடாக இல்லாத போதும் தமது செயல்களால் வலியக் குத்தி குதறி எத்தனைபேர்தங்களையும் மற்றவர்களையும் காயப்படுத்திக் கொள்கிறார்கள்.

அபிராமியம்மாவின் வாழ்வுக்குத்தான் எத்தனை அர்த்தங்கள் எத்தனை பரிமாணங்கள்.

''நேற்று அம்மா அண்ணாவோட எங்களோட எல்லாம் நல்லாக் கதைச்சிட்டு பதினொரு மணியளவிலதான் படுத்தவா. அப்பா நாலு மணியளவில் எங்களை எழுப்பி 'அம்மாவுக்கு என்னவோ செய்யுது ஒருக்கா வாங்கோ' எண்டு கூப்பிட்டார். நாங்கள் எல்லோரும் சுற்றி நின்றோம். அம்மா தண்ணி கேட்டிட்டு எல்லோரையும் ஒரு முறை பார்த்தா. அவவின் பார்வை



கடைசியில் அப்பாவில் நிலைத்தது. அண்ணா தண்ணி பருக்க ஒரு வாய் குடிச்சா அதோட சீவன் போயிட்டு'' பெற்றதாயின் கடைசி நிமஷங்களை விபரிக்கும் போது சாந்தா ரீச்சரிடம் ஒரு பெருங்கேவல் எழுந்து ஒரு கணம் அந்த வீட்டை அதிரச் செய்தது.

எனக்குள் முட்டி மோதிக் கொண்டிருந்த துயரம் எத்தனையோ பிரயத்தனம் எடுத்தும் அடக்க முடியாது ரீச்சரின் கேவலோடு இணைந்து வெளிப்பட்டது. எல்லோரும் அதிசயமாக என்னை நோக்கினர். என்னை நான் கட்டுப்படுத்திக் கொண்டு முழங்கால்களுக்குள் என்னைப் புதைத்துக் கொள்கிறேன்.

''அபிராமியக்காவிண்ட சாவு போல ஆருக்கு வரும். மனிசி நோய்நொடி எண்டு எதுவுமில்லாமல் குடும்பத்துக்கு நேற்று வரை உதவி செய்து கொண்டல்லே இருந்தது'' ஏறத்தாழ சம வயது மீனாட்சியின் சொல்லில் யதார்த்தம்மட்டுமல்ல ஆதங்கமும் இருக்கத்தான் செய்கிறது.

பஜனை நிறுத்தப்பட்டு கிரியைகள் ஆரம்பமாகின்றன. நான் வெளியே வருகிறேன்.அபிராமியம்மா பரமசாமி தம்பதியினரின் வாழ்க்கைச் சிறப்பு அங்கு அலை மோதிய சனங்களின் பெருக்கத்தில் தெரிகிறது.

கிரியைகள் விரைவாக நிகழ்ந்தேறுகின்றன. அபிராமியம்மா இறுதியாக என் கண்களுக்குள்அகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பு உந்த அவவின் உடலுக்கு மிக அருகில் சென்று நிற்கிறேன்.

பேரப்பிள்ளைகள் பந்தம் பிடித்து அபிராமியம்மா மீது தங்களுக்குள்ள உரிமையை நிலை நிறுத்தி நிற்கிறார்கள். அவர்கள் கண்களில் அன்புப் பாட்டியின் இழப்பினால் ஏற்பட்ட துயரம் கண்ணீராக வழிகிறது. அவரது பிள்ளைகள் அவரை வலம் வந்து வணங்குகிறார்கள்.

எனது கண்கள் அபிராமியம்மாவின் முகத்தில் நிலைக்கிறது. அங்கு அவர்கள் தங்கள் தாயையா கிடத்தி இருக்கிறார்கள்......?

இல்லை எனது தெய்வமே... கண்கள் குளமாகின்றன. அந்தத் தெய்வத்தை ஒரு முறையாவது வலம் வந்து கும்பிட வேண்டும் என்ற உந்துதல் என்னையும் மீறி... எனது மூளையின் கட்டளைக்கு அல்ல இதயத்தின் கட்டளையை ஏற்றுக் கால்கள் முன்னேறுகின்றன. அபிராமியம்மாவின் மிக நெருங்கிய உறவினரோடு நானும் அவரை வலம் வருகின்றேன். எனது தெய்வத்தின் கால்களைக் கட்டிக்கொண்டு கதறுகிறேன்... என்னோடு மேலும் இரண்டு பெண்கள் இணைந்து கதறுகிறார்கள்.

எங்கள் கண்ணீரால் அபிராமி அம்மாவின் பாதங்கள் நனைகின்றன. எங்களது அழுகை சில நிமிடத்துளிகளை விழுங்குகின்றது.

எங்களது இச் செயலின் தார்ப்பரியம் புரியாது சாந்தா ரீச்சர் உட்பட அனைவரும் திகைத்து நிற்கிறார்கள்.

1987 கார்த்திகை மாதம் எங்கள் பிரதேசத்தின் அமைதி முற்றாக அழிந்து போயிருந்தது. அன்று இரவு பன்னிரண்டு மணியிருக்கும் இரண்டு துவக்குச் சூடுகள் அந்தகாரத்தைக் கிழித்துக் கொண்டு எழுந்தது. அதனைத் தொடர்ந்த பல சூடுகள். இராணுவம் நடமாடும் ஓசைகள்... நாய்களின் குரைப்பொலி அந்தக் கிராமத்தின் நித்திரையை முற்றாகக் குழப்பி விட்டது.

மனதில் இனந்தெரியாத பீதியுடன் போர்வைக்குள் என்னை முடக்கிக் கொள்கிறேன். அக்கா, அத்தான் எழும்பிக் கதைத்தது பிள்ளையை எழுப்பியிருக்க வேண்டும். அது வீரிட்டுக் கத்தியது. அக்கா அதைச் சமாதானப் படுத்தப் பிரயத்தனப்படுகின்றா.

குழந்தையின் அழுகை இராணுவத்தின் கவனத்தை ஈர்த்து விடுமோ என்ற பயம் என்னைக் குடைகிறது. தெப்பம் போல் வேர்வையால் நனைந்து போகிறேன். நெஞ்சுப் ப படப்பு காதுவரை கேட்கிறது.

நான் பயந்தது போலவே..... இராணுவம் வேலியை வெட்டி உள்ளே வருகிறது. நாய் அவர்களின் வருகையைக் கட்டியம் கூறுவது போல ஊளையிடுகிறது.

தடார்..... தடார்...... எனத் தட்டப்படுகிறது கதவு. கோடிப் பக்கமாக இராணுவத்தின் அழுத்தமான சப்பாத்து ஒலி. எனது அறை யன்னல் அருகே கறுத்த உருவமாய் ஓர் ஆமி அவன் ஆக்ரோசமாக யன்னலில் துவக்கால் ஓங்கிஅடிக்கிறான். யன்னல் கண்ணாடி கலீர் என்ற ஓசையில் சுக்கு நூறாய் உடைந்து விழுகிறது.

கட்டிலில் கிடந்த நான் ஒரு கணம் செயலற்றுப் போகிறேன். இரத்தம் உறைந்து கால்,கைகள் விறைத்துப் போகின்றன. ஆனால் தப்பு தப்பு என்று மனக்குரல் என்னை அறையில் ஊர்ந்து வெளியேவர வைக்கிறது. அக்கா குழந்தையுடன் கோலுக்குள் வந்து நிற்கிறா. அவவின் பின் போய் ஒண்டுகிறேன். கதவு மேலும்ஆக்ரோசமாகத் தட்டப்படுகிறது. இனியும் கதவு திறக்கப் படா விட்டால் கதவு உடைக்கப் படும்என்பதையும்அதன் விளைவு பயங்கரமானதாய் இருக்கும் என்பதையும் கணித்துக் கொண்ட் அத்தான் கதவைத் திறக்கிறார். அத்தானை வேகமாகத் தள்ளியபடி திபு திபு என்று உள்நுழைந்த இராணுவம் ஒவ்வொரு அறையாக நுழைந்து வருகிறது. ஹிந்தியில் ஏதோ பேசியவாறு வந்த ஒரு ஜவானின் பார்வை என்னில் நிலை குத்துகிறது.

நான் ஒடுங்கிப் போகிறேன்-- உடல் நடுங்குகிறது. அந்த இடத்திலேயே எனது உயிர் போய் விடக் கூடாதா என்று மனம் ஏங்குகிறது.

ஒரு கணப் பொழுதில் அத்தான் தாக்கப்படுகிறார். அக்கா எவ்வளவோ கதறிக் கெஞ்சியும் கூட பலனில்லாது நான் அவர்களால் இழுத்துச் செல்லப்படுகிறேன். தப்புவதற்காக என்னால் எடுக்கப்பட்ட எல்லா முயற்சியும் தோற்றுப் போகக் கிட்டத்தட்ட மயக்க நிலையை அடைகிறேன்.

அந்த உடைந்து பாழடைந்து இருந்த வீட்டை அடைந்த போது இல்லை இழுத்துக் கொண்டு வரப்பட்ட போது அங்கு கிட்டத்தட்ட 20 பேர் அளவில் எங்கள் ஊர்ப் பெண்கள் அநேகர் என்னோடு படித்த தோழிகள்.

பலிக்கடாக்களான எங்களைச் சுற்றி இறைச்சியை உண்ணக் காத்திருக்கும் வெறிபிடித்த பசி நாய்களாய் இராணுவம்.

எங்கள் இறுதிக் கதறல் .... மண்டபத்தில் எதிரொலித்து எங்களிடமே திரும்பி வருகிறது. எங்களில் பலர் மயங்கி விழுகின்றார்கள்.

வாழ்க்கையில் இறுதி நம்பிக்கைத் துளியும் என்னுள் வறண்டு போக என்னை மாய்த்துக் கொள்ளவாவது ஏதாவது வழிகிட்டாதா எனச் சுற்றிப் பார்க்கிறேன்.

அப்பொழுதுதான் அந்தப் பேரதிசயம் நிகழ்கிறது. அபிராமியம்மா இராணுவ அதிகாரியோடு அபிராமி அம்மனே தன் பரிவாரங்களோடு தோன்றியதாய்....

இராணுவ அதிகாரிகளைக் கண்ட போது வெறிநாய்கள் சலூட் அடித்து மெல்ல நழுவப் பார்க்கின்றன. ஆனால் அதிகாரியின் கட்டளை அவர்களுக்குரிய தண்டனையின் தன்மையை விளக்குகிறது. அவர்கள் மற்ற இராணுவத்தால் பிடிக்கப்படுகிறார்கள்.

நாங்கள் அபிராமியம்மாவைக் கட்டிக் கொண்டு கதறுகிறோம். அதிகாரிக்கு நன்றி கூறி எங்களை அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள். தெய்வ விக்கிரகம் வலம் வரும் போது அதன் பின்னே செல்லும் பக்தர்களாக நாங்கள் தொடர்கிறோம்.

அபிராமியம்மாவின் பக்கத்து வீட்டுப் பிள்ளை சுமதி பிடிக்கப்பட்ட போது அபிராமியம்மா அவரை விடுவிக்க இராணுவத்தோடுஎவ்வளவோ போராடியிருக்கிறார். துவக்கின் அடிப்பாகத்திலான அடியே அவருக்குப் பரிசாகக் கிடைக்கிறது. அவ்வாறு போராடிய போதே அங்கு இரா ணுவ அதிகாரி எவரும் இல்லாததை அனுமானித்துக் கொள் கிறா. இராணுவம் போனபின் அந்தப் பயங்கரமான ''கண்ட இடத்தில் சுடும்'' ஊரடங்கு வேளையில் அவை எவற்றையும் பொருட்படுத்தாது ஓட்டமும் நடையுமாக இராணுவ முகாமை நோக்கிச் சென்றிருக்கிறா. அங்கே பெரிய கூக்குரலிட்டு இராணுவ அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்துத் தமக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத் தில் எங்கள் நிலைமையை விபரித்திருக்கிறா.

இராணுவ அதிகாரி நல்லவராக இருந்திருக்க வேண்டும். மேலும் தன்னுடைய ஜவான்களின் திருவிளையாடலும் அது நிகழும் இடமும் அவருக்குத் தெரியாதிருக்க நியாயமில்லை. அதனால் உடன் நடவடிக்கை எடுத்தார்.

அபிராமியம்மா வீட்டை நாம் அடைந்த போது நாம். எல்லோரும் களைத்துப் போயிருந்தோம். யமனின் வாசலுக்குப் போய் வந்தது போல் இருக்கிறது. சாந்தா ரீச்சரும் பிள்ளைகளும் கணவர் வீட்டிற்கு ரவுனுக்குச் சென்றிருந்ததால் நல்லதாய்ப் போயிற்று. எங்களைக் காலை வரை அங்கேயே தங்க வைத்தார்.

''பிள்ளையள் இப்ப நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கோ, முருகன்ட கருணையால நீங்கள் காப்பாற்றப் பட்டியள். இந்தச் சமூகம் கெட்டது. பனிப்புகாரைக் கண்டிட்டு நெருப்புத்தான் எண்டு சத்தியம் பண்ணும். அதால நடந்த ஒரு விஷயத்தையும் நீங்கள் உங்களுடைய வாழ்நாள் வரை வெளியிடக் கூடாது. உங்களைப் பெத்தவை, உடன்பிறப்புக்களிட்டையும் இதைத்தான் சொல்லுங்கோ. நானும் இது பற்றி மூச்சு விட மாட்டன். செயவீங்களோ?''

''எங்களைத் தெய்வமா காப்பாத்தினீங்கள். நீங்கள் என்ன சொன்னாலும் நாங்கள் கேப்பம்'' ஒருமித்து கோரஸ் பாடினோம்.

கலகலத்துச் சிரிச்சு இப்படிச் சொன்னா அபிராமியம்மா. ''நான் தெய்வமுமில்லை சந்நிதியுமில்லை. எங்கடை முருகமூர்த்தியான்தான் உங்களக்காப்பாத்த என்னக் கருவியாக்கினான்.''


ஓம். முருகன் தான் உங்களுக்குள்ள புகுந்து எங்களைக் காப்பாத்தினான். ஆனா; முருகன் தோன்றின் உங்கட உடம்பு எங்களுக்குக் கோயில்தான்.

எங்களில் பத்து வருட இடைவெளியில் நாங்கள் மூன்று பேர் தான் ஊரில் குடும்பமாச் சீவிக்கிறோம். எங்கள் அழுகையின் அர்த்தம் எங்கள் மூவருக்கும்தான் புரியும். இந்த இடத்தில் ஊரவருக்கு நாங்கள் மூவரும் புதிர்தான்.






## சண்டை போட நாங்கள் ரெடி நீங்கள் ரெடியா...?



அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து மாதம் ஒரு முறையாவது சண்டைபோட்டுக் கொள்கிற தம்பதிகளில் விவாகரத்து விகிதம் குறைவாக இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

கணவனோ, மனைவியோ சரியான விதத்தில் கோபப்பட்டு, சரியான முறையில் அதை வெளிப்படுத்திச் சண்டைபோடுவது உடம்புக்கும், மனதுக்கும் நல்லது என்று அமெரிக்க உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். கோபத்தைச் சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டுமென்பதுதான் முக்கியமான நிபந்தனை.

முன் கோபிகளான கணவனும், மனைவியும் கொண்ட குடும்பங்களை ஆராய்ந்த ஜான்காட்மன் என்கிற உளவியல் பேராசிரியர் ஒருவரையொருவர் தீற்றம் சாட்டிக் கொள்ளாமலும், அவமானப்படுத்தாமலும், ஏளனம் செய்யாமலும் சண்டை போட்டால் ஆபத்தேயில்லை என்கிறார். அத்தகைய தம்பதிகள் நீண்ட காலம் மகிழ்ச்சியுடன் குடும்பம் நடத்துகிறார்கள். விவாகரத்து மிக அரிதாகவே தேவைப்படுகிறது. சிரிப்பு, மன இறுக்கம், காதல், சண்டை என்று மாறிமாறி இருக்கும் குடும்பம் ஒரு அறுசுவை விருந்தாக அமைந்துவிடுகிறது.

குடும்பம் வெற்றிகரமான பாதையில் செல்லுவது என்பது கணவனும், மனைவியும் ஒருவரையொருவர் எவ்வளவு தூரம் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் பொறுத்திருப்பதில்லை.

ஒருவரையொருவர் முழுமையாகப் புரிந்து கொண்ட பின்னரும் தன்மானத்தைப் புண்படுத்துகிற மாதிரி ஒரே ஒரு சொல்லைச் சொல்லி விட்டால் போதும். ஆண்டாண்டு காலமாக வளர்ந்து வந்த ஆசையும் பாசமும் அற்றுப்போகும். அடிப்பது கூட அவ்வளவு சேதத்தை ஏற்படுத்தாது. ஆனால் நாம் சொல்லும் சொல் இதயத்தை ஒரு கணத்தில் உடைத்து விடும்.

எஸ்.எஸ்

(தொடரும்...)

## ஆகா! மெல்லநட மெல்லநட...!

நடந்தால் ஆரோக்கியம் ஏற்படுமா? கேள்வி வேண்டாம். நடந்து பாருங்கள். பின்பு நடப்பதைப் பாருங்கள்.

நடந்து பழக்கமில்லாதவர்கள் கொஞ்சத் தூரம் நடந்தாலும் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கும். உடலிற்குத் தேவையான ஒட்சிசன் கிடைக்காவிட்டால் இந்நிலை ஏற்படும்.

நல்ல ஆரோக்கியத்துடன் நீங்கள் இருக்க விரும்பினால் சோம்பலை உதறித்தள்ளித் தினமும் நடக்கும் பழக்கத்தைக் கடைப்பிடியுங்கள்.

'நடப்பதனால் என்ன லாபம்' என்று கேட்கிறீர்களா? அதற்கு இதோ பதில். நம்உடலில் உள்ள தசைகள் இயங்குவதற்குத் தேவையான ஒட்சிசன் அப்போது கிடைக்கிறது.

என்ன நீங்கள் நடக்கத் தயாராகிவிட்டீர்களா? அப்படியானால்,



நடப்பதற்கு அதிகாலை நேரத்தைத் தேர்ந்தெடுங்கள். அப்போது தான் காற்று மாசுபடாமல் பரிசுத்தமாக இருக்கும்.

நடைப் பயிற்சியை நீங்கள் ஆரம்பிக்கும் போது சீராக, ஒரே அளவில் நடக்கவேண்டும். நடையைத் திடீரென்று குறைக்கவோ, வேகப்படுத்தவோ கூடாது.


நடக்கும் போது நீங்கள் ஒரேயடியாகத் தலை, தோள் எல்லா வற்றையும் விறைத்துக் கொண்டும் நடக்கக்கூடாது. அப்படிச் செய்தால் தோள்வலி, கழுத்துவலி, நெஞ்சுவலிகள் வரக்கூடும்.

நடக்கும்போது மெல்லிய, பாரமில்லாத காலணிகளை மட்டுமே உபயோகியுங்கள். நாளொன்றுக்கு 10 – 20 நிமிடங்கள் நடக்கலாம்.

நடைப்பயிற்சி முடிந்து வீட்டிற்குத் திரும்பியதும் தரையில் கை, கால்களை நீட்டிப்படுத்து உடலை 'ரிலாக்ஸ்' செய்த பின் குளியுங்கள். இப்போது, உங்கள் உள்ளத்திலும், உடம்பிலும் புத்துணர்ச்சியை உணர்வீர்கள்.

சு.மதுவந்தி

## இல்லத்தரசிகளுக்கு!



* நல்ல பச்சை நிறமாக இருக்கும் பாகற் காயைவிட வெள்ளைநிற பாகற்காயில் அதிக சத்துக்கள் உள்ளன.

* பாலில் ஒரு ஜாதிக்காயைப் போட்டுக் காய்ச்சினால், பாலில் உள்ள அசுத்தங்கள் நீங்கிவிடும்.

* சமையலில் சோடாவை சேர்ப்பதால் விட்டமின் 'சி' சத்து அழிந்துவிடுகிறது. எலுமிச்சைச் சாறு, தயிர் ஆகியவற்றைச் சேர்ப்பதால் விட்டமின் 'சி' அழியாமல் தடுக்கிறது.

* காய்கறிகளை இரும்புக் கத்தியால் நறுக்கினாலும் விட்டமின் 'சி' இழந்து விடுகிறது.


* ஆப்பிள் பழம் சாப்பிடுவது பல்லுக்கு நல்லது.

* அயர்ன் செய்யும் போது உடைகளில் வெந்நீர் தெளிக்க வேண்டும். குளிர்ந்த நீரை விட வெந்நீர் விரைவில் துணியால் உறிஞ்சப்படும்.

## காதல் பிறப்பது எங்கே ...?



'என் இதயத்தைத் திருடி விட்டாய்' என்கிறான் காதலன். 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' என்கிறாள் காதலி. உண்மையில் காதல் பிறப்பது எங்கே?



இதயத்திலா? இல்லை மூளையிலா? இந்தக் கேள்விக்கு அவ்வளவு சுலபமாகப் பதில் சொல்லி விட முடியாது என்கிறார் பிரபல இதய அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் சாலமோன் விக்டர். காதல் என்ற பொறி மூளையிலிருந்துதான் ஆரம்பிக்கிறது என்றாலும் அந்த நினைவு உண்டாகும் விளைவுகளை உடல் முழுக்க உணர்கிறது என்கிறார் இவர். இதயத் துடிப்பு உடனடியாக அதிகரிக்கிறது. கண்கள் மற்றும் தோல் போன்ற உறுப்புக்களின் செயல்திறன் அதிகரிக்கிறது. நாளமில்லா சுரப்பிகள் சில குறிப்பிட்ட ஹோர்மோன்கள் அதிகமாகச் சுரக்க ஆரம்பிக்கின்றன. உச்சக்கட்டமாக உடலின் செல்களிலிருந்து அணுக்களின் (Atoms) சிறு கூறுகள் தங்களுக்குள் பரிவர்த்தனை (Transfer) ஆகின்றன. மூளை மற்றும் இதயத்தின் அணுக்களிடையே இது நடை பெறுகிறது. ஆகவே காதல் உணர்வு என்பது உடல் முழுக்க நடைபெறும் சம்பவம் என்கிறார் டாக்டர் சாலமோன் விக்டர். காதல் வசப்பட்டவரின் இதயத்துடிப்பு அதிகரிக்கின்றது என்றால் அது இதயத்தின் தன்னிச்சையான செயல் அல்ல. மூளையின் ஆணைக்குக் கட்டுப்பட்டே இந்த செயல் நடக்கிறது என்கிறார் பிரபல நரம்பியல் வல்லுநரான Dr.லோக முத்துக்கிருஷ்ணன்.

**'இதயமா, மூளையா, காதலுணர்வுக்கு எது முக்கியம்?' என்று ஒரு பட்டி மன்றமே நடத்தலாம் போலிருக்கிறதே!**

வி.எஸ்

## சிந்திப்போமா?



செயலும் எண்ணமும் வீண் போவதில்லை. நீங்கள் கனிவாக ஒருவரிடம் பேசத் தொடங்கும் போது உங்கள் உள்ளத்தில் கனிவு என்னும் பண்பு புலப்படுகிறது. கனிவு மேலும் ஆழமாக வேரூன்றுகின்றது. மறுநாளும் கனிவோடு நடந்து கொள்ளத் துணையாகின்றது.

இதே போன்றுதான் பொருட்களை ஒழுங்காகவரிசைக் கிரமமாக வைத்துப் பழக வேண்டும் என்று எண்ணுவீர்களானால் அந்த எண்ணம் மனதில் பதிகின்றது. மறுநாளும் அதே எண்ணம் மேலோங்குகின்றது.

இந்த உண்மையைத் தான் முயற்சியாளர்கள் அடிக்கடி நினைவு கூர்ந்து கொள்கின்றார்கள்.

எந்தவொரு முயற்சியும் உள்ளத்தில் ஆழப் பதிந்தே தீர்கின்றது. அத்தகைய முயற்சியை அடுத்த முறை எடுப்பதற்குத் தூண்டுகோலாகின்றது. அப்போது அம்முயற்சி எளிதாகவும் ஆகின்றது. முந்திய முயற்சிகள் இப்போது முன்னோடியாக இருந்து நம்பிக்கையை ஊட்டுகின்றன.

### நாம் சிந்திப்போமா?

புதுப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள இலகுவான வழி இது தான்.

ஆரம்பத்தில் சிறு செயலாய்த் தொடங்குங்கள். அது உள்ளத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும்; வேரூன்றும், மீண்டும் மீண்டும் அந்தச் செயல் நடந்தேறும். சில நாட்களின் பின் அதுவே கைவந்த கலையாகிவிடும். முயன்று பாருங்கள்.

வ. கலையரசி

## உருளைக்கிழங்கு வடை

**தேவையான பொருட்கள்**

உருளைக்கிழங்கு - 250g
ரவை (வறுத்தது), கடலைமா
வெங்காயம் - 3
பச்சை மிளகாய் - 2
மிளகாய்த்தூள், உப்புத்தூள் -ஓரளவிற்கு
முட்டை - 1
தேங்காய் எண்ணெய் - 1/4போத்தல்

**செய்முறை**

உருளைக்கிழங்கை அவித்து நன்றாக மசித்து பாத்திரத்தில் போட்டு நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், ரவை, மிளகாய்த்தூள், உப்புத்தூள், கடலைமா என்பவற்றைச் சேர்த்து நன்றாகப் பிசைந்து கொண்ட பின்பு அதனுள் முட்டையையும் உடைத்து விட்டு நன்கு பிசையவும். பின்பு பிசைந்த கலவையைப் பதினைந்து சம அளவாக உருண்டைகளாக உருட்டி வைத்துக் கொண்ட பின்பு, கொதிக்கும் எண்ணெயில் உருண்டைகள் மூழ்கும் வண்ணம் போட்டுப் பொன்னிறமாகப் பொரித்தெடுத்து ஆறிய பின்பு பரிமாறலாம்.

க. சத்யா

## பின்வாங்காதீர்கள்

தாழ்வு மனப்பான்மை என்பது தாங்க முடியாத வேதனை தரும் ஒரு மிகக் கொடிய மனநோய். இதனால் எண்ணற்றோர் நரக வேதனையை அனுபவித்துள்ளனர். அனுபவிக்கின்றனர்.

தாழ்வு மனப்பாங்கு சிறியவர், பெரியவர் இன்றி படித்தவர், படிக்காதவர், மேலதிகாரி, கீழதிகாரி என்று எவரையும் விட்டுவைப்பதில்லை. இது எல்லோரையும் பாதிக்கும் ஒரு விடயமாகி விட்டது. இந் நோயால் பாதிக்கப்பட்ட்வர்களைப் பார்த்தால் எனக்கு எந்தச் செயலையும் செய்து முடிக்க முடியாது? எதைச் செய்தாலும் தோல்வி நிச்சயம். செயலைச் செய்தால் யாரும் குறை கூறுவார்கள், சிரிப்பார்கள் என்று தமக்குள் நினைத்துக் கொண்டு வாழ்க்கையை அனுபவித்து வாழத் தெரியாதவர்களாகி விட்டனர். இறுதியில் வாழ்க்கை பிடிக்கவில்லை, சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக மரணத்தையும் அனுபவித்திருக்கின்றனர் சிலர். முகத்தில் ஒருவித கவலை, எவரைப் பார்த்தாலும் பயந்த



சுபாவம், கூன் விழுந்ததுபோல் உடம்பை வைத்துக் கொண்டு எல்லாவற்றிற்கும் பின்னிற் பதையே நாம் இவர்களிடையே காணக் கூடியதாகவுள்ளது.

என்னதான் படித்தாலும், ஆசிரியரானாலும், அதிபரானாலும், தொழிலாளியானாலும், உயர் பதவி வகித்தாலும் இந்தத் தாழ்வு மனப்பான்மை இவர்களிடையே காணப்படுமெனின் நிச்சயம் தோல்விதான். இதற்கு என்ன செய்வது? உங்கள் கடமைகளை, வேலையை நீங்கள் திறமையாகச் செய்து முடிக்கப் பாருங்கள். முற்றவரை எதிர்பாராதீர்கள்.

சுயசிந்தனையுடன் செயற்படுங்கள். தெரியாத விடயத்தைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டாம். அதே நேரம் தெரிந்த விடயத்தை நான்கு பேர் மத்தியில் சொல்லவும் தயங்க வேண்டாம். பிறரிடையே பேசும்போதும் அவர்களுடைய முகத்தைப் பார்த்து நிமிர்ந்து பேசுங்கள்.

யாருடைய திறமையையும், தகைமையையும் கண்டு பயந்து விடாதீர்கள். அவ்வப்போது தியானம் செய்யுங்கள்.

உ. துஷ்யந்தி.

# மரண விளையாட்டு

பிரியா என்ற பெண் தானே அவள்.

யாரோ பிரியா இல்லை சாட் சாட் இந்தப் பிரியாவேதான்

எதிர்பாராமல் தாக்குண்டான் நீ... நீங்களா அந்தப்பெண்.

ஆமாம் நானேதான் இப்போது கூறுங்கள் என்னையும் அழைத்துப் போனீர்களா? அப்பாவிடம் நான் பெர்மிசன் வாங்குகிறேன்.

பிரியா நான் இதில் முடிவு வெடுக்க முடியாது. அரவிந்திடமும் கமிசனரிடமும் கேட்டு விட்டு நாளை இரவு செல்கிறேன்.

வாட்ச்மேன் ஓடி வந்து அம்மா அவர்கள் வருகிறார்கள். உள்ளே அனுப்பட்டுமா என்றான்.

உடனே அனுப்பு என்று கூறி அன்டக்கிறவுன்ட் அறைக்குச் செல்லும் வழியை ஓப்பின் பண்ணினான். நிரஞ்சினி அவர்கள் மூவரும் வந்தார்கள். நிரஞ்சினிக்கு பக்கத்தில் நின்ற கார்த்திக்கை கழுகுப் பார்வையாய்ப் பார்த்தார்கள். ஒருவன் வாய்திறந்து யாரிவன் என்றான்.

''பொஸ்ஸிற்கு தகவல் சொல்லீ விட்டாயா''.

எஸ் என்றவன் அன்டகிரவுண்ட் அறையை நோக்கி நடந்தான் கூடவே கார்த்திக்கும் தீவிரவாதிகள் மூவரும் நடந்தனர். உள்ளே அழைத்துச் சென்று இந்த அறையில் நீங்கள் தங்கலாம். நாளை முடிவுகளை எடுப்போம் என்று கூறி அறையில் அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்து விட்டு வெளியேறினான்.

உலகத்தை இருள் என்னும் திருடன் சூழத் தொடங்கினான். மூன்று தீவரவாதிகளும் போதையின் மயக்கத்தாலும், களைப்பாலும் நித்திரை வசப்பட்டனர். சிறிது நேரத்தில் அறையின் கோடியில் உள்ள இரகசியக் கதவு ஒன்று மெல்லத் திறந்து ஒரு உருவம் தீவரவாதிகளை நோக்கி வந்தது.

* * *

எங்கும் சூழ்ந்திருந்த கரிய இருளில் சுற்றுப் புறத்தை நோட்டமிட்டவாறு தலையில் இருந்து பாதம் வரை கறுப்புப் போர்வையால் போர்த்தியபடி நிதானமாக அந்த உருவம் வந்து கொண்டிருந்தது. பாண்ட் பார்க் கெட்டைத் தடவி சிறிய பென் ரோச்சை எடுத்து அறையைத் துளாவியது. இந்த இடத்திற்கு யார் வரப் போகிறார்கள் என்ற தைரியத்தில் தீவிரவாதிகள் தங்களின் பைலை கெயர்லஸ் சாய் மேசை மீது வைத்துவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனர். பென் ரோச் மூலம் அறையில் உள்ள ஒவ்வோர் பொருளையும் ஆராய்ந்து பைல் இருந்து மேசை மீது நிலைத்திருந்தது.

மேசையை நெருங்கி கோட்டை எடுத்து விட்டு மினி வீடியோக் கமராவை எடுத்து வைன் ஒவ்வொரு பக்கங்களையும் தெளிவாகப் படம் பிடித்தான். சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் நிதானமாக அனைத்துப் பக்கங்களிலும இருந்த போட்டோக்கள் விபரங்கள் அனைத்தையும் வீடியோக்கமரா தன்னுள் உள்வாங்கியது. இரு தடயத்தையும் விட்டு வைக்காமல் தன் வேலையை முடித்துக் கொண்டு புறப்பட்டான். எஸ் ஐ கார்த்திக்

* * *

அரவிந்தின் வீட்டில் விசாலமான அறையில் சோபாக்களில் அரவிந், ரம்யா, அர்ஜீன், கார்த்திக் கூடவே பிரியாவும் தங்கள் கேசுக்கு ஒரு முக்கிய ஆதாரம் கிடைத்திருந்த மகிழ்ச்சியுடனும் சாட்டில் ........... அன்று ஏற்படும் குண்டு வெடிப்பை எவ்வாறு தடுப்பது என்ற தீவிரவாத



சிந்தனையுடனும் இருந்தனர். அரவிந் முதலில் வாய் திறந்து அறையில் நிலவிய மௌனத்தை உடைத்தான்.

## மாயவன்

எஸ்.ஐ.சேர் இனி அடுத்தது எந் தக் காயை எவ்வாறு நகர்த்துவது என்று யோசிப்போம். திட்டமிட்டபடி நீங்கள் நிரஞ்சினியின் லவ்வறாக நடித்து அனைத்துத் தகவல்களையும் கறந்து விட்டீர்கள். இனி இங்கிருந்து யார் யார் தீவிரவாதிகளுக்குத் தகவல் கொடுக்கிறார்கள் என்பதைச் சுலபமாக அறியலாம். நீங்கள் நிரஞ்சினியை அரஸ்ட் பண்ண நடவடிக்கை எடுங்கள்.

''அரவிந் சேர் நிரஞ்சினியை இப் போது அரஸ்ட் பண்ண வேண்டாம்'' என்று நினைக்கிறேன் என்றாள் பிரியா.

''பிரியா மேடம் ரீசன் என்ன வென்று அறியலாமா'' என்றான் அரவிந். நிரஞ்சினியை இப்போது அரஸ்ட் பண்ணினால் தீவிரவாதிகள் அலேட் ஆகி விடுவார்கள். அத்துடன் அவர்களின் அடுத்த அடுத்த நடவடிக்கைகள் என்வென்று அறிய ஆளில்லாமல் போய்விடும். ஆகவே அவளை வெளியில் உலாவவிட்டால் தான் காரியத்தை ஈசியாக்க முடியும். காரத்திக் சேர் நிரஞ்சினியைத் தொடர்ந்து லவ் பண்ணுவதாக அக் பண்ணட்டும் என்ற வார்த்தையைச் சிறிது அழுத்திச் சொல்லியபடி அர்ஜீனைப் பார்வையால் பார்த்தாள்.

''எஸ் நல்ல ஐடியா பிரியா மேடம் நான் உங்களைச் சாதாரண பெண் ஆக நினைத்து இந்தக் கேசில் இடம் கொடுக்க முதலில் சிறிது யோசித்தேன். ஆனால் அர்ஜுன் ஒருவருக்கு சிபார்சு பண்ணுவான் என்றால் அந்நபர் சாதாரண நபராக இருக்க முடியாது என்று நினைத்து ஓகே பண்ணினான். ஆனால் இப்போது தான் நீங்கள் எப்படிப்பட்ட பிரிலியன்ற் என்று கண்டு கொண்டேன்.''

''அதிகமாகப் புகழாதீங்க சேர் இந்தச் சிறிய ஐடியாவுக்கே இப்படி குதிக்கிறீர்கள் என்றாள். அடுத்து அடுத்த நடவடிக்கைகளில் இந்தப் பிரியா யார் என்று காட்டுகிறேன்'' என்று ரீசேட்டின் கொலரை ஸ்ரைலாக எடுத்து விட்டாள்.

ஏய் நிறுத்தடி நீ பெரிய காரியம் தானே சாதித்து விட்டாய். சிறிது நேரம் விட்டால் ஏதோ உன்னை விடப் பெரிய ஆள் ஒருவரும் இல்லை என்று தருவாய் போல் தெரிகிறது. ஐடியா என்று சொல்லி விட்டால் சொன்னபின் பேசாமல் வாயை மூடிக்கொண்டு இரடி.

''சொறி அக்கா நான் சின்னப் பெண் இல்லையா நீங்கள் தானே சொல்லித் தரவேண்டும்''

''ஆமாம் நீ சின்னப் பெண் தான். சின்னப்பெண் ஒருத்தி தனியி இரு ஆண்களை அதுவும் தீவிரவாதிகளைப் பந்தாடினாள். அரவிந் சேர் விட்ட தவறைச் சுட்டிக் காட்டினாள். இதுவெல்லாம் சின்னப்பெண் செய்யும் வேலையா?

இதுவரை பேசாமல் இருந்த அரஜுன் வாய் திறந்தான்.

''நாம் இங்கு கூடியிருக்கும் நோக்கம் வேறு என்று நினைக்கிறேன்'' என்றான். இம்முறை இரு பெண்களும் சொறி என்றனர் ஒரே குரலில்.

உம் பரவாயில்லை. அடுத்த கட்டம் என்ன என்று கூறு அரவிந்.

அர்ஜுன், ரம்மியா, பிரியா, கார்த்திக் அனைவரும் கவனியுங்கள். நிரஞ்சினி வீட்டில் கிடைத்த பைலில் குறிப்பிட்டிருந்த முதலில் முக்கிய பேர்வழிகளை அரஸ்ட் பண்ண நடவடிக்கை எடுக்க வேண்டும். முதலில் முக்கிய மதுபான இறக்குமதி, ஏற்றுமதியாளரும் தீவிரவாதிகளின் தலைவன் அப்துல் ரகீமின் கையாட்களில் ஒருவருமான காளிமுத்துவை முதலில் அரஸ்ட்பண்ண நடவடிக்கை எடுப்போம்.

அர்ஜுன் நீ என்னுடன் கூட வா. கார்த்திக் சேர் நீங்கள்

## தொடர்கதை

முதலில் கான்ஸ்டபிளை எங்களுடன் அனுப்புங்கள். ரம்மியா நீ பின்னர் எனது மெசேஜ் கிடைத்தவுடன் உடனடியாக நான் குறிப்பிடும் இடத்திற்கு வந்து சேர் என்று கூறி பின்னர் கமிஸனர் தேவராஜ்ஜுற்கு போன் பண்ணி விஷயத்தைச் சொன்னான்.

* * *

## அங்கம் 15

கீழ்வானத்தில் யாரோ சுவிட்ச் போட்டபின் சிவப்பு பல்ப்பாய் சூரியன் இருள் திரையை கிழித்து உலகிற்கு ஒளியைப் பரப்பினான். இலங்கையின் முக்கிய மதுபான இறக்குமதியாளரும் விறியோகஸ்தருமான காளிமுத்துவின் பக்ரறி மும்முரமாக இயங்கிக் கொண்டிருந்தது.

பெரிய பரல்களில் மதுபானம் தயாராகிக் கொண்டிருந்தது ஒருபுறம். மற்றொருபுறம் போத்தல்களில் அடைக்கப்பட்டு கேஸ் கேஸாக லொறிகளில் ஆட்கள் மதுபானங்களை ஏற்றிக் கொண்டிருந்தனர். பக்ரரியின் வெளிப்புறம் இவ்வாறு நடந்து கொண்டிருக்க இன்னொருபுறம் சவரன், கோல்டன், கிரேப், குயின்,கெலால்டஸ், கொளிரால்,கோகன்டா, கோல்டன்ரகிஸ், பென்னிஸ், மெக் டோலால் வகை பிரண்டி கேஸ்களும் சவரன் பீட்டர் ஸ்காட்ப், பௌமோட் மெக்டோவல் பிரிமியா, பென்னிஸ் பைலட், பிளக்ரைட், கோல்டன் ஈகிள், கோல்டன்லுக் ஜானாக்ஸா, டெமக்ராட்ட வகை விஸ்கி கேஸ்கள் கல்யாணி கில்பிஷ்ஷர் 5000, சியுபிபீர் கோல்டன் ஈகிள், போன்ற பலவகை பீர்பாட்டில், றல்ட்மால் ஹொகுவிஸ், ட்ரிபின், எக்ஸ் வகைகளும் ஆயிரக்கணக்கான கேஸ்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு காத்திருந்தன.

காளிமுத்து தூய கதர் ஆடையில் தன் ஐம்பது வயதுடன் கட்டுத் தளராத உடலுடன் திணித்துக் கொண்டு கழுத்தில் விரல் மொத்தச் சங்கிலியும், விரல்களில் மோதிரங்களுடனும், மாருதிக் காரிலிருந்து இறங்கினார். நடையில் பணத் திமிரும் அலட்சியத் தன்மையும் இருந்தது.

''டேய் ராமு இங்கே வா,'' என்று சாராய போத்தல்களை ஏற்றிக் கொண்டிருந்தவர்களை மேற்பார்வை செய்து கொண்டு இருந்தவனை அழைத்தான். ராமு ஓடி வந்து என்ன வென்று சொல்லுங் கள் ஐய்யா என்று கை கட்டி வாய் பொத்தி நின்றான்.

'' தான் சொன்ன இடங்களுக்கு அனுப்ப சரக்கு ஏற்பாடு செய்து விட்டாயா?''

ஆமாம் ஐயா, நீங்கள் சொன்ன இடத்திற்குத் தான் இப்போது 3 லொறி சென்றுள்ளது. மீதி இப்போது புறப்படப் போகிறது.

''நல்லது. வரவேண்டிய பாக்கிகள் எல்லாம் வசூலித்து விட்டாயா?''

இல்லை ஐயா, இனித்தான் ஆட்களை அனுப்பப் போகிறேன்.

''ஏன்ரா இவ்வளவு நேரமும் என்னடா செய்கிறாய்? போடா போய் அதை முதலில் செய் என்று அவனை அனுப்பி விட்டு தன் அறைக்குள் நுழைந்தார்.''

காளிமுத்து அறையினுள் நுழையவும் ரெலிபோன் சிணுங்கவும் சரியாக இருந்தது. ''எவன்ரா அவன் விடிந்ததும் விடியாததுமாக'' என்று திட்டியபடி றீசீவரை எடுத்து காதில் பொருத்தியவர் மறு முனையில் கேட்ட குரலில் என்ன மந்திரம் இருந்ததோ தெரியவில்லை. பெட்டிப் பாம்பாக அடங்கி எஸ் பொஸ் நான் தான் காளி முத்து....


''ஓகே இன்னும் கிடைக்கவில்லை.''

எஸ் லொறி ஒப்பிரேசன் சக்சஸ்சாகும்.


மீதிப் பதினொரு பெயருக்கும் தகவல் கொடுத்தாகி விட்டதா?

ஓகே உடன் போகிறேன் என்று ரீசீவரை சாய்த்தி விட்டு தனது ஒவ்விஸ் மேசையை திறந்து அவசரமாக கவர்களை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறும் சமயம் மீண்டும் ரெலிபோன் அழைத்தது.

(தொடரும்)



# கம்பியூட்டர்க் கல்வி



## இன்ரநெற்



### இன்ரநெற்றில் வங்கிகளும் வணிகமும்

பண்டமாற்றுடன் ஆரம்பித்து வளர்ச்சியடைந்த வணிக உலகின் உயிர்நாடியாக இருப்பது பணம். எமது வாழ்வின் ஒவ்வொரு நகர்வும் இன்று பணத்தாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. இன்று பணமானது உலோக நாணயங்கள், அச்சடித்த காசுகள், பிளாஸ்ரிக் கார்ட்டுகள் (கிறெடிற் கார்ட், பாங்க் கார்ட்), காசோலைகள், மற்றும் எழுத்து வடிவிலான பத்திரங்கள் போன்ற பல்வேறு உருவங்களில் எம்மைச் சூழ்ந்திருக்கின்றது. இப்படியெல்லாம் உருவெடுத்திருக்கும் இந்தப் பணமானது, இன்ரநெற்றின் வருகையால் இ-காஷ் (E-Cash) வேர்ச்சுவல்மணி (Virtual Money) என உருவமே இல்லாத ஒன்றாக உருமாறிக் கொண்டிருக்கின்றது. பணம் மட்டுமல்ல, பணத்தைச் சேமித்து வைக்கும் வங்கிகள் கூட இன்று உருவமில்லாத வேர்ச்சுவல் இன்ரநெற் வங்கிகளாக மாறிக் கொண்டிருக்கின்றன.

வங்கிக்கு நேரடியாகச் சென்று நாம் செய்யும் அனைத்து வேலைகளையும் (உலோக, அல்லது அச்சடித்த பணத்தைப் பெறுவதைத் தவிர) இன்று வீட்டில் இருந்தபடியே, இன்ரநெற்றினூடாக இலகுவாகச் செய்யக் கூடியவாறு இன்றைய இன்ரநெற் தொழில் நுட்பமானது வளர்ச்சியடைந்துள்ளது. உதாரணமாக, எமது வங்கிக் கணக்கைப் பராமரிப்பது (Bank Account Maintenance) பில்களுக்குப் பணம் கட்டுவது (Bill Payments) கிறெடிற் கார்டுகளுக்கு பணம் கட்டுவது போன்றவற்றைக் கூறலாம். இப்படி இன்ர நெற்றினூடாக செய்யும் வங்கி தொடர்பான வேலைகளை ஒன்லைன் பாங்கிங் (Online Banking) என்று அழைப்பர். அநேகமான எல்லா வங்கிகளும் இன்று (Online Banking) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளன.

அப்படி அறிமுகப்படுத்தாத வங்கிகளெல்லாம் வெகு விரைவில் ஒன்லைன் பாங்கிங்கை அறிமுப்படுத்துவதற்காக பெருமளவு பணத்தை செலவு செய்து செய்து கொண்டு இருக்கின்றன. வங்கிகள் மட்டுமல்ல வியாபார நிறுவனங்கள் கூட இன்று இன்ரநெற்றினுடாக பொருட்களை விற்பனை செய்கின்றன. இப்படி இனரர்நெற்றினூடாக செய்யும் வியபாரத்தை இ-கொமேர்சஸ் (E-Commerce) என்று அழைப்பர். .இந்த (E-Commerce) ஆனது இன்று ஒன்று மிகப் பெரிய வியாபாரச் சந்தையாக உருவெடுத்துள்ளது. உலகில் எந்த மூலையில் இருக்கும் எவரும் உலகில் எல்லா நாடுகளிலும் உள்ள வர்த்தக ஸ்தாபனங்களிடமிருந்து பொருட்களை தமது வீட்டில் இருந்தபடியே கொள் முதல் செய்யலாம். உதாரணமாக, அமரிக்காவில் உள்ள ஆடைதைக்கும் ஒரு நிறுவனத்திடம், இலங்கையில் உள்ள ஒருவர் தனக்கு விரும்பிய ஆடையை தன் வீட்டுக் கம்பியூட்டரினுடாக ஓடர் செய்யலாம். இப்படி, இன்ரனெற்றினுடாக பொருட்கள் வாங்கும் போது, நாடுகளுக்கிடையிலான நாணயப் பெறுமதி வித்தியாசம் ஒரு பெரும் தடையாக இருக்கின்றது. அதற்காகத்தான் E-Cash அல்லது Virtual Money என்று பணத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளார்கள் . இந்த E-Cash இன் பெறுமதி உலகம் முழுவதுமே ஒன்றாகத்தான் இருக்கும் .E-Cash பாவிக்க விரும்பும் ஒவ்வொருவருவரும் தத்தமது பணத்தை E-Cashக்கு மாற்றிய பின் இன்ரநெற்றில் இலகுவாகப் பொருட்களை கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும்.


(தொடரும்)

# பரபரப்புக்களும் பிரதிபலிப்புக்களும்

## FIFA உலகக்கிண்ண உதைபந்தாட்டம் 2002

பல்லாயிரக்கணக்கான இரசிகர்களின் விண்முட்டும் ஆரவாரம், ஆட்டம் ஆரம்பித்து முப்பது நிமிடங்கள் முடிவடைந்து கொண்டிருந்த நேரம்; அந்த 19ம் இலக்க வீரர் எதிரணியின் பாதுகாப்பு வியூகங்களை ஊடறுத்து இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார். ஆடுகளத்தின் இடது எல்லையிலிருந்து [extreme] பந்து சீறிப் பாய்ந்து வருகிறது. அதைச் சரியாகச் சந்தித்து கோல்கம் பத்தினிடையே செலுத்தி உதைத்தவாறு விழுகிறார் அந்த வீரர். அந்தோ! கோல்காப்பாளரின் கைகளில் பட்டு மீண்டும் திரும்புகிறது பந்து; விழுந்து கிடந்தவாறே காலினால் எத்தித் தள்ளினார். பந்து கம்பங்களினூடு முன்னேறியது..... அடுத்த கணம் சியோல் அரங்கமென்ன, உதைபந்தாட்ட உலகமே ஒரு கணம் உறைந்து நின்றது.

ஆம்! பாபா பூ..பா டியோப் அடித்த அந்தக் கோலானது, உலகின் முதற்தர அணியும் நடப்புச் சாம்பியனுமான பிரோன்ஸ் அணியை உலகத் தரப்படுத்தலில் 67வது



இடத்தில் நிற்கும் செனகலிடம் மண் கவ்வ வைத்ததுடன் தொடர்ந்து நிகழவிருந்த பல ஆச்சரியங்களிற்கும் கால்கோளானது. நான்கு வருடங்களிற்கு முன்னர் பிரேஸிலிற்குப் ''பெப்பே'' காட்டிய பிரான்சு அணி, முதன் முறையாக உலகக் கிண்ண இறுதிச் சுற்றுப் போட்டிகளிற்குத் தெரிவான செனகலிடம் தோற்ற பொழுதே இம்முறை உலகக்கிண்ணத் தொடர் சூடுபிடிக்கப் போகின்றது என்பது துலாம்பரமாகியது.

எதிர்பார்த்ததைப் போல எழில்மிகு வைபவங்களுடனும் வண்ணம் நிறை வானவேடிக்கைகளுடனும் 17வது FIFA உலகக் கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகின. தென்கொரியாவின் சியோல் விளையாட்டரங்கத்தில் தென்கொரியத் தலைவர் கிம்டே ஜீங்கும் ஜப்பானியப் பிரதமர் கொய்சூமியும் தொடக்கி வைக்க, சுமார் 65 000 இரசிகர்களின் ஆரவாரிப்புடன், அகிலமே ஆவலுடன் எதிர்நோக்கிய திருவிழா தொடங்கியது. தீவிரவாத பயமுறுத்தலில் இருந்து டிக்கெற் மோசடி வரையாக எழுந்த சிக்கல்களுக்கு மத்தியிலும் ஆசியப் பிராந்தியத்தின் முதலாவது உலகக் கிண்ணக் காற்பந்தாட்டத் தொடர் உற்சாகத்துடன் ஆரம்பித்தது.

தற்போதைய வெற்றியாளர்கள் என்ற கோதாவில் களம் இறங்கியது பிரான்சு. அணியின் நம்பிக்கை நட்சத்திரமும் கடந்த உலகக்கிண்ண இறுதியாட்டதின் நாயகனுமாகிய ஸினடின் ஸிடானே பயிற்சி ஆட்டம் ஒன்றில் ஏற்பட்ட காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகியிருந்தார். ஸிடானே இல்லாத பிரான்சு அணி முரளிதரன் இல்லாத இலங்கையணி என்று இல்லாவிட்டாலும் ஷேர்ன் வோண் விளையாடாத ஆஸி அணி என்ற நிலைக்கு பொருந்தக் கூடியது. ஆனாலும் செனகல் அணியை பங்களாதேஷ் எனக் கருதிக் கொண்டு ஆடியது தான் பிரான்ஸ் செய்த பெரும் தவறாகும்.

மறுபுறம் ஆபிரிக்கா காற்பந்தாட்டப் போட்டிகளில் இரண்டாம் இடம்பெற்ற செனகல் அணியிடம் ஒரு வேகம் இருந்தது. அதனுடன் தொடர்ந்தாற் போல ஆட்டத்தின் போது பிரான்ஸ் காட்டிய அசிரத்தையும் சேர்ந்து செனகலின் வெற்றி வாய்ப்பை இரட்டிப்பாக்கியது. விளைவு சுமார் 10 வருடங்களுக்குப் பின்னர் இரு உலகக்

கிண்ணப் போட்டிகள் கடந்த நிலையில் நடப்புச் சம்பியனான அணியொன்று தனது முதலாவது போட்டியிலேயே பரிதாபமாகத் தோல்வியுற்றது.

விறுவிறுப்பு இல்லாமல் விளையாட்டு அமையலாமா? அவ்வகையில் ஆரம்பித்து விந்தைகளின் மத்தியில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன உலகக் கிண்ணப் போட்டிகள். எது எப்படியோ ரசிகர்களின் தேடலுக்குத் தீனி போடுவனவாக அமைந்து ஏற்பாட்டாளர்களின் வாயினில் சீனி போட்டால் அதுவே போதும்!

### இங்கேயும் எழுந்த மோகம்

பொதுவாகவே ஆசிய வலயத்தில் உதைபந்தாட்டம் பெருமளவில் ஆதரவு பெறுவதில்லை என்றாலும் போட்டி நடக்கும் தென்கொரியா, யப்பானில் மட்டும் இம்முறை ஆர்வப் பெருக்கீட்டுக்குஅளவேயில்லை. அப்படியென்றால் ஐரோப்பியமற்றும்தென்னமரிக்கா கண்டங்களில் கொண்டாட்டத்தின்உச்சம்பற்றிக்கூற வேதே வையில்லை. சரி. அதெல்லாம் பழக்கம் தானே என்று விட்டு நகர்ந்தோமானால் எம்முடைய நெருங்கிய புறச்சூழலே எம்மை வியப்படைய வைக்கின்றது.

உலகக்கிண்ணப் போட்டிகள் என்கின்ற போது எழுகின்ற அந்த ''ஜுரம்'' இம்முறை ''ஜன்னி'' ஆக்குமளவிற்கு அதிகரித்திருக்கின்றது என்பது அவதானிப்புக்களில் இருந்து அறிய வரும் உண்மையாகிறது. கடந்த முறை சம்பியன் எதுவெனக் கேட்டால், ''வேறெது? அமெரிக்காவாகத் தான் இருக்கும்'' என அலட்சியமாகக் கூறுபவர்கள் கூட பிறேசில் இறுதியாடடதத்திற்கு எத்தனை தடவைகள் தகுதி பெற்றது என்பதைத் துல்லியமாகத் தெரிந்துள்ளார்கள். சர்ச்சின், சனத்தைப் பற்றியே பேசிப் பழகிய வாய்கள் எல்லாம் ரிவால்டோ பற்றியும் பெக்ஹம் பற்றியும் முணுமுணுக்க ஆரம்பித்து விட்டனர். கொஞ்சம் மேம்பட்டு டொனால்டோ என்ற பெயரை முன்னரே அறிந்திருந்த சிலர், இன்று ரொபேர்ட்டோ கார்லோஸின் மேலங்கியின் இலக்கத்தையே கூறி விடுகிறார்கள்!

அவ்வளவு என்றாலும் பரவாயில்லை; தவறுதலாக மேற்சட்டையைப் பிடித்து இழுத்தால் போதும், ''பெனால்ட்டி'' ஆக என்ன தரட்டும்? எனக் கேட்டும் சிறுவர் கூட வாயடைக்க வைக்கிறார்கள். இப்படியே போகிற போக்கைப் பார்த்தால் ''ஆளவந்தான் கட்'', ''ரெட் கட்'', என்பது போல ''ரொனால்டோ கட்'' என்பதும் பிரபலமாகிவிடும் போல் தெரிகிறது. (மழைநீர் கூட பட்டுத் தெறித்து விடும்!) அந்தளவிற்கு காற்பந்தாட்ட மோகம் எமது பிரதேசத்தைக் கூட நன்கு பாதித்து விட்டது.

வேடிக்கையுடன் கூடிய வியப்பான விடயங்களாக இவை விளங்கினாலும் அத்துறை சார்ந்த விற்பன்னர்களின் கருத்துப்படி, இவ்விதமான அதீத ஆர்வம் ஆரோக்கியமான தொன்றெனவே எண்ணல் வேண்டும். இவ்வளவு தூரம் இம்முறை உலகக்கிண்ண உதைபந்தாட்டம் பிரபலம் பெறுவதற்கு (எமது பிரதேசங்களில் கூட) முக்கிய காரணம், அது முதல் முறையாக ஆசியப்பிராந்தியத்தில் இடம்

பெறுகின்றமையே எனத் துணிந்து கூறவியலும். அதிகரித்த தொலைத் தொடர்பு ஊடகங்களின் பரம்பலும் அதில் அனுசரணையாளர்களின் ஆதரவுடன் இத் தொடரிற்குக் கொடுக்கப்படும் செல்வாக்கும் தற்போது இங்கே நிலவும் சமதானச் சூழலும் சேர்ந்து எம்மிடையே இவ்வுலகக் கிண்ணத் தொடரை மேலும் நெருக்கமாக்கின என்பதும் மறுக்கப்படமுடியாததே.

அவ்வகையில் எங்குமே பரபரப்பை ஏற்படுத்தியவாறு நகரும் இச்சுற்றுப் போட்டியின் முதற் கட்ட ஆட்டங்கள் பெரும்பாலும் முடிவுறும் நிலையை அண்மித்துக் கொண்டிருக்கும் போது இக்கட்டுரை வரையப்படுவதால் அடுத்து சுற்று ஆட்டங்கள் பற்றிய தீர்க்கமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்து ஏலவே நிகழ்ந்த சில முக்கியமான எதிர்பாராத முடிவுகளுற்ற ஆட்டங்களை நோக்குவோம்.

### பழி தீர்த்த பெக்ஹம்

இம்முறை வகுக்கப்பட்ட 8 குழுக்களிலும் பிரிவு Fஇலேயே சவால்களும் போட்டிகளும் அதிகம் என அறியப்பட்டுள்ளது. முன்னாள் சம்பியன்கள் இங்கிலாந்து மற்றும் ஆர்ஜென்ரீனாவுடன் பலம் மிக்க நைஜீரியாவும், சுவீடனும் இக் குழுவிலேயே அடங்கியுள்ளன. அவற்றுள் ஆர்ஜென்ரீனாவும், இங்கிலாந்தும் மோதிய போதுதான் இங்கிலாந்து அணித் தலைவர் டேவிட் பெக்ஹம் தன் பழியைத் தீர்த்துக் கொண்டார். உண்மையில் பார்க்கப் போனால் அவர் ஓர் இரட்டைப் பழியை தீர்த்துக் கொண்டார் என்றே கூற வேண்டும்.

அது பற்றி மேலும் விபரமறிய நடந்து முடிந்த இரு உலகக் கோப்பை ஆட்டங்களிற்குச் செல்ல வேண்டும். ஆம், 1986 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிச் சுற்றுப் போட்டிகளின் கால் இறுதியாட்டம் உதைப்பந்தாட்ட உலகத்தால் ''Hand of god'' என இன்று வரை பிரலாபிக்கப்படும், சென்ற நூற்றாண்டின் தலை சிறந்த வீரர் என வாக்களிக்கப்பட்ட டியாகோ



மரடோனாவினால் தலைமையினால் இடிக்கப்பட்டது போல் நடிக்கப்பட்டு கைகளினால் பெறப்பட்ட அந்தக் கோல், அன்று ஆர்ஜென்ரீன அணியிடம் இங்கிலாந்தை மண் கவ்வ வைத்தது.

மற்றைய சம்பவம் 1998ஆம் ஆண்டு பிரான்சில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் அபாரமாக ஆடி அணியை முன்னிலையில் நிலை நிறுத்திக் கொண்டிருந்த போது எதிரணியான ஆர்ஜென்ரீன வீரர் ஒருவரிடம் முறைகேடாக, முரட்டுத்தனமாக ஆடினார் எனக் குற்றம் சாட்டப்பட்டு சிவப்பட்டை காட்டப்பட்டுக் களத்தை விட்டு வெளியேற்றப்பட்டார் பெக்ஹம். இங்கு எதிரணி வீரர் தான் பாதிக்கப்பட்டது போல் சற்று அதிகப்படியாகவே நடித்தார் என்பதும் எப்படியோ சமாளித்து ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இவ்விரு சம்பவங்களிற்கும் சேர்த்து வைத்ததாற் போல் கடந்த 7ம் திகதி ஆர்ஜென்ரீனாவிற்கு

எதிரான ஆட்டத்தில் கணக்கைத் தீர்த்துக் கொண்டார் பெக்ஹம். முதற்பாதி முடிவடையும் சந்தர்ப்பத்தில் கோல் போட நெருங்கிக் கொண்டிருந்த இங்கிலாந்தின் நட்சத்திர முன்னணி வீரர் மைக்கேல் ஓவன்சினைத் தடுத்து வீழ்த்தினார்கள் என்பதற்காக ஆர்ஜென்ரீனாவிற்கு எதிராகப் பெனால்ட்டி உதை வழங்கப்பட்டது. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பழைய சம்பவங்களின் பின்னணியில் பெக்ஹம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள 1-0 என்ற ரீதியில் இங்கிலாந்து அரிய வெற்றி பெற்றது.



### அமெரிக்கா கொடுத்த அடி

இம்முறை உலகக்கிண்ணப் போட்டிகளில் பிரான்ஸ் செனகலிடம் தோற்றது போல் அதிர்ச்சியூட்டிய மற்றொரு நிகழ்வு, உலகக் கிண்ணத்தை வெல்லும் வலுவுள்ள தேசங்களில் ஒன்றெனக் கருதப்பட்ட போர்த்துக்கல் அமெரிக்காவிடம் வாங்கிக் கட்டிக் கொண்டதுதான். ஒஸாமா பின்லேடனைப் பிடிக்கப் போகும் அமெரிக்காவின் Delta Force கொமாண்டோக்களிடம் கூட அந்த உற்சாகமும் வேகமும் இருக்குமோ என்னவோ? அந்தளவிற்கு ஆடினார்கள் அமெரிக்க வீரர்கள். FIFA நடாத்திய வாக்கெடுப்பில் உலகின் முதல் நிலை ஆட்டக்காரராக வெற்றியுற்ற லூயிஸ் ஃபிகோவும் சகாக்களும் முழிபிதுங்கி நிற்க, ஆட்டம் தொடங்கி ஏறத்தாழ அரை மணித்தியாலங்கள் ஆகுகையில் மின்னல் வேகத்தில் அமெரிக்க மூன்று கோல்கள் போட்டது. ஆட்டத்தின் பிற்பாதியில் அமெரிக்கா வீரரொருவர் அடித்த own goal உட்பட இரு கோல்கள் பெற்று தோல்வியுற்றது போர்த்துக்கல்.

Own goal என்றவுடன் அதுவும் அமெரிக்கா சம்பந்தப்பட்டது என்றவுடன் ஞாபகத்திற்கு வருவது 1994ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியொன்றில் நிகழ்ந்த அந்தத் துயரச் சம்பவம் தான். அமெரிக்காவிற்கெதிராகக் கொலம்பியா மோதிய அப்போட்டியில் கொலம்பிய வீரர் அன்ட்றெஸ் எஸ்கோபர் தவறுதலாகத் தமது கோல்கம்பத்தினுள்ளேயே செலுத்திய ஒரு கோல் மூலம் 2-1 என்ற ரீதியில் அமெரிக்கா ஜெயித்தது. விளைவு, கொலம்பியா விடுதியொன்றில் வைத்து பன்னிரு தடவைக்ள் பிஸ்டல் குண்டுகளால் சல்லடையாக்கப்பட்டுப் பிணமானார் அந்த வீரர். தாம் நிகழ்த்திய ''அச்சாதனைக்கு'' அந்த வெறியர்கள் கொடுத்த விளக்கம், அமெரிக்க அணியின் 12வது வீரராக எஸ்கோபர் விளையாடினார் என்பதாகும். விளையாட்டை ஒரு வெறியூட்டும் களியாட்டமாகக் கருதும் விந்தை மிக்கவர்களின் உளப்பாங்கிற்கு இது ஒரு தகுந்த உதாரணமாகும்.

### அதிர்ச்சியூட்டும் ஆசிய அணிகள்

ஆசியாவைப் பொறுத்தவரை முடிவுகள் எல்லாம் முரண்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. சற்றே வலுவான அனுபவம் மிக்க அணியாகக் கருதப்பட்ட சவுதிஅரேபியா ஜேர்மனியிடம் செமர்த்தியாக வாங்கத் தொடங்கியதில் இருந்து தொடர்ந்து கமரூன், அயலர்லாந்து அணிகளிடமும் உதைபட்டு முதற் சுற்றிலிருந்து வெளியேறிய முதல் அணியாகத் துவண்டது. இம்முறை முதற் தடவையாக உலகக்கிண்ண இறுதிச் சுற்றுக்குள் பிரவேசித்த சீனாவும் சிறுபிள்ளை போலவே மாட்டிக் கொண்டு முழிக்கின்றது. ஆனால் போட்டியை நடாத்தும் யப்பானும் தென்கொரியாவும் பிரபலம் மிக்க அணிகளிற்கே ''தண்ணீ'' காட்டியவாறு முன்னேறுகின்றன.

இந்திய மண்ணில் வைத்து இந்தியக் கிரிக்கெற் அணியை இன்றைய காலகட்ட ஆஸ்திரேலியாவாலேயே வெல்ல முடியாது போனது போல தம் தாய் நாட்டின் மடி மீது சொந்த தேசத்து ரசிகர்களின் ஏகோபித்த உற்சாக ஆரவாரத்தின் மத்தியில் அவ்விரு அணிகளும் அதிசயம் படைக்கின்றன. குழு Dயில் அங்கம் வகிக்கும் தென்கொரியா போலந்தை வெற்றி கொண்டு அமெரிக்காவைச் சமன் செய்துள்ளது. மறுபுறம் குழு H ஆட்டங்களில் பெல்ஜியத்துடன் சமப்படுத்திய யப்பான் அதிர்ச்சியூட்டும் வகையில் ரஷ்யாவைத் தோற்கடித்து ஜமாய்த்தது.

**க.சேந்தன்**

இவ்வாறு மிகுந்த விறுவிறுப்புடனும் சுவாரஸ்யத்துடனும் இம்முறை உலகக்கிண்ணப் போட்டிகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. போகின்ற போக்கைப் பார்த்தால் இதுவரை காலமும் இறுதிப் போட்டியை அண்மித்திராத ஏதாவதோர் அணியாவது இம்முறை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றாலும் அது ஆச்சரியப்படுவதற்கில்லை. எப்படியோ இக்கட்டுரை வாசிக்கப்பட்டிருக்கும் போது முதற் சுற்று ஆட்டங்கள் ஒருவாறு நிறைவுற்று இரண்டாம் சுற்றுப் போட்டிகள் களைகட்டத் தொடங்கியிருக்கும். அவ்வாறு இரண்டாம் சுற்றுக்குத் தெரிவான அணிகள் கடந்து வந்த பாதை பற்றியும் கிண்ணத்தைக் கைப்பற்ற இறுதிச் சுற்றுக்களில் இடம் பெறவிருக்கும் உக்கிரம் பற்றியும் வருகிற வாரம் க(உ)தைப்போம்!

### ஜோக்



*தெருத் தெருவா இப்படிப் பிச்சையெடுக்கிறது உனக்கு அவமானமா இல்லியா?*

*பின்னே... பிச்சையெடுக்கிறதுக்கு ஒரு ஆபீஸா திறக்க முடியும்!*

*க.ஜீவன்*

# சிறுவர் அரங்கம்



## சிந்தனைத் துளிகள்

உங்களுக்காகப் பொய் சொல்பவன் உங்களுக்கு எதிராகவும் பொய் சொல்வான்.

நீண்ட பயணம் யாதெனில் நீங்கள் உங்களைத் தேடிச் செல்வதாகும்.

உங்கள் கனவுகள் உண்மையாக வேண்டுமானால் நித்திரை கொள்ளாதீர்கள்.

கடந்து விட்ட அந்நாளின் அழகும் இனிமையும் இனித் திரும்ப வராது.

தைரியம் உள்ளவன் நம்பிக்கை கொண்டு இருக்கிறான்.

தாயின் அன்பு மட்டும் என்றுமே அமிர்தமாகக் காணப்படுகிறது.

த.உமா.

வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்த சிறுவர் பாடல் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

## நாளை உலகை ஆளவேண்டும்

இந்து சமுத்திர வெண்நிற முத்து
ஈழம் விதைக்கிற புது வித்து
நொந்து வருந்திட்ட திங்களும்
பத்து - நீங்கள்
வந்து பிறந்திட்ட எங்களின்
சொத்து.

அன்னை மதித்திடல் மிக நன்று
-அவள்
அன்பைப் பருகிய நகு கன்று
பண்பு வழியிலே தக நின்று
பாரில் சிறக்கவே பல வென்று

வேப்ப மரத்தடிப் புற்றில் - ஒரு
வேட்டு இருப்பதைக் கண்டு
வீம்பு கொண்டு அதைத் தட்டி
தேகம் இழந்திடல் நன்றோ?

புதுப் பாதை யிருப்பதைக் கண்டு
- பிஞ்சுப்
பாதம் பதித்தங்கு சென்று
காலை இழந்திடல் நன்றோ?
காலம் இனி வரும் என்றோ?

ஒற்றை வீட்டுக்குள் ஏது வேலி
பக்க நாட்டுக்கு இது கேலி
இன்னல் ஒழிந்திடல் எப்பவாம் தோழி
ஈழம் மலர்ந்திட்டால் அது வாழி!

கொன்று பிழிந்திட்ட இரத்தமும்
வேண்டாம்!
கொடுமை மலிந்திட்ட யுத்தமும்
வேண்டாம்!!
ஒற்றைக் கொடிமலர்ப் பூவினைப்
போலே
ஒற்றுமைப் பட்டே உலகினை
வெல்வோம்!

கதிர்ரமணன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## மயில்



க. தர்சிகன்
யா.
வே.சே.வை.து.ம.மகா
வித்தியாலயம்.

## யானை



வே.லக்ஷன்,
யா.தட்டாதெரு
மெ.மி.த.க. பாடசாலை.

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத்தயார் தானே?



## Proverbs
## பழமொழிகள்

Too much of any thing is good for nothing.
அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு.

Face is the index of the mind.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

Haste makes waste.
அவசரம் நட்டத்தைக் கொடுக்கும்.

Necessity is mother of invention.
அவசியம் தான் கண்டு பிடிப்பின் தாய்.

Necessity knows no law
ஆபத்திற்குப் பாவமில்லை.

கை. சுரேகா,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

அன்புச் சிறுவர்களே!
நீங்கள் சங்குநாதத்தின் சிறுவர் அரங்கத்திற்கு படங்களை வரைந்து அனுப்பும் போது தெளிவாக வரைந்து அனுப்புங்கள்.

ஆசிரியர்.

## நம்ப முடியாத உண்மைகள்

- கங்காருவின் குட்டி பிறந்தவுடன் ஓர் அங்குல உயரம்தான் இருக்கும்.
- நத்தையின் வேகம் மணிக்கு 23 அங்குலம். அதன் பற்கள் 135.
- உலகிலேயே முதல் வரியில்லாத நாடு வட கொரியா.
- பிரான்சில் 1756-06-30 அன்று 9வயதுச் சிறுமி ஒருத்தி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.
- 1793 ஆம் ஆண்டு பிரான்ஸில் ஒரு குழந்தை நெற்றிக் கண்ணுடன் பிறந்தது.

சா.யோஷிகா,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## விடையளிப்போம் வாருங்கள்

நீரிலே அதிக அளவில் கரையக் கூடிய வாயு எது?
அமோனியா $(NH_3)$
சூரிய மின்கலத்தில் உபயோகிக்கப்படும் முக்கிய மூலகம் எது?
சிலிக்கன் (Si)
ஒட்சிசனைக் கொண்டிராத ஒரேயொரு அமிலம் எது?
ஐதரோகுளோரிக்கமிலம் (HCL)
சிகரெட்டில் உள்ள புகையிலை வெப்பமடையும் போது உருவாகும் இரசாயனப் பொருள் எது?
பென்சோ பைறீன் (Benzo Pyrene)
எக்ஸ்றே (Xray) யைக் கண்டு பிடித்தவர் யார்?
ரோண்ட்ஜன்

தி.சிவதர்சினி,
பருத்தித்துறை.

## சென்றவாரக் கணிதப் புதிருக்கான விடைகள்.

போட்டியாளர்களுக்கு மந்திரி கூறிய உபாயம் அவரவர் குதிரை களை மற்றவர்களுக்கு மாற்றிக் குதிரைகளை வேகமாக ஓட்டி னால் கடைசியாக வருகிற குதிரைக்குப் பரிசு கிடைக்கும். ஆகவே அக் குதிரையின் சொந்தக்காரனே பரிசைப் பெற்றுக் கொள்வான்.

ஜெ.கிரிஷாலினா வசந்தராணி.

ஆந்தை தூங்கும் கல் என்ன கல்?
பகல்
மனிதனை மாட்டி விடும் கல் என்ன கல்?
சிக்கல்
கேலி செய்யும் கல் என்ன கல்?
நக்கல்
மனிதனுக்கு வரும் கல் என்ன கல்?
விக்கல்
இந்துசமயத்தவர் கொண்டாடும் கல் என்ன கல்?
பொங்கல்.

மு.சர்மிலா,
யா/ கரணவாய் வேதாரணியேஸ் வர வித்தியாலயம்.

## பேராசை பெருநட்டம்

ஓர் இடையன் தன் ஆட்டு மந்தையில் அதிக ஆடுகளைச் சேர்த்து விஸ்தரிக்க நினைத்தான்.

செலவே இல்லாமல் தன் மந்தையை விஸ்தரிக்க வேண்டும் என்பது அவனுடைய ஆசை. அதற்கு ஒரு தந்திரம் செய்தான்.

காட்டிலிருந்து ஒரு ஓநாய்க் குட்டியைத் தூக்கி வந்து வளர்த்தான்.

அந்த ஓநாயை அக்கம் பக்கத்திலிருப்போரின் மந்தைகளில் இரவில் புகுந்து ஆடுகளைத் திருடி வரக் கற்றுக் கொடுத்தான்.

ஓநாய் நடு இரவில் மற்றவர்களின் ஆட்டு மந்தைகளில் புகுந்து சில ஆடுகளைத் திருடிக் கொண்டு வந்து விடும்.

அந்த ஆடுகளில் ஒன்றை ஓநாய்க்கு உணவாக கொடுத்து விட்டு மற்ற ஆடுகளைத் தன்னுடைய மந்தையில் சேர்த்துக் கொள்வான் இடையன்.

தங்கள் மந்தைகளில் தொடர்ந்து ஆடுகள் திருட்டுப் போவதாகக் கண்ட மற்ற இடையர்கள் தங்கள் மந்தைகளின் கட்டுக்காவலை இரவில் அதிகப்படுத்தினர்.

அதனால் ஓநாயினால் தொடர்ந்து அதிக ஆடுகளைத்



திருடி வரமுடியாமல் போய் விட்டது.

அதனால் கோபமாக இடையன் ஓநாய்க்குச் சரியாக உணவளிப்பதே இல்லை.

ஒரு நாள் பொறுத்துப் பார்த்தது ஓநாய். இடையன் தொடர்ந்து வயிறார இரை கொடுக்காமல் போகவே அது இடையனது ஆடுகளையே நாள்தோறும் ஒவ்வொன்றாகத் தின்னத் தொடங்கியது.

கொஞ்ச நாட்கள் கழித்து தன் மந்தையின் ஆடுகளை எண்ணிப் பார்த்த இடையன் ஏராளமான ஆடுகள் குறைவதைக் கண்டான்.

ஒருநாள் இரவு மறைந்திருந்து கவனித்தான்.

தான் வளர்த்த ஓநாய் தனது ஆடுகளைத் திருடித் தின்பதைக் கண்டு பிடித்து விட்டான்.

ஒரு நாள் ஓநாயைக் கையும், களவுமாகப் பிடித்துக் கொண்டான்.

"உன்னை வளர்த்து ஆளாக்கி விட்ட என்னுடைய மந்தையிலே திருட ஆரம்பித்து விட்டாயா?" என்று இடையன் கோபமாகக் கேட்டான்.

"நீ கற்றுக் கொடுத்த திருட்டுத் தொழில் தொடர்ந்து செய்யாமலிருந்தால் அந்தத் தொழில் மறந்து விடுமே என்பதற்காகத்தான் உன் மந்தையிலேயே திருடினேன். தவிரவும் என்னை நீ வளர்த்திருந்தாலும் நான் உனக்குச் செய்த அளவற்ற நன்மைகளை மறந்து விட்டு என்னைப் பட்டினி போட்ட உனக்கு இதை விட வேறு தண்டனை கொடுக்க முடியாது" எனக் கூறியவாறு ஓநாய் காட்டுக்கு ஓடிப்போய் விட்டது.

இடையன் கொண்ட பேராசை அவனுக்கே பெரு நட்டத்தைத் தோற்றுவித்து விட்டது.

சிறுவர்களே! கதையைப் படித்தீர்களா? அதர்ம வழி என்றும், எல்லோரையும் அழிவு வழிக்கே இட்டுச் செல்லும். எப்போதும் நேர்மையுடன் செயற்படுங்கள். அது என்றும் உங்களை நல்ல வழியில் இட்டுச் செல்லும்.

தொகுப்பு : சுஜா

## இவரைத் தெரியுமா — பரிசுப் போட்டி இல:— 16

படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

தென்னிந்தியத் திரையுலகின் காதல் இளவரசன் இவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-



**‘இவரைத்தெரியுமா போட்டி இல:- 16’**

‘வலம்புரி’,
இல.15,வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**குறிப்பு:-**
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை ‘வலம்புரி’ காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல:— 16

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-..............................

அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

### இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 15 சரியான விடை





**நடிகை ரோஜா**

இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 15 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

**முதற்பரிசு:—** கு. கண்ணதாசன்,
வரியப்புலம்,
சுன்னாகம்.

**இரண்டாம்பரிசு:—** கு.தயாமினி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

**மூன்றாம்பரிசு:—** செ.றமேஷ்,
சரஸ்வதி வீதி,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

**சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**
*வெ.சுகந்தினி நீர்வேலி, சக்திதர்ஷினி உடுவில், வி.ஸ்ரீவிசாகன் நல்லூர், அ.வாசுதேவா சாவகச்சேரி, இ.சர்மிளா நீர்வேலி, வே.சாந்தினி கோப்பாய், பா.சௌரிபாலன் நல்லூர், சி.ஜெயவாணி வல்வெட்டித்துறை, வி.செல்வநாயகம் யாழ்ப்பாணம், அ.மீனலோசினி சாவகச்சேரி, சு.சாந்தகுமார் யாழ்ப்பாணம், ப.பங்கஜமலர் கோண்டாவில்.*

## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்


### தியானம்

தியானத்திற்கு உட்காரும் பொழுது நன்றாக நிமிர்ந்து கொண்டும் நமது தேகத்தைச் சரியான நிலையிலும் இருக்கிறதா எனக் கவனிக்க வேண்டும். நாம் தியானம் செய்யும் பொருள் 2அடிக்கு முன்னால் இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். இந்தத் தியானத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் மனதில் வேறொன்றையும் பற்றி நினைக்கக் கூடாது. கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்து இருக்கின்ற நிலையைப் பற்றி சிந்தனை செய். கண்களை மூடிக் கண்இமையின் மத்தியை நினைத்துக் கொண்டு சிந்தனைசெய்.

இப்பொழுது கண்களைத் திறந்து கண்களின் இமைகளை அசைக்காமல் எதைப் பற்றித் தியானம் செய்தாயோ அந்தப் பொருளைப் பார். எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் கண்களை நன்றாக விரித்துக் கொண்டு பார். கண்களிலிருந்து நீர் வரும் பொழுது அல்லது உனது கண்களுக்கு ஓய்வு வேண்டிய நிலை வந்த பொழுது மெதுவாகக் கண்களை மூடு. இதுதான் வெளிநிலைத் தியானமாகும்.

(தொடரும்....)



எஸ்.சசாங்கன்,
வயது - 17
பிரதான வீதி,
சங்கானை.
பத்திரிகை, கிரிக்கெற்.



ச.சுதன்
வயது - 18
52/3, காளிகோவிலடி,
கோண்டாவில்மேற்கு,
கோண்டாவில்.
கவிதை, பேனா நட்பு,
பத்திரிகை.



சி. கேதாரன்
வயது - 21
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி,
வழமையானவை




த.கிருபானந்
வயது- 18
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
பேனா நட்பு, கிரிக்கெற், புட்போல்



ஜோ. ஜெஸ்ரின்
வயது - 23
சென்மேரிஸ் 1ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.
கவிதை, பாடல்கேட்டல்.

## குறுக்கெழுத்துப் போட்டி

### இல. 17




*அனுப்ப வேண்டிய முகவரி*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 17**
**‘சங்குநாதம்’,**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

பெயர் :- ..............................
விலாசம் :- ..............................
..............................
..............................

............ ✂ இங்கே வெட்டுக............

### இடமிருந்து வலம்

(1) தமிழர் திருநாள் (4) ஆணவத்தைக் குறிக்கும் சொல் (5) தாலி இழந்தவள் சிதறி இருக்கிறாள் (7) விடுகதை (10) நாரதரின் வேலை (11) விக்கிரமாதித்தன் என்றாலே இது தான் நினைவுக்கு வரும்.

### மேலிருந்து கீழ்

(1) குளத்தின் மறு பெயர் (2) இது சீனி உற்பத்திக்குப் பயன்படும் (3) இரத்தம் (8) பெண்கள் நெற்றியில் இடுவது (9) முருகனை இப்படியும் அழைப்பார்கள்.

### வலமிருந்து இடம்

(3) சாப்பிடுவதன் மறு பெயர் (6) துப்பாக்கிக் குண்டு (10) உலர்ந்த மீன்

குறுக்கெழுத்துப்போட்டி இல.16 இன் விடைகள்
இடமிருந்து வலம்
1. வாய்க்கால் 6. குல்லா 7. பாரதம் 10. சமையல்

மேலிருந்து கீழ்
1. வாத்து 2. காகிதம் 3. புல்லாங்குழல்
4. கல்லூரி 5. நவரத்தினம் 6. குரல் 7. பார்
8. தராசு 9. ஆமை

**பரிசு பெற்றோர் பெயர் விபரம்**

**முதற் பரிசு** :~ யோ.ஜெயறோஸ்,
பெரிய புலம் வீதி,
நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

**இரண்டாம் பரிசு** :~ சா.சர்மிகா,
இல.30,கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.


**மூன்றாம் பரிசு** :~ S.கோகுலன்,
பல்கலைக்கழகம்,
விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணம்.

**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்.**

*ச.தேனுதயா யாழ்ப்பாணம், கு.பாலகிருஷ்ணா சுழிபுரம், உ.டிலக்ஷிகா யாழ்ப்பாணம், ந.றஞ்சிதா அன்னசத்திரலேன், ஜெ.மேனகா சாவகச்சேரி, ச.சசிகுமார் ஏழாலை, ப.சிவசூரியா சங்கானை, க.ஜீவகன் மானிப்பாய், பா.செல்வராணி சங்கானை.*


**குறிப்பு:~**
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “குறுக்கெழுத்துப் போட்டி இல.17” எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 22-06-2002. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை ‘வலம்புரி’ காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |



## ராஜா படத்துக்காக ஊட்டியில் பிரமாண்டமான சண்டைக்காட்சி படமாக்கப்பட்டது

பிரசாந்த் கதாநாயகனாக நடித்து வெற் றிபெற் ற "ஹலோ", "பார்த்தேன் ரசித்தேன் " ஆகிய படங்களைட் தயாரித்து வெளியிட்ட 'ஷெரீன் மூவி மேக்கர்ஸ்' பட நிறுவனம் அடுத்து தயாரிக்கும் படம் ராஜா. முதலாவதாக, அஜீத்தை வைத்து "பூவெல்லாம் உன் வாசம்" என் ற வெற் றிப்படத்தை இயக்கிய எஸ். எழிலை அழைத்து "ராஜா" படத்தை இயக்கும் வாய்ப்பை ஷெரீன் மூவி மேக்கர்ஸ் நிறுவனம் கொடுத்திருக்கிறது. படப்பிடிப்பு கிட்டத்தட்ட முடிவடையும் நிலையில் இருப்பதால், அடுத்த மாத இறுதியில் இப்படம் திரைக்கு வருமென் று சொல்கிறார் தயாரிப்பாளர் எஸ். திருவேங்கடம்.பலகோடி ரூபாய் செலவில் மிகப் பிரம்மாண்டமான முறையில் உருவாகும் "ராஜா" படத்தின் கதாநாயகனாக அஜீத் நடிக்கிறார். கதாநாயகிகளாக ஜோதிகா, 'ராஜ்ஜியம்' படத்தில் அறிமுகமான பிரியங்கா திரிவேதி நடிக்கின் றனர். 'வாலி', 'முகவரி', 'பூவெல்லாம் உன் வாசம்' ஆகிய படங்களுக்குப் பிறகு அஜீத், ஜோதிகா ஜோடி சேர்ந்து நடிக்கும் படம் இது.முக்கிய கதாபாத்திரங்களில் வடிவேலு, ராதாரவி, ஜோதி, நளினி, மதன் பாப், எம்.எல்.ஏ. தங்கராஜ், வரலட்சுமி, வையாபுரி, சோனு, பெசன் ட் ரவி, தேவன் , மயில்சாமி, "பசி" சட்யா, தேனி குஞ்சரம்மாள், லட்சுமணன் , கிருஷ்ணமூர்த்தி உள்பட பலர் நடிக்கின் றனர். மிக முக்கிய கதாபாத்திரத்தில் லிவிங்ஸ்டன் மந்த்ரா நடிக்கின் றனர்.இயல்பாகவே கிளுகிளுப்புக்குப் புகழ்பெற் ற கதாநாயகி மந்த்ரா, இப்படத்தில் செம கிளுகிளுப்பாக ஒரு கவர்ச்சி டான்ஸ் ஆடியிருக்கிறார்.இந்தப் படத்துக் காக ஊட்டியிலுள்ள மலைப் பாதை ரெயிலை நான்கு நாட்களுக்கு மொத் தமாக வாடகைக்கு எடுத்தனர். அந்த ரெயிலில் அஜீத், வில்லன் சோனு மற்றும் நாற்பது சண்டைக் கலைஞர் கள் சேர்ந்து அதிரடியாக மோதிய பரபரப்பான ஒரு சண்டைக் காட்சி மயிர்க்கூச்செறியும் வகையில் பட மாக்கப்பட்டது. மேட்டுப் பாளையத் தில் இருந்து ஊட்டி வரை செல்லும் ரெயிலில் இந்த சண்டைக்காட்சி படமாக்கப்பட்டது. கனல் கண்ணன் அதிரடி சண்டைப்பயிற்சி அளித் தார்.அரவிந்த் ஒளிப்பதிவு செய்ய,



எஸ்.ஏ. ராஜ்குமார் இசை அமைக் கிறார். படத்தின் கதைக்குப் பொருத் தமான வகையில் ஒவ் வொரு பாடலையும் உருவாக்கிய எஸ்.ஏ. ராஜ்குமார், படத்தின் பின்னணி இசை அமைப்பிலும் சில புதுமைகள் செய்ய திட்டமிட்டுள்ளார்.பல வெற் றிப் படங்களுக்கு வசனம் எழுதியுள்ளவரும் – தற் போது வசனம் எழுதுவதில் முன் னணி இடத்தில் இருப்பவருமான என் . பிரசன் னகுமார், "ராஜா" படத்துக்கு தெளிந்த நீரோடையைப் போல வசனம் எழுதியிருக்கிறார்.கதை, திரைக்கதை எழுதி எஸ். எழில் இயக்குகிறார். ஏற் கனவே இவர் விஜய் நடித்த "துள்ளாத மனமும் துள்ளும்", சரத்குமார் – பிரபுதேவா நடிட்த 'பெண்ணின் மனதைத் தொட்டு' அஜீட் நடித்த "பூவெல்லாம் உன் வாசம்" ஆகிய படங்களை இயக்கியுள்ளார்.முழுக்க முழுக்க அதிரடி ஆக்ஷன் படமாகவும், நகைச்சுவை மற் றும் குடும்ப சென் டிமெண்ட் கலந்த படமாகவும் "ராஜா" உருவாக்கப்பட்டு வருகிறது. இதுவரை ஆக்ஷன் ஹீரோவாகவும், இளமை துள்ளும் காதல் நாயகனாகவும் பலபடங்களில் நடித்திருந்த அஜீத் முதன் முறையாக இந்தப் படத்தில் காமெடி கதாநாயகனாக தன் இயல்பான நடிப்பில் ஒரு கலக்கு கலக்கி இருக்கிறார்

## பாபாவுக்கு விட்டுக் கொடுத்த இயக்குநர்



"பாபா" பட பாடல் காட்சியில் மனிஷா கொய்ராலாவுடன் இணைந்து நடிப்பதற் காக, வழக்கமான ஒரு தோற்றத்திலும், அடர்ந்த தாடி வைத்து ஒரு தோற் றத்திலும், ஆன் மீகவாதியாக மற்றொரு தோற் றத்திலும் ரஜினி தோன் றி நடிக்கும் படம் "பாபா". இதில் ரஜினி காதலியாக மனிஷா கொய்ராலா நடிக் கிறார். இந்தப் படத் தின் முக்கிய வசன காட்சிகள் – பாடல் காட்சிகள் சென்னை, மைசூர் மற்றும் சுவித்சர் லாந்து நாட்டில் படமானது. சுவித்சர் லாந்தில் படமான ஒரு காதல் பாடல் காட்சியில ரஜினியுடன் மனிஷா ஆடிபபாடி நடிததார். இந்தப் பாடலுக்கு பிரபுதேவா நடனப் பயிற்சி அளித்தார்.பிரசாத் ஸ்டுடியோவில் காளிகாம்பாள் கோவிலின் உட்புற அரங்கு 30 லட்ச ரூபாய் செலவில் தற் போது அமைக்கப்பட்டு வருகிறது. ஆர்ட் டைரக்டர் ஜி.கே. உருவாக்கும் இந்த அரங்கின் பணி முழுமை அடைந்தவுடன் முழு படப்பிடிப்பு முடிந்து, ஆகஸ்டு 15 ம் தேதி உலகம் முழுவதும் "பாபா" படம் திரையிட திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் அது தள்ளிப் போகும் என்கிறது பாபா யூனிட் ரகசிய தகவல். காரணம் ? மனிஷாவின் போர்ஷன் நிறைய பாக்கியிருக்காம். அம்மணியிடம் தேதி இல்லை! தற்போது "பாபா" படத்தின் டப்பிங் மற் றும் எடிட்டிங் பணியில் முழுமையாக ஈடுபட்டுள்ளார் இயக்குனர் சுரேஷ் கிருஷ்ணா. ஏ.வி.எம். ஸ்டுடியோ கார்டன் டப்பிங் தியேட்டரில் என் .லிங்குசாமி இயக்கிய "ரன்" படத்தின் டப்பிங் பணி நடந்தது. அப்போது விசேஷ அனுமதிபெற் று, "பாபா" படக் காட்சிகளை திரையில் ஓடவிட்டு, மூன்று மணி நேரம் இடைவி டாமல் டப்பிங் பேசி அசத்தினார் ரஜினி. அவசர அவசரமாக டப்பிங் பேசி முடித்து விட்டு, சரியான நேரத்துக்கு அவர் ஐதராபாட் கிளம்பினார். ராமோஜி ராவ் பிலிம் சிட்டியில் "பாபா" படத்தின் பாடல் காட்சி ஒன்று படமாக்கப்படுகிறது. நடிகரும், டான்ஸ் மாஸ்டருமான லாரன்ஸ் நடனப் பயிற்சி அளிக்கிறார்.வாலி இயற்றிய இந்த பாடலுக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைத்துள்ளார். ரஜினி பாட்டுப்பாடி ஆடுகிறார். பின்னணி இசைக்கு மட்டும் மனிஷா ஆடுகிறார். அவர்கள் இருவரும் பலவித வண்ண உடைகளில் தோன்றுகின்றனர். இதற்காக பல லட்ச ரூபாய் செலவில் நவீன டிசைன் உடைகள் ஐதராபாத் நகர் கொண்டு செல்லப்பட்டு உள்ளது. சென் னை திரும்பும் ரஜினி, பிரசாத் ஸ்டுடியோவில் நடக்கும் இறுதிக்கட்ட படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார். தற்போது ரஜினியுடன் மனிஷா சேர்ந்து "போஸ்" கொடுத் துள்ள போட்டோக்கள் விசேஷமாக எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் போட்டோக் கள் அனைத்தையும் இந்த வார இறுதியில் சென்னையில் நடக்கும் பத்திரிக்கை யாளர் சந்திப்பின் போது வழங்க ரஜினி திட்ட மிட்டுள்ளார்.

## அக்கா தங்கையாக இரட்டை வேடங்களில் ஜோதிகா


கன் னடத் தில் தயாராகும் ஒரு படம், தமிழில் மொழி மாற் றம் செய்யப்படுகிறது. இதில் ஜோதிகா அக்கா – தங்கையாக, இரட்டை வேடங்களில் நடிக்கிறார். கதாநாயகனாக உபேந்திரா நடிக்கிறார். காவிரி பிரச்சினையைக் கிளப்பி தியேட்டரில் கல்லெறிய வைத்த பார்ட்டி இவர்.இது, இந் தியில் பரபரப்பை ஏற் படுத்திய 'பாஸிகர்' என்ற படத்தின் தழு வல்.தனது தந்தையை வியா பாரத் தில் ஏமாற்றி நலிவ டைய செய்த வரை, கதா நாயகன் பழி வாங் கும் கதை. ஏமாற்றியவ ரின் மூத் த மகளை காத லிப்பது போல் நடித் து,



அவளை மலையில் இருந்து தள்ளி கொலை செய்கிறான் .அடுத்து அவளுடைய தங்கைக்கு வலை விரிக்கிறான் . அவ ளும் அவனு டைய வலையில் சிக்கினாளா, இல்லையா என்பதே கதை. இந்தியில் ஷாருக்கான் கதாநாயகனாகவும், ஷில்பா ஷெட்டி – கஜோல் ஆகிய இருவரும் அக்கா – தங்கையா கவும் நடித் து இருந்தார்கள்.கன்னட படத்தில், அக்கா – தங்கை ஆகிய இரண்டு வேடங்களிலும் ஜோதிகா நடிக்கிறார்.இந்த படத் தை ராக்லைன் வெங்கடேஷ் தயாரிக்கிறார். வழக்கமா ஒரு 'லார்ச்' அடிக்கிற பார்ட்டிக ளுக்கு கேட்காமலேயே எக்ஸ் ட்ரா 'லார்ச்' ஊத்தி விட்ட மாதிரி ஜோதிகா செமகலக் கலாம்!

## சத்யராஜ் – பிரேம் இணைந்து நடிக்கும் படம் இரட்டை இலை

எம்.ஜி.ஆர். நடித்த இதயக்கனி, சிவாஜி நடித்த "வெள்ளை ரோஜா", ரஜினி நடித்த "மூன்று முகம்", "தங்க மகன் ", கமல்ஹாசன் நடித்த "காதல் பரிசு", விஜயகாந்த் நடித்த "நாளை உனது நாள்", ராமராஜன் நடித்த "மில் தொழிலாளி" உள்பட பல வெற் றிப் படங்களை இயக்கிய ஏ.ஜெகன் னாதன் , தற் போது நீண்ட இடைவெளிக்குப் பிறகு இயக்கும்



படம் "இரட்டை இலை". இதில் சத்யராஜ் – பிரேம் இணைந்து இரு கதாநாயகர்களாக நடிக்கின் றனர். கதாநாயகியாக மீனா. சங்கவி, மும்தாஜ் நடிக்கின் றனர். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நாகேஷ் – மனோரமா இருவரும் ஜோடியாக நடிக்கின் றனர். முக்கிய கதாபாட்திரங்களில் விஜயகுமார், சுஜாதா, மணிவண்ணன் , அலெக்ஸ், சின்னி ஜெயந்த், மனோ, "ஒ போடு" ராணி, சங்கவி, வி.கே.ராமசாமி நடிக்கின்ற னர்.விருதை சினி ஆர்ட்ஸ் சார்பில் விஷ்ணுப் பிரியன் கதை, திரைக்கதை எழுதி தயாரிக்கி றார். வி.பிரபாகர் வசனம் எழுதுகிறார். சி.பவன் ராமதாஸ் ஒளிப்பதிவு செய்ய, வி.ஜெய்சங்கர் எடிட்டிங் கவனிக்கிறார். மோகன் – ராஜேந் திரன் அரங்கம் அமைக்கின் றனர். பரத்வாஜ் இசை அமைப்பில் பழனிபாரதி, பா.விஜய், ஆர்.ரவிஷங் கர், பிறைசூடன் , சிதம்பர்நாதன் பாடல்கள் எழுதுகின்றனர்.ஜனரஞ் சக கதையம்சம் கொண்டு உருவாக்கப்படும் "இரட்டை இலை" படத்தின் பாடல் காட்சிகள் முழுவதும் கனடா, மெக்ஸிகோ, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளில் படமாகிறது. எல்லாம் சரிதான் இப்படி தலைப்பு வெச்சால் பிரச்சாரப்படம்னு நினைக்க மாட்டாங்களா ?!









இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் ? ள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது